ரோமருக்கு எழுதின நிருபம்
வசனம் வசனமாக
(பாகம் 2)

ரோமர் 5 – 8

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு
கீழ்ப்பாக்கம்
சென்னை – 600 010

The Book of Romans (Ch. 5-8)
Booklet - 30
Tamil

© IBL 2003

Cover Credit : Cynthia Kingston
Printed by :

For additional booklets write to:
India Bible Literature,
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

Ph: 26425166 Fax: 26428298
E-mail: ibl.maa@iblchennai.org

அத்தியாயம் ஒன்று

''உத்தமமாக வாழுதல்''—ஒரு முன்னுரை

பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தின் வேதபாடத்தை வானொலி வாயிலாகக் கேட்டுப் பயனடைந்து வருகிற நேயர்களுக்காக வெளியிடப் படுகின்ற நான்கு தொடர் வேதபாட நூல்களில் இது இரண்டாவது நூலாகும். இந்தத் தொடர் நூல்களில் முதலாவது நூலை நீங்கள் பெறாமலிருந்தால் எங்களிடத்தில் எழுதிக் கேட்டு அதையும் பெற்றுப் பயனடையும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறோம். ரோமர் நிருபத் திலுள்ள பாடங்களை நீங்கள் கற்றுக்கொள்ளவும், பிறருக்குப் போதிக்க வும் அது உங்களுக்குப் பெரிதும் உதவும். இந்தத் தொடர் வானொலி நிகழ்ச்சிகளின் மூலமாக, பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தை ஒவ்வொரு வசனமாக நான் போதித்த போதிலும் எனது முதலாவது நூலில் முதல் நான்கு அதிகாரங்களை மட்டுமே தொகுத்து எழுதி யிருக்கிறேன். இந்த இரண்டாவது நூலில் அடுத்த அதிகாரங்களில் (5–8) பவுலடியாரின் கருத்தாழமிக்க இறையியல் சத்தியங்களைத் தொகுத்து வழங்குகிறேன்.

இந்த நிருபத்தின் முதல் நான்கு அதிகாரங்களில், பாவியான ஒரு மனிதனோடு நீதிமானாக்கப்படுதலைச் சம்பந்தப்படுத்திப் பவுல் பேசுகிறார். நாம் யாவரும் பாவிகளே என அவர் இறுதியாகக் கூறுகிறார். ஆனால் இயேசுகிறிஸ்து நமக்காகச் செய்து முடித்த கிரியைகளை விசுவாசிக்கிற ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான் அல்லது அவன் நீதிமான் என்று தேவனால் பிரகடனப்படுத்தப்படுகிறான் என்ற நற்செய்தி யையும் பவுல் தொடர்ந்து கூறுகிறார். அவரது நான்கு அதிகாரங்களின் இறுதியான வார்த்தை ஐந்தாம் அதிகாரத்தின் முதல் வசனத்தில் காணப் படுகிறது: ''*இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.*''

இயேசுகிறிஸ்து தங்களுக்காகச் சிலுவையில் நிறைவேற்றி முடித்த கிரியையில் விசுவாசம் வைத்ததினால் ''நீதிமான்கள்'' என்று அறிவிக்கப்

பட்டவர்களோடு நீதிமானாக்கப்படுதலைச் சம்பந்தப்படுத்தி இந்த நான்கு அதிகாரங்களிலும் பவுல் எழுதுகிறார். நீதிமான்கள் என்று தேவனால் அறிவிக்கப்பட்ட பாவிகள், இனிமேலும் பாவிகளாக வாழ வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்கள் இனி உத்தமர்களாக வாழ வேண்டும். நாம் அதை எவ்வாறு செய்யக்கூடும்? இயேசுகிறிஸ்துவை நமது இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொண்டபோது நமது பாவத் தன்மை நம்மைவிட்டு அகன்றுபோனதா? ஒரு நீதியான வாழ்க்கை அல்லது ஒரு உத்தம வாழ்க்கை வாழத் தேவையான ஆற்றலை நாம் எங்கிருந்து பெற்றுக்கொள்ள முடியும்?

பவுல் தனது அடுத்த நான்கு அதிகாரங்களில் அக்கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார். ஐந்தாம் அதிகாரம் இரண்டாம் வசனத்தில் அவர் தனது பதிலைப் பின்வருமாறு ஆரம்பிக்கிறார்: ''*அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கை யினாலே மேன்மைபாராட்டுகிறோம்.*'' இயேசுகிறிஸ்துவின் மூலமாய் விசுவாசத்தைக் கொண்டு நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து வோடு, கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்குக் கிருபை நமக்குச் சிலாக்கியம் அளிக்கிறது. அக்கிருபையைப் பெற்றுக்கொள்ள நாம் கற்றுக்கொள்ளும்போது, பாவம் நிறைந்த இவ்வுலகில் பாவத்திற்கு அடிமைகளாகாதபடிக்கு தேவனை மகிமைப்படுத்துகிற ஒரு வாழ்க்கையை நம்மால் வாழ முடியும்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம், அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் என்னும் இரண்டு முக்கிய சத்தியங்கள் அடங்கியது என்று நமது முதலாவது நூலில் ஆழ்ந்து படித்து அறிந்திருக்கிறோம். விசுவாசத்தினால் சுவிசேஷத்தின் முதலாம் சத்தியத்தில் நாம் நீதிமான் களாக்கப்பட்டு தேவனோடுகூடச் சமாதானம் பெறுகிற நிலைக்கு ஒப்புர வாக்கப்பட்டோம். கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத் தினால் பெறுகிறோம் என்று பவுல் எழுதும்போது, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்னும் சுவிசேஷத்தின் இரண்டாவது சத்தியத்தில் நமது விசுவாசத்தை வைக்கும்படி பவுல் நம்மை வழிநடத்துகிறார்.

பவுல் இங்கு ''கிருபை'' என்று குறிப்பிடுகிற பதமானது ''காரிஸ்'' (Charis) என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டதாகும். நாம் பெறுகிறதற்குத் தகுதியற்ற ஆசீர்வாதமும் தேவ தயவும் மட்டுமல்ல கிருபை, அது நம்மால் சம்பாதிக்கக் கூடாததாக அல்லது சாதிக்க முடியாததாக இருக்கிறது. நம்மிலும் நம் மூலமாகவும் கிரியை செய்கிற தேவனுடைய பெலனாகவும் அவருடைய ஜீவனாகவும் கிருபை இருக்கிறது. நம்மிலும் நம் மூலமாகவும் கிரியை செய்கிற கிருபையை கிரேக்க வார்த்தை ''கேரிஸ்மா'' (Charisma) என்று கூறுகிறது.

ஆச்சரியமான கிருபை

கிருபையைக் குறித்துப் பவுல் அப்போஸ்தலன் எழுதுகிற மற்றொரு அற்புதமான வசனம் பின்வருமாறு கூறுகிறது: ''*மேலும் நீங்கள் எல்லா வற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவரா யிருக்கிறார்*'' (2 கொரி. 9:8). தேவன் தமது மக்களுக்காகக் கிருபையைக் குறித்து வலியுறுத்தி எழுதி வைத்திருக்கும் மிக அற்புதமான வசனங்களில் இதுவே மிகவும் பிரதானமானதாகும்.

பவுலின் கூற்றின்படி, நீங்கள் எல்லாவற்றிலும் (ஏதாவதொன்றில் அல்ல), எப்பொழுதும் (எப்போதாவது ஒருமுறை அல்ல), சம்பூரண முடையவர்களாயும் (அற்பமான ஆசீர்வாதம் அல்ல), சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்கும்படிக்கு (ஒருசில நற்கிரியைகளில் மாத்திரம் அல்ல) தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் (சிறிதளவு கிருபை அல்ல) பெருகச் செய்ய வல்லவரா யிருக்கிறார்.

சுருங்கக் கூறினால், சகலவித கிருபையையும், குறைவின்றித் தாராளமாக, எப்பொழுதும், உங்கள் எல்லாருக்கும், (உங்கள் ஒவ்வொருவருக்கும் என்று நான் கூறுகிறேன்) சம்பூரணமாக, எப்பொழுதும் எல்லாவற்றிலேயும் அருளிச்செய்து உங்களிலும் உங்கள் மூலமாகவும் செய்ய தேவன் விரும்புகிறார்! அதிசயமான தேவனு டைய கிருபையைக் குறித்துப் பவுல் விவரித்துக் கூறுகிற இந்த வசனத்திலுள்ள சத்தியத்தை விசுவாசித்து அனுபவித்தபடியினால் புதிய ஏற்பாட்டுத் திருச்சபை உலகத்தைத் தலைகீழாக மாற்றியது.

இந்தக் கிருபையை விசுவாசிகள் இன்றைக்கும் பெறக் கூடுமா?

ஒரு சிறந்த வேதபோதகராகிய பண்டிதர் டி. டபிள்யூ. டோசர் என்பவர் ஒருவிசை இவ்வாறு கூறினார்: ''உங்களுடைய புதிய ஏற்பாட்டை வாசித்துவிட்டு இன்றைய திருச்சபைகளை நீங்கள் நோக்கிப் பார்த்தால், தேவன் ஏதோ ஒரு தவறான காரியத்தை அதில் கூறியிருப் பதைப் போன்ற எண்ணம்தான் உங்களுக்கு உண்டாகும்.'' நான் மேற்கூறிய வசனத்தில் பவுல் எல்லாவித நன்மைகளையும் கிருபை களையும் குறித்து விவரிக்க, மிக உயர்ந்த உரிச்சொற்களைப் (superlative) பயன்படுத்தியிருந்த போதிலும், இன்றையத் திருச்சபைகளில் நிலவிவரும் ஆவிக்குரிய மந்த நிலையை நாம் எவ்வாறு விவரிக்கக் கூடும்?

''கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்று வேதாகமம் கூறுகிறபடியினால், கர்த்தர் திரும்ப வரும்போது எனது சபையார்தான் முதலில் உயிர்த்தெழுவார்கள்'' என்று ஒரு போதகர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். இந்த ஆவிக்குரிய மந்தமான நிலையைப் பற்றி மற்றொரு போதகர் தனது சபையார் ''ஆயத்த மாயிருக்கிறார்கள், புறப்படுகிறார்கள், ஆனாலும் போக மாட்டார்கள்'' என்று கூறுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலைப் பார்த்து ''என் கிருபை உனக்குப் போதும்'' என்று தேவன் கூறினார். ஆவிக்குரிய நோய்கொண்ட அநேக சபைகள் அவ்வசனத்தை ''சரியா அல்லது தவறா?'' என்ற கேள்வியோடு நோக்குகின்றன. கிருபை இன்றைக்கும் கிடைக்கிறது. ஆனால் நாம்தான் அதைப் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. நாம் தேவனுடைய கிருபையை எவ்வாறு பெற்றுக்கொள்ள வேண்டுமென அறியாமலிருக்கிறோம். அல்லது தேவனுடைய கிருபையை நாம் இன்று விசுவாசியாமல்கூட இருக்கலாம். எனவேதான் நமது சபைகள் இன்று ''ஆவிக்குரிய சோகைநோயினால்'' (spiritual anemia) பாதிக்கப்பட்டிருக்கின்றன.

நீதிமான்கள் என்று அறிவிக்கப்பட்ட மக்கள் விசுவாசத்தினால் தேவனுடைய கிருபையைப் பெற்று உத்தமமாக வாழ முடியும் என்று இந்த நிருபத்தின் இரண்டாவது நான்கு அதிகாரங்களிலும் பவுல் எழுதத் துவங்குகிறார். அவர்கள் விசுவாசம் உடையவர்களாயிருந்து, தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு என்று அறிந்திருப்பார்களானால், பாவம் நிறைந்த இவ்வுலகில் கிறிஸ்துவுக்காக உறுதியாக நிற்க அவர்களால் முடியும். அப்பொழுது அவர்கள் தேவனை மகிமைப்படுத்துகிற ஒரு வாழ்க்கையை வாழ நம்பிக்கை பெற்று அதில் களிகூருவார்கள். அடுத்த நான்கு அதிகாரங்களிலுள்ள கருப் பொருளுக்கு இது முன்னுரையாக அமைந்துள்ளது. தேவனால் நீதிமான் கள் என்று அறிவிக்கப்பட்ட பாவிகள், தேவனுடைய கிருபையை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்றும் அவரை மகிமைப்படுத்துகிற உத்தமமான வாழ்க்கையை வாழ்வது எவ்வாறு என்றும் இந்த அதிகாரங் களில் பவுல் விளக்குகிறார்.

உங்கள் உபத்திரவங்களில் களிகூருங்கள்

தேவனுடைய கிருபையை அடையும் வழி என்ன என்பதை ரோமர்களுக்கு (உங்களுக்கும் எனக்கும்கூட) விவரித்துக் கூறும் பவுல் – நமது உபத்திரவங்களில் களிகூருவதே அதற்குரிய வழி என்று கூறுகிறார். உபத்திரவங்களில் அல்லது பாடுகளில் நாம் களிகூர வேண்டும் என்று ஏன் கூறுகிறார்? தேவனுடைய கிருபையை அடையும் வழியைக் கண்டு

பிடிப்பதற்கும் நமது பாடுகளில் களிகூருவதற்கும் சம்பந்தம் என்ன? பவுல் கொரிந்தியருக்கு எழுதிய அந்த அற்புதமான வசனத்தில் சொல்லப் பட்டுள்ள சகலவித கிருபைகளையும் நாம் அடைய ஒரே வழியாக நமது பாடுகளையே தேவன் சில வேளைகளில் பயன்படுத்துகிறபடியால், உங்கள் உபத்திரவங்களில் களிகூருங்கள் என்று பவுல் எழுதுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய ஒவ்வொரு உண்மையான சீஷனுக்கும் அந்தக் கிருபை கிடைக்கும்.

சகலவிதமான கிருபைகளையும் பெற்றுக்கொள்ள தேவன் நமக்கு ஒரு வழியை உண்டாக்கிவைத்திருந்தும், நாம் அதை அறிந்து அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளாமல் துன்பத்தோடே இவ்வுலகில் வாழ்வதைத் தேவன் காணும்போது அவருடைய உணர்வு கள் எவ்வாறு இருக்கும்? விசுவாசத்தினால் தேவனுடைய கிருபையைப் பெற முடியும் என்று எழுதிய பவுல், இப்பொழுது இரண்டாவது முறையாக, தேவனுடைய கிருபையை அடையக் களிகூருதலும் ஒரு வழி என்று நமக்கு அறிவுறுத்துகிறார். உத்தமமாக வாழ்வதின் மூலம் அவரை மகிமைப்படுத்த அவருடைய கிருபையே நம்மைப் பெலப்படுத்துகிற படியினால், அதற்காக நமது பாடுகளைப் பயன்படுத்த அவர் நமக்கு ஒரு தருணத்தை வழங்கும்போது, நாம் அதை மறுக்காமல் ஏற்றுக்கொண்டு நமது பாடுகளில் களிகூர வேண்டும்.

உபத்திரவத்தின் அளவு அதிகரிக்கும்போது, அல்லது அது ஒரு எல்லையைத் தாண்டும்போது, தேவனுடைய கிருபையினால் அல்லாமல் நம்மால் அதைத் தாங்கிக்கொள்ள இயலாது. மனுஷீக உதவிகள் நமது பாடுகளிலிருந்து நம்மைக் கரைசேர்க்கப் பயன்படாமல் போகும்போது, தேவன் அருளும் கிருபையைப் பெறுவதற்கு அதுவே ஏற்ற தருணமாகும். ஒரு பக்தன் பின்வரும் பாடலிலுள்ள வரிகளில் இந்தச் சத்தியத்தை இவ்வாறு விவரித்து எழுதுகிறார்:

> ‘‘பாரம் அதிகரிக்கும்போது அதிக கிருபை அருளுகிறார்.
> வேதனை அதிகரிக்கும்போது அதிகப் பெலன் அருளுகிறார்.
> பாடுகள் அதிகரிக்கும்போது இரக்கத்தையும் அதிகரிக்கிறார்.
> துன்பம் பெருகும்போது அவர் சமாதானமும் பெருகுகிறது.
>
> நமது சகிப்புத்தன்மையை நாம் இழக்கும்போது,
> நமது பெலன் நம்மைவிட்டு விலகும்போது,
> மனிதர் சகாயம் பலனின்றிப் போகும்போது,
> நமது பிதாவின் பரிபூரண கிருபை நம்மை நிரப்புகிறது.

> அவர் அன்புக்கு அளவேயில்லை
> அவர் கிருபைக்கு எல்லையேயில்லை.
> அவர் வல்லமைக்கு வரையறையில்லை.
> அவர் தமது அளவற்ற ஐசுவரியத்திலிருந்து
> எடுத்துக் கொடுக்கிறார், கொடுத்துக்கொண்டேயிருக்கிறார்.’’

நாம் அந்தக் கிருபையை அனுபவிக்கும்போது, நாம் அதை உணர்ந்துகொள்ளக் காரணமாயிருந்த பாடுகளில் களிகூர வேண்டும். அல்லது மேன்மைபாராட்ட வேண்டும். அடுத்த மூன்று வசனங்களில் பவுல் இதைக் குறித்து விவரிக்கிறார்: ‘‘*அது மாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையை யும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டி ருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது*’’ (5:3–5).

தேவனுடைய கிருபை நம்மைச் சூழ்ந்துகொள்ளாத இடத்திற்கு அவரது சித்தம் நம்மை வழிநடத்துகிறதில்லை என்று மேற்கூறிய வசனங்களில் பவுல் நமக்குக் கூறுகிறார். தேவ கிருபை நம்மை எங்கெல்லாம் தாங்குகிறதோ அங்கெல்லாம் அவருடைய சித்தம் நம்மை அடிக்கடி நடத்திச் செல்லுகிறது. நமது உபத்திரவங்களின் அனுபவத்தின் வாயிலாக இந்தச் சத்தியம் நமது வாழ்வில் வடிவம் பெறுகிறது. ‘‘உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது’’ என்று பவுல் எழுதுகிறார். உபத்திரவத்தை நம்மால் தாங்க இயலாமல் தேவனிடத்தில் உதவிக்காகக் கெஞ்சும்போது, அவர் தமது கிருபையை நம்மில் அதிகரிக்கச் செய்து ‘‘பொறுமையை’’ நாம் அடையும்படிச் செய்கிறார்.

கடினமான சூழ்நிலைகளில் நாம் சிக்கித் தவிக்கும்போது, கர்த்தர் வந்து நம்மை விடுதலைசெய்யும்படிக் கதறுகிறோம். அவரும் நம்முடைய ஜெபத்துக்குப் பதிலளித்து நம்மை விடுதலைசெய்கிறார். ஆனால் சில சமயங்களில் விடுதலைசெய்யும்படி உதவிக்காக நாம் கெஞ்சும்போது, அவர் உடனே வந்து நம்மை விடுவிக்காமல் அக்கடினமான சூழ்நிலை களில் பொறுமையோடே தங்கியிருக்க அவர் நமக்குக் கிருபை அளிக்கிறார்.

தன்னைச் சிறையிலிருந்து விடுதலைசெய்யக் கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்படி பவுல் பிலிப்பியர்களைக் கேட்டுக்கொண்டார். கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டுப் பவுலை விடுதலைசெய்தார். ஆயினும் பவுலுக்கு ‘‘சரீரத்தில் ஒரு முள்’’ இருந்ததாக வேதாகமம் கூறுகிறது. அது அவருடைய சரீர ஆரோக்கியத்தைக் குறித்த பிரச்சினையாக இருந்திருக் கக் கூடும் என்று நான் கருதுகிறேன். பவுல் கலாத்தியருக்கு எழுதும் போது

(கிரேக்க மொழியில்) தனது கண்களில் உண்டாயிருக்கும் நோய் மிகவும் பயங்கரமாயிருக்கிறது என்றும் தன்னைக் காண்கிறவர்களுக்கு அது மிகுந்த அருவருப்பை ஏற்படுத்துகிறது என்றும் வெளிப்படையாக எழுதுகிறார். முதன்முதலாக அவர் கலாத்தியா நாட்டுக்குள் நுழைந்த போது ஆசியாவுக்குள் நுழைய வேண்டாம் என்று ஆவியானவரால் தடைசெய்யப்பட்டார். தனது அருட்பணிப் பயணத்தின் அந்தக் குறிப்பிட்ட கட்டத்தில் பவுல் தனக்கு மிகவும் பிரியமான மருத்துவர் லூக்காவைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தை எழுதிய லூக்கா ''அவர்கள்'' என்று எழுதாமல் ''நாங்கள்'' என்று எழுதுவதிலிருந்து நாம் இதனைத் தெரிந்து கொள்ளலாம் (கலா. 4:15; 6:11; அப். 9:8, 18; 16:6, 10). தனக்கு அந்த நோயிலிருந்து விடுதலை தரும்படி பவுல் மூன்று முறை வேண்டிக்கொண்டார். தேவன் பவுலுக்குப் பதிலளித்தார். ஆனால் பவுலைத் தாம் விடுதலைசெய்யப் போவதாக அவர் கூறவில்லை. அதற்குப் பதிலாக, நாம் அவருக்கு அளிக்கப் போகும் கிருபையானது அவர் தனது பிரச்சினைகளைத் ''தாங்கிக்கொள்ள'' பெலன் அளிக்கும் என்று கூறினார் (2 கொரி. 12:7–10). ரோமாபுரியிலுள்ள விசுவாசிகளுக்குப் பவுல் இவ்வார்த்தைகளை எழுதுகையில், அதன் பொருள் என்னவென்பதைத் தனது சொந்த வாழ்க்கையில் அனுபவித்திருந்தார்.

பிரச்சினைகளைச் சமாளிக்க அல்லது மேற்கொள்ள தேவன் நமக்குக் கிருபை அளிக்கும்போது, நமது சுபாவத்தில் பொறுமை அல்லது சகிப்புத் தன்மை வளர்ச்சிபெறுகிறது. கிறிஸ்துவுக்குள் நாம் யாராக இருக்கிறோம் அல்லது எப்படிப்பட்டவர்களாக வாழ்கிறோம் என்பதை வெளிப்படையாகக் காண்பிக்கிற ஒரு குணாதிசயமாக அது விளங்குகிறது. ஒரு ஆரஞ்சுப் பழமரம் ஆரஞ்சுப் பழங்களைத்தான் பிறப்பிக்கும். ஏனெனில் அதற்குள் ஆரஞ்சுப் பழத்தின் தன்மைதான் மறைந்திருக்கிறது. ஆனால் பவுலின் வார்த்தைகளின்படி உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது; பொறுமை நம்பிக்கையை உண்டாக்குகிறது. அந்த நம்பிக்கை நமக்கு மோசம்செய்யாது என்றும் அவர் கூறுகிறார்: ''*அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது*'' (ரோமர் 5:5). பவுல் தனது முதலாவது அருட்பணிப் பயணத்தைத் துவக்கியபோது அவரோடு ஊழியத்தில் இணைந்திருந்த யோவான் மாற்கு என்னும் சீஷன் உபத்திரவம் வந்ததும் அவரை விட்டுப் பிரிந்துபோய்விட்டான். ஆனால் பொறுமை அல்லது சகிப்புத்தன்மையை உடைய ஒரு சீஷன் கடினமான சூழ்நிலைகளைச் சந்திக்கும்போது தனது ஊழியத்தை விட்டுவிட்டு அவ்வாறு ஓடிப்போக மாட்டான் என்று பவுல் எழுதுகிறார் (அப். 15:37–40).

1977ஆம் ஆண்டில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் ஊழியம்செய்துவந்த அருட்பணியாளர்களை நான் சந்தித்தபோது, அவர்கள் தம்மிடம் ஊழியத்தில் சேரப்போகிறவர்களின் முக்கியமான குணாதிசயங்களில் ஒன்று ''நிலைத்திருத்தலாக'' (stickability) இருக்க வேண்டுமென எதிர்பார்த்தனர் என்று சொன்னார்கள். அதாவது, தேவன் ஒருவரை எங்கு வைத்திருக் கிறாரோ அதே இடத்தில் நிலைத்திருந்து ஊழியம் செய்தல். உங்களுக்குப் பழக்கமில்லாத வித்தியாசமான கலாச்சாரத்தையுடைய அயல்நாட்டிற்கு நீங்கள் சென்று அங்கு 15, 20 அல்லது 25 ஆண்டு காலத்திற்கு ஒரு அருட்பணி மருத்துவராக உங்களால் பணியாற்ற முடியுமா? இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை எதிர்க்கிறவர்களும் அவரது அடியார்களைப் பகைக்கிறவர்களுமாகிய மக்கள் நிறைந்த ஓர் இடத்திற்கு நீங்கள் சென்று அங்கு கிறிஸ்துவைப்போல வாழ்ந்து அவருக்காக வாசனை வீசுகிற ஒரு வாழ்க்கையை வாழ உங்களால் கூடுமா?

கலாச்சார வேறுபாடுகள் நிறைந்த இடத்தில் நீண்டகால, கனி நிறைந்த ஊழியம்செய்ய விரும்பித் தங்களைத் தத்தம்செய்யத் தயாராக இருக்கிற அருட்பணியாளர்கள் பொறுமை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களையே அருட்பணி இயக்கங்கள் ஊழியம் செய்வதற்கெனத் தேர்வுசெய்கின்றன. அருட்பணி ஊழியம் என்பது பிரசங்கம்செய்வது மட்டுமல்ல, மாறுபட்ட கலாச்சாரம் நிறைந்த மக்கள் வாழுமிடத்தில், கிறிஸ்துவைப்போல வாழ்ந்து காட்டுதலே ஆகும். திருச்சபைச் சரித்திரத்திலேயே மிகப் பிரதானமான அருட்பணியாளரான பவுல் ''*சாவுக்கினமான இந்தச் சரீரத்தில் எப்பொழுதும் கிறிஸ்துவைச் சுமந்துதிரிகிறோம்*'' என்று கூறுகிறார் (2 கொரி. 4:10–11).

பின்பு அவர், உபத்திரவத்தினால் சோதிக்கப்பட்டுத் தேறின ஒரு சீஷனுடைய அனுபவத்தைக் குறித்து எழுதும்போது இவ்வாறு கூறுகிறார்: ''*நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது.*'' பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அவரால் நமது வாழ்க்கை ஆளுகைசெய்யப்படுவதை விவரிப்பதற்காகப் பவுல் தெரிந்துகொண்ட மற்றொரு விதமாக இது காணப்படுகிறது (எபே. 5:18). பாக்கியவான்கள் யார் யாரென இயேசுவானவர் பட்டியலிட்டுக் கூறியபோது, நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களையும் இறுதியாக அவர் சேர்த்துக்கொண்டதின் நோக்கமும் இதுவேயாகும் (மத். 5:10).

நமது உபத்திரவங்களில் நாம் ஏன் மேன்மைபாராட்ட வேண்டும் என்று பவுல் எழுதுகிறார்? ஏனெனில் உபத்திரவம் பொறுமையையும்

பொறுமை பரீட்சையையும் பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்கு கிறது. உபத்திரவத்தின் பலனாகிய நீடியபொறுமையானது கிறிஸ்து வானவர், இந்த இருண்ட உலகில் பிரகாசிக்கும்படி நம்மை வைத்திருக்கிற இடத்தில், சூழ்நிலைகள் கடினமாக மாறும் போதும் அதிலேயே நிலைத்திருக்க உதவிசெய்கிறது. அவ்வாறு நிலைத்திருக்கிற ஒரு சீஷனைத் தேவன் தமது அன்பினால் நிரப்புகிறார். அந்த அன்புதான் பரிசுத்த ஆவியானவருடைய நிறைவுக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது.

''அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கம்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்த தினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணு கிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப் படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கை யில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புர வாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப் பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்'' (ரோமர் 5:6–11).

இப்பொழுது பவுல். சுவிசேஷத்தின் முதலாவது சத்தியத்தை வலியுறுத்தக் கூற விரும்பி, நாம் பாவிகளும், அக்கிரமக்காரரும் தேவனுக்குப் பகைஞருமாயிருந்தபோதே கிறிஸ்துவானவர் நமக்காக மரித்ததினாலே தேவனுடைய அசாதாரணமான அன்பு வெளிப்பட்டது என்கிறார். கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் நம்மிடத்தில் செலுத்திய அன்பைப் பெறுவதற்கு நாம் சற்றும் பாத்திரவான்கள் அல்ல. நாம் வழிதவறிச் சென்றவர்கள். நம்மில் நன்மை ஒன்றும் இல்லை. இரட்சிப் பைப் பெற நாம் தகுதியற்றவர்கள். ''கிருபை'' என்னும் வார்த்தைக்கு ஆழமான அர்த்தம் இதில் விளங்குகிறது. அது தேவனுடைய ''இலவசமான ஈவு'' ஆகும்.

பவுல் இப்பொழுது சுவிசேஷத்தின் இரண்டாவது சத்தியத்தை வலியுறுத்திக் கூற விரும்பி, பின்வரும் கேள்வியை நம்முன் வைக்கிறார்: ''அவருடைய குமாரனின் மரணத்தின் மூலமாக நாம் தேவனோடு ஒப்புரவாகக் கூடுமானால் உயிர்த்தெழுந்தவரும் இன்றைக்கும் உயிரோடிருக்கிறவருமாகிய அவருடைய குமாரன் மூலமாக நாம் இரட்சிக்கப்பட்டிருப்பது எத்தனை நிச்சயம்?'' ''ஒப்புரவாகுதல்'' எனும்

வார்த்தையை அவர் பயன்படுத்தும்போது, நம்மைப் போன்ற பாவிகளாகிய மனிதர்கள் ஏன் இந்தச் சுவிசேஷத்தின் இரு சத்தியங் களையும் விசுவாசிக்க வேண்டும் என்ற காரணத்தை விளக்கிக் கூறுகிறார். நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசத் தின் மூலமாக நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டு நீதிமான்களாக்கப் படுகிறோம். இதன் பலனாக நாம் தேவனோடு சமாதானம்பெறுகிறோம். நாம் மேன்மைபாராட்ட வேண்டுமென பவுல் மூன்றாவது முறையாக நமக்குப் புத்திசொல்லுகிறார். தேவனை மகிமைப்படுத்துகிற ஒரு வாழ்க்கையை நம்மால் வாழ முடியும் என்பதனால் நாம் மேன்மை பாராட்ட முடியும் எனறு அவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார். நமது பாடுகள், தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள ஒரு வழியை நமக்கு உண்டுபண்ணுகிறபடியினால் அவைகளில் நாம் மேன்மை பாராட்ட வேண்டும். இறுதியாக, நாம் தேவனோடு ஒப்புரவாக்கப் பட்டதினால் நாம் மேன்மைபாராட்ட வேண்டும் என்று அவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

வெற்றிபெற்ற நான்கு பேர்

எனக்கு மிகவும் பிரியமான வேத போதனையாளரின் கூற்றுப்படி, இந்த வேதபகுதியில் பவுல் வெற்றிபெற்ற நான்கு பேரைக் குறித்துப் பேசுகிறார். இந்த நான்கு வெற்றியாளர்களும் உலகத்திற்குள் பிரவேசிக் கின்றனர். இந்த உலகை ஆளுகைசெய்யும் வரை அல்லது வெற்றி கொள்ளும்வரை அவர்கள் தொடர்ந்துபோராடுகின்றனர். முதலாவது வெற்றியாளரை நாம் ''பாவம் என்னும் அரசன்'' (King Sin) என்று அழைக்கலாம். இவ்வுலகத்திற்குள் அல்லது நம் வாழ்வுக்குள் பாவம் எவ்வாறு பிரவேசித்தது என்பதைப் பவுல் விளக்கவில்லை. பாவமும் தீமையும் இவ்வுலகிற்குள் நிறைந்திருக்கிறது என்றும் நமது தனிப்பட்ட வாழ்விலும் அவை பிரவேசித்திருக்கின்றன என்றும் அவர் கூறுகிறார்.

ஆதியில் தீமை எவ்வாறு இவ்வுலகத்திற்குள் வந்தது என்பது பற்றி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இறையியல் வல்லுநர்களும் தத்துவ அறிஞர்களும் விவாதித்து வருகின்றனர். சகலத்தையும் தேவன் நன்றாக, நன்மை தருபவையாகப் படைத்திருக்கும்போது தீமை எங்கேயிருந்து வந்திருக்கக் கூடும் என்னும் கேள்விக்கு விசுவாசிகளால் விடையளிக்க இயலாமலிருக்கலாம். ஆனால் இத்தீய வல்லமைகள் இவ்வுலகத்தில் உண்டு என்ற உண்மையை வேதாகமம் தெளிவாக எடுத்துரைக்கிறது. தேவனுக்கும் நல்லவர்களுக்கும் அவைகள் பகைவர்களாயிருக்கின்றன. ஆனால் தேவன் அவைகளை எவ்வாறு இவ்வுலகில் பிரவேசிக்க அனுமதித்தார் என்று வேதாகமம் தெளிவாக நமக்கு உரைக்கவில்லை.

கோதுமைகளையும் களைகளையும் குறித்த உவமையில் இயேசு வானவர் இதைக் குறித்துச் சற்று விளக்கிக் கூறுகிறார் (மத். 13:24–30). நல்ல விதை விதைக்கப்பட்டது. ஆனால் அதை விரும்பாத ஒரு மனிதன் இரவு வேளையில் வந்து களைகளையும் அதனருகே விதைத்துவிட்டுச் சென்றான். இரண்டும் ஒருமித்து வளரும்போது, அவை இரண்டும் ஒரேவிதமான தோற்றத்துடன் காணப்படும். எனவே அவைகளை வேறுபிரித்துக் காண்பது சாத்தியமல்ல. கேள்வி இதுதான்: ''நல்ல விதையைத் தானே உங்கள் வயலில் விதைத்தீர்கள்? அப்படியானால் களைகள் எங்கிருந்து வந்தன?'' பதில் இதுதான்: ''பகைவன் வந்து அவைகளை விதைத்தான்.''

பவுல் அந்த நான்கு வெற்றியாளர்களும் இன்று எவ்வாறு இருக்கின்றனரோ அவர்களை அவ்வாறே முதன்மைப்படுத்திக் கூறுகின்றார். விசுவாசத்தினால் தேவ கிருபையைப் பெற்றுப் பாவம் நிறைந்த இவ்வுலகில் உத்தமமாக வாழ்வது எவ்வாறு என்று பவுல் கூறும் வார்த்தைகளைப் பிடித்துக்கொள்ளுங்கள். பாவிகள் நீதிமான்கள் என்று தேவனால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதுவே அவருடைய விவாதமும் போதனையுமாகும்.

பாவம் என்னும் அரசன் இவ்வுலகிற்குள்ளும் நமது வாழ்வுக் குள்ளும் பிரவேசித்திருக்கிறான் என்று அவர் கூறுகிறார். நம்மேல் வெற்றிகொண்டு நம்மை ஆளுகைசெய்யும் வரை அவன் இவ்வுலகில் செழித்து வாழ வேண்டுமென்பதுதான் அவனது எண்ணம். ''கொடிய புற்றுநோயுடன் நீங்கள் அதிக நாட்கள் சேர்ந்து வாழ்ந்துவிடலாம். ஆனால் பாவத்துடன் உங்களால் அதிக நாட்கள் வாழ முடியாது!'' என்று ஒரு அனுபவம் மிக்க போதகர் எனக்குப் போதித்திருக்கிறார். கிறிஸ்து வின் அடியார்கள் ஒவ்வொருவரும் பாவமானது ஒரு வெற்றி கொள்ளுகிற கொடிய அரசன் என்பதைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். பாவம் இவ்வுலகில் பிரவேசித்தபோது அல்லது நமது வாழ்வில் பிரவேசித்தபோது, அதன் எண்ணம் நன்றாக ஓங்கி வளர்ந்து நமது வாழ்வையே ஆக்கிரமித்துக்கொள்ள வேண்டும் என்பதாகத் தான் இருந்தது.

பவுல் இந்த இடத்தில் நமக்கு அறிமுகப்படுத்துகிற மற்றொரு வெற்றியாளர்: ''மரணம் என்னும் அரசன்'' (King Death). அடுத்த அதிகாரத்தின் இறுதியில், பாவம் நமக்குக் கொடுக்கும் சம்பளத்தைக் குறித்துப் பவுல் எழுதுகிறார். பாவம் நமக்குக் கொடுக்கும் சம்பளம் எப்போதுமே மரணமாகத் தான் இருக்கிறது. ''மரணம்'' என்ற உருவகத்தை அவர் பயன்படுத்தும்போது எழுத்தின் பிரகாரமான மரணத்தையும் அதைக்காட்டிலும் அதிக ஆழமான ஒரு பொருளையும்

அவர் கூறுகிறார். பாவத்தினால் விளைந்த எல்லாவிதமான எதிர்மறை யான சம்பவங்களுக்கும் ''மரணம்'' என்னும் பெயரையே பவுல் சூட்டுகிறார். பாவம் என்னும் அரசன் நம் வாழ்வில் பிரவேசிக்கும்போது அவனைத் தொடர்ந்து மரணம் என்னும் அரசனும் நிச்சயமாக வருவான்.

அழகான வார்த்தைகளைச் சங்கீதத்தில் எழுதிய தாவீது, நமது கைகளின் பிரயாசத்தையே நாம் சாப்பிட வேண்டும் என்று கூறுகிறார் (சங். 128:2). ''விரைவிலோ அல்லது கொஞ்சக் காலம் கழிந்த பின்போ, நாம் விதைத்த விதைகளை அறுவடைசெய்ய நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். அதாவது, பின்விளைவுகளை நாம் யாவரும் அனுபவித்துத்தான் ஆக வேண்டும்'' என்று சங்கீதக்காரன் கூறுகிறான். நாம் எடுக்கிற ஒவ்வொரு தீர்மானமும் நம்மை அதனால் வரும் விளைவுகளுக்கு நேராக வழிநடத்துகிறது என்று இயேசுவானவரும் கூறியிருக்கிறார் (மத். 7:13–17). மரணம் என்னும் அரசன் பாவம் என்னும் அரசனை எப்போதும் பின்தொடர்ந்து வருவான் என்னும் சத்தியத்தையே பவுல் இங்கு நமக்குப் போதிக்கிறார்.

முதல் இரண்டு வெற்றியாளர்களைக் குறித்த செய்தியையும் மிகவும் மோசமான செய்திகள் எனலாம். மூன்றாம் நான்காம் வெற்றி யாளர்களைக் குறித்த செய்திகள் மிகவும் நல்ல செய்திகளாகும். மூன்றாவது வெற்றியாளர் இயேசு என்னும் அரசனாவார். இந்த நிருபத்தில், இயேசுவானவர் இந்த உலகத்தில் பிரவேசித்திருக்கிறார் என்ற நல்ல செய்தியைப் பவுல் கூறுகிறார். பாவம், தீமை மற்றும் சாத்தான் ஆகியோரை வெற்றிகொள்ளும் வரையில் இயேசுவானவர் இவ்வுலகில் வளர்ந்து செழித்தோங்கினார். ஒருநாளில் இயேசுவானவர் தமது இராஜ்யத்தை ஆளுகைசெய்வார். அவருடைய ஆளுகைக்கு முடிவு இராது.

இந்த உலகம் உண்டானது முதற்கொண்டு இன்றுவரை இயேசு கிறிஸ்துவே மாபெரும் வெற்றியாளராக இருக்கிறார். உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் யாவருடைய வாழ்விலும், ஈராயிரம் ஆண்டு களாக, அவரே வெற்றிவேந்தனாகப் பவனிவருகிறார். நாளொன்று வரும், அப்பொழுது அவரே உலகிலுள்ள எல்லா ஜாதிகள், இனங்கள், மொழிகள், நிறங்களைச் சேர்ந்த மக்கள்மீதும் வெற்றிபெற்று ஆளுகை செய்கிற அரசன் என்பதை யாவரும் கண்டுகொள்வார்கள் (மத். 24:14; வெளி. 5:9). வேதாகமத்திலுள்ள கடைசி நூல் சொல்லுகிறபடி, ஒருநாளில் இயேசுவானவர் எல்லா அரசர்களையும் பிரபுக்களையும் போரில் வென்று, இராஜாதி இராஜனாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் விளங்குவார்.

நீதிமான்கள் என்று அறிவிக்கப்பட்ட மக்கள் வாழ வேண்டிய உத்தமமான வழியில் வாழ தேவனுடைய கிருபையைப் பெற வேண்டியது அவசியம் என்றும் அதைப் பெறுவது நம்மால் முடிகிற காரியமே என்றும் பவுல் கூறுவதை நினைவுகூருங்கள். புதிய ஏற்பாட்டிலுள்ள வல்லமையான நற்செய்தி என்னவெனில், நம்மை இரட்சிக்கும்படி இவ்வுலகில் பிறந்த இதே இயேசுவானவர் – மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்ததினால் – உயிர்த்தெழுந்த கிறிஸ்துவாக உங்கள் வாழ்வுக்குள்ளும் இன்றே அவர் பிரவேசிக்க முடியும் என்பதேயாகும்!

இயேசுவானவர் இவ்வுலகில் பிரவேசித்து, பின்பு நமது வாழ்விலும் பிரவேசித்தபோது, அவர் நமது வாழ்வை ஆளுகைசெய்து, நம்மில் பெருகி வளர விரும்புகிறார் (ரோமர் 5:17). நாம் ஜீவனைப் பெறவும் அந்த ஜீவனைப் பரிபூரணமடையச் செய்யவுமே தாம் இவ்வுலகிற்கு வந்ததாக அவர் கூறினார் (யோவான் 10:10). இந்த வார்த்தைகள் நம்முடைய இருதயங்களில் சில வினாக்களை எழுப்பி யிருக்க வேண்டும்: ‘‘இயேசுகிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேனா? நான் இன்னமும் ‘பாவம்’ மற்றும் ‘மரணம்’ என்னும் இரட்டை அரசர்களால் மேற்கொள்ளப்பட்டிருக் கிறேனா? அந்த இரட்டை அரசர்களால் நான் தோற்கடிக்கப்பட்டிருப் பதால் அதன் பின்விளைவுகளை அனுபவித்திருக்கிறேனா?

நீங்கள் இன்னமும் பாவத்தினாலும் அதன் பின்விளைவு களினாலும் தோற்கடிக்கப்பட்டுக்கொண்டே இருப்பீர்களானால் பவுல் கூறிய வெற்றிசிறந்த வாழ்க்கை வாழ்வதற்கு வேண்டிய நான்காவது வெற்றியாளரைக் குறித்து நீங்கள் அறிந்துகொள்வதற்கு இதுவே சரியான வேளையாகும். அந்த நான்காவது வெற்றியாளர் ‘‘நீங்கள்தான்.’’ மற்ற மூன்று வெற்றியாளர்களைக் குறித்து பவுல் நம்மோடு பேசினபின்பு, அவர் பின்வருமாறு தொடர்ந்து எழுதுகிறார்: ‘‘*அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்கள் என்பது அதிக நிச்சயமாமே*’’ (ரோமர் 5:17).

கருத்தாழமிக்க இந்த வேத பகுதியில் இன்னும் அநேக சத்தியங்கள் உள்ளன. அவைகளை எல்லாம் எழுத எனக்கு இங்கே இடம் போதாது. இந்த மாபெரும் வேதபகுதியிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு மாபெரும் சத்தியம் என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் நாம் பிரவேசிப்பதும், அவரில் செழித்து வளருவதும், அவரில் ஆளுகை

செய்வதும், பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் மேல் வெற்றி பெறுவதும் முடிகிற காரியம்தான் என்பதே.

இந்த நான்கு வெற்றியாளர்களைக் குறித்த உருவகமும் இந்த நான்கு அதிகாரங்களில் இரண்டாவது பாகத்தில் ஆரம்பிக்கிறது. பாவம் மற்றும் மரணம் என்னும் அரசர்களை மேற்கொள்ளுவது எப்படி என்பதைக் குறித்தும் கிறிஸ்துவோடு ஐக்கியமும் உறவும் கொள்ளுவதன் மூலமாக பரிபூரண வாழ்வுக்குள் பிரவேசித்து கிறிஸ்துவோடுகூட ஆளுகைசெய்வது எப்படி என்பதைக் குறித்தும் இந்த அதிகாரங்கள் நமக்கு விளக்குகின்றன. ஆறு, ஏழு மற்றும் எட்டு ஆகிய அதிகாரங்கள் இந்தப் போதனையை இன்னும் சற்று ஆழமாகவும் விரிவாகவும் விவரித்துப் பேசுகின்றன. நம்மில் அன்புகூருகிறவராலே நாம் முற்றுமுடிய ஜெயம் கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம் என்று கூறி அவர் முடிக்கிறார் (8:37)!

இந்த நான்கு வெற்றியாளர்களைக் குறித்த போதனையை அவர் ஆதாமின் பாவத்தோடு சம்பந்தப்படுத்திப் பேசுகிறார். ஆதாமின் மீறுதலினால் நாம் அனைவரும் பாவிகளானோம். அவ்வாறே கிறிஸ்துவின் கிரியையின் மூலமாக அவரை விசுவாசிக்கிற நாம் அனைவரும் நீதிமான்களாக்கப்படுகிறோம்.

‘‘*அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தை யும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே. ஆகையால், ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று*’’ (ரோமர் 5:17, 18).

ஆதாமின் பாவத்தினால் நியாயத்தீர்ப்பும் மரணமும் உண்டானது. ஆனால் இயேசுகிறிஸ்துவினுடைய நீதி நிறைந்த கிரியையினால் நீதியாகிய ஈவும் ஆபிரகாமின் பிள்ளைகள் என்னும் சுதந்தரமும் ஜீவனும் உண்டானது. தேவனை நம்புகிறதற்கு அவர்கள் ஆயத்தமாக இருந்த படியினால் கிறிஸ்துவானவர் நிறைவேற்றி முடித்த இரட்சிப்பின் கிரியையை தேவன் அவர்களுக்காகவும் ஏற்றுக்கொண்டார்.

மோசேயின் மூலமாக நியாயப்பிரமாணம் இவ்வுலகில் கொடுக்கப் பட்டபோது, பாவத்தின் பிரசன்னம் எப்போதும் மனிதர்களால் உணரப் படத்தக்கதாக இருந்தது என்றும், அந்த உணர்வு மனிதர்களை எப்போதும் ஒருவிதமான குற்ற மனப்பான்மையினால் நிரப்பியிருந்தது என்றும்

பவுல் எழுதுகிறார். எப்படியாயினும், பாவம் பெருகின இடத்தில் கிருபையும் பெருகிற்று என்பதே இன்று நமக்கு வழங்கப்படுகிற நற்செய்தியாகும்: ''*மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆட்கொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது*'' (ரோமர் 5:20–21).

பாவம் ஆளுகைசெய்யும்போது அது மரணத்திற்கு நேராக வழிநடத்திச் செல்லுகிறது. ஆனால் கிருபை ஆளுகைசெய்யும்போது அது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக உண்டாகிற நித்திய ஜீவனுக்கு நேராக வழிநடத்துகிறது. ஆறாம் அதிகாரத்தில் பவுல் இந்தச் சத்தியத்தை இன்னும் சற்று விரிவாக எடுத்துக் கூறி, இங்கு ஆரம்பிக்கும் இந்தப் போதனையை ஆறாம் அதிகாரத்தின் இறுதியில் பின்வரும் வார்த்தைகளோடு முடிக்கிறார்: ''*பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்*'' (ரோமர் 6:23).

அத்தியாயம் இரண்டு

இருவிதமான அடிமைகள்

(6:1–23)

இயேசு கிறிஸ்து தங்களுக்காகச் செய்து முடித்திருக்கும் கிரியையில் விசுவாசம் வைப்பதின் மூலமாக நீதிமான்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் மக்கள் எவ்வாறு வாழ்கின்றனர்? நீதிமான்களாக்கப்பட்ட மக்கள் எவ்வாறு வாழ வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்? அந்த வழியில் அவர்கள் வாழ்வதற்கு எங்கிருந்து ஆற்றல் பெறுகின்றனர்? ஐந்தாம் அதிகாரத்தின் துவக்கம் முதல் எட்டாம் அதிகாரத்தின் முதல் பாகம் வரை இந்தக் கருப்பொருளையே மையமாகக் கொண்டு இறையியல் விளக்கம் தருகிறார் பவுல்.

ஆறாம் அதிகாரத்தின் கண்ணோட்டம்

நாம் இந்த அதிகாரத்தை ஆய்வுசெய்ய அணுகும்போது, பவுல் தான் இங்கு பயன்படுத்துகிற உருவகத்தோடு சேர்த்து ஒரு வசனத்தை எழுதுவதைக் காணலாம்: ''*உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன்*'' (6:19). இந்த அதிகாரத்தின் கருப்பொருளைக் குறிவைத்துச் சொல்லப்படுகிற சத்தியம் ஒன்று உண்டு. அந்தச் சத்தியத்தின் சூழ்நிலையிலேயே அல்லது பின்னணியத்திலேயே இந்த அதிகாரம் முழுவதும் ஆய்வுசெய்யப்பட வேண்டும்: ''...*சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக... பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது*'' (16:12, 14).

இந்த அதிகாரத்தின் முதல் சில வசனங்களுடன் ஐந்தாம் அதிகாரத்தின் இறுதியில் பவுல் கூறும் கருத்துக்களை ஒப்பிட்டுப் பாருங்கள். ''*பாவம் பெருகின இடத்தில் கிருபையும் பெருகிற்று*'' என்று கூறி அவர் முந்தைய அதிகாரத்தை முடித்ததினால், தனது நிருபத்தை வாசிக்கிறவர்களுக்கு ஏற்படுகிற ஒரு சந்தேகமான கேள்வியை ஆறாம் அதிகாரத்தின் துவக்கத்தில் அவரே கற்பனைசெய்து கேட்கிறார்: ''*கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா?*''

அவரது பதில்: ‘‘கூடாதே!’’ இப்பொழுது அவர் அக்கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில் உருவகங்களைப் பயன்படுத்தத் துவங்குகிறார்.

அவரது முதலாவது உருவகம் ஞானஸ்நானத்தைப் பற்றியது. பவுலினுடைய இந்த உதாரணம் இருவிதங்களில் விளக்கப்படுகிறது. நீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும் முறையே சரியானது என்று நம்புவோருக்கு, இயேசுவானவர் தாம் கொடுத்த மாபெரும் கட்டளையில் சொல்லப்பட்ட ஞானஸ்நானத்தைக் குறித்துப் பவுல் இங்கு பேசுகிறார் (மத். 28:18–20). நாம் சுவிசேஷத்தை விசுவாசித்தபோதே கிறிஸ்துவுக்குள் நாம் யாவரும் ஞானஸ்நானம் பெற்றுவிட்டோம் என்று பவுல் வேறொரு நிருபத்தில் எழுதுகிறார் (1 கொரி. 12:13). நாம் கிறிஸ்துவுக்குள் பெற்ற ஞானஸ்நானமே சரியானது என்று பவுல் இங்கு குறிப்பிடுகிறார் என அநேகர் நம்புகின்றனர். இப்படிப்பட்ட கேள்விகள் அடிக்கடி எழும்புகிறபடியினால், இதற்குப் பதில் என்னவெனில், இதுவோ அல்லது அதுவோ என்பது அல்ல – ஆனால் இரண்டும் – அதாவது, இதையும் செய்ய வேண்டும் அதையும் விசுவாசிக்க வேண்டும்.

விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டபோது, நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் – இது நம்மால் முழுவதும் புரிந்துகொள்ள முடியாத ஒரு இரகசியமாக இருக்கிறது. நாம் அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். ஐந்தாம் அதிகாரத்தில் பவுல் நமக்குச் சொல்லியிருக்கிறபடியே நாம் எல்லாரும் ‘‘ஆதாமுக்குள்’’ இருக்கிறோம் என்ற வார்த்தையில் ஒரு ஆழ்ந்த பொருள் உண்டு. ஆதிமனிதனாகிய ஆதாம் பாவம்செய்தபோது நாம் யாவரும் அவனுக்குள் இருந்தோம். அவனது இனத்தவராக நாம் யாவரும் இருக்கிறபடியினால், அவனோடுகூட நாமும் அந்தப் பாவத்துக்கு உடன்பட்டவர்களாக இருக்கிறோம். அந்த ஆதாமின் தன்மையையே அல்லது மாம்ச குணங்களையே நாமும் வெளிப்படுத்துகிறபடியினால் நம் எல்லாருக்கும் அந்தப் பாவத்தில் பங்குண்டு – அதாவது நாம் குற்ற மனச்சாட்சி உடையவர்களாயிருக்கிறோம். விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட வேண்டும்.

நிக்கொதேமுவினிடத்தில் இயேசுவானவர் இதைத்தான் வலியுறுத்திக் கூறி அவன் தம்மிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும் என்றார் (யோவான் 3:18). அந்த அற்புதம் நம்மில் நிகழும்போது நாமும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களாகவும் அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களாகவும் மாறுவோம். நாம் முன்பு ஆதாமுக்குள் இருந்ததைப் போல இப்போது கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். ஆகவேதான் இயேசுவானவர் ‘பிந்தின ஆதாம்’ என்று அழைக்கப்படுகிறார் (1 கொரி. 15:45).

தண்ணீரில் மூழ்கிக் கொடுக்கப்படுகிற ஞானஸ்நானமானது இந்த ஆழமான ஆவிக்குரிய ஞானஸ்நானத்திற்கு ஒரு நிழலாயிருக்கிறது. இயேசுவானவர் கொடுத்த பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும்போது, நாம் ஏற்கெனவே இயேசுவில் வைத்திருக்கும் விசுவாசத்தை ஒரு பொது இடத்தில் யாவரும் காணும்படியாகப் பகிரங்கமாக அறிக்கைசெய்கிறோம்.

ஆனால் தண்ணீரில் மூழ்கி எடுக்கும் ஞானஸ்நானம் வேறொரு ஆழமான உண்மையையும் வெளிப்படுத்துகிறது. மரித்தவர்கள் பாவம் செய்கிறதில்லை. நாம் மரித்துப்போகவில்லை என்றும், இன்னமும் பாவம் செய்கிறோம் என்றும் பவுல் அறிந்திருக்கிறார். இதை அவர் ஒரு உதாரணமாகத்தான் பயன்படுத்துகிறார். நாம் மரித்திருந்தோமானால் பாவம் செய்ய மாட்டோம். நாம் இப்பொழுது மரிக்காமல் உயிரோடிருந்தாலும்கூட, பாவத்தைப் பொருத்தவரையில் நமது செய்கைகள் யாவும் மரித்தவர்களுக்கு ஒப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் அதன் பொருளாகும்.

நீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதைப் பவுல் இந்த அதிகாரத்தில் மிக அழகாக ஒப்பிட்டு எழுதுகிறார். சுவிசேஷத்தின் இரண்டு அடிப்படைச் சத்தியங்களாகிய இயேசுவின் மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதல் ஆகியவைகளுக்கு ஞானஸ்நானத்தை ஒப்பிட்டுப் பேசுகிறார். நாம் நீருக்குள் இறங்கும்போது, நமது இரட்சிப்புக்காக இயேசுவின் மரணத்தில் வைக்கும் விசுவாசத்தை, பகிரங்கமாக யாவரும் காணும் விதத்தில் நமது விருப்பத்தின்படி அறிக்கை செய்கிறோம்.

நமது இரட்சகராகிய இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் நாம் வைக்கும் விசுவாசத்தை அழகான விதத்தில் உலகுக்கு அறிவிக்கும் செயல்தான் நாம் தண்ணீரில் பெறும் ஞானஸ்நானம் ஆகும். நாம் நீருக்குள் இறங்கும்போது, நமது பழைய பாவ வாழ்க்கைக்கு நாம் மரித்துவிட்டோம் என்பதைத் தெரிவிக்கிறோம். நாம் நீரைவிட்டு வெளியே வரும்போது, உயிர்த்தெழுந்தவரும் உயிரோடிருக்கிறவருமாகிய இயேசுவோடு ஒரு புதிய வாழ்க்கையைத் துவக்கப் போகிறோம் என்ற ஒரு ஒப்புக்கொடுத்தலோடு வருகிறோம். இயேசுவோடு நாம் கொள்ளுகிற உறவானது பரிபூரண ஜீவனை நமக்குச் சாத்தியமாக்கிற்று.

ஞானஸ்நானம் என்னும் உருவகத்திலிருந்து கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் என்னும் உருவகத்திற்குப் பவுல் கடந்துசெல்லுகிறார். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் நமது வாழ்வை இணைத்துக்கொள்ள நமக்கு அறைகூவல் இடுகிறார் – உத்தமமாக வாழும்படி உற்சாகப்படுத்துகிறார். இந்த அதிகாரத்திலுள்ள

சத்தியத்தை நாம் எளிதாகப் புரிந்துகொள்ளப் பவுல் பயன்படுத்துகிற வசனத்தை நினைவில் நிறுத்துங்கள்: ''*உங்கள் மாம்ச பலவீனத் தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன்.*'' இந்தக் கூற்றின் உண்மையான பொருள் என்னவென்றால்: ''நான் உங்களுக்குப் போதிக்கிற ஆவிக்குரிய சத்தியங்களை நீங்கள் புரிந்து கொள்ளுவதற்காக நான் இவ்விதமான எளிமையான உதாரணங்களைப் பயன்படுத்து கிறேன்'' என்பதாகும்.

இயேசுகிறிஸ்துவுக்கு இணையான வேறொரு மகாபெரிய போதகரை இந்த உலகம் இதுவரை கண்டதில்லை. இனிமேல் காணப் போவதுமில்லை. அவர் ஒருவரே உவமைகளையும் உவமானங் களையும் கையாளுவதில் தலைசிறந்தவராவார். பவுல் அரேபியா விலுள்ள பாலைவனத்தில் இருந்தபோது, உயிர்த்தெழுந்த கிறிஸ்து வினிடத்திலிருந்து அவரைப்போலவே உதாரணங்களையும், உருவகங் களையும் காட்டிப் பேச, தான் கற்றுக்கொண்டதாகக் கூறுகிறார் (கலா. 1:1–2:10). இந்த அதிகாரத்திலுள்ள ஆவிக்குரிய சத்தியங்களை விளக்குவதற்காகப் பவுல் பயன்படுத்துகிற உவமானங்களைப் பார்க்கும் போது உலகம் இதுவரை கண்டிராத மகாபெரிய போதகருடைய அடிச் சுவடுகளை அவர் அப்படியே பின்பற்றுகிறார் என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை.

பாவத்தோடுள்ள நமது போராட்டத்தை விளக்குவதற்குப் பவுல் பயன்படுத்துகிற உதாரணங்களை நாம் வியாக்கியானம் செய்யவும் அவைகளை அப்பியாசிக்கவும் இந்த அதிகாரத்தில் அவர் சில வார்த்தைகளைத் திறவுகோல்களாகக் கொடுத்திருக்கிறார். ''கிறிஸ்து வினுடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் சாயலுக்கு ஒப்பாக'' நாம் மாற வேண்டுமென்று பவுல் எழுதுகிறதை ஐந்தாம் வசனத்தில் காண் கிறோம். மேலும் அவர் பதினோராம் வசனத்தில் இவ்வாறு எழுதுகிறார்: ''*அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.*'' ''*எண்ணிக் கொள்ளுங்கள்*'' என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் சொற்றொடரானது கிரேக்க மொழியில் இன்னும் சற்று ஆழமான பொருளைக் கொடுக்கும் விதத்தில் இவ்வாறு கூறுகிறது: ''பாவத்தின் தூண்டுதலுக்கும் அதன் வல்லமைக்கும் நீங்கள் உங்களை மரித்தவர் களாக எண்ணுங்கள். ஆனால் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் இருங்கள்.''

இந்த அதிகாரத்தை ஆய்வுசெய்கிற நமக்கு இது மிகவும் முக்கிய மானதாகும். எழுத்தின்படியே நாம் மரித்தவர்களாக இருக்கிறோம் என்று பவுல் சொல்லவில்லை. மரித்துப்போன ஒருவன் பாவம் செய்கிறதில்லை

– பாவம் செய்யும்படியான சோதனையும் அவனுக்கு உண்டாவதில்லை. நாம் மரித்துப்போயிருந்தால் பாவம் எத்தன்மையுடையதாக இருந்தாலும் அதனால் நமக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை. நமது பிரச்சினை என்னவென்றால், நாம் இன்னும் பாவத்திற்கு மரிக்கவில்லை. நாம் உண்மையிலேயே மரித்துப் போயிருந்தால் பாவத்துக்கும் பாவச் சோதனைகளுக்கும் எப்படிப்பட்ட உணர்ச்சியற்றவர்களாக இருப்போமோ அவ்வாறே இப்போதும் நடந்து கொள்ள வேண்டுமென்பதே பவுலினுடைய போதனையாகும்.

மது அருந்திவிட்டு அந்தப் போதையோடு சாலையைக் கடந்து கொண்டிருந்த ஒருவன் ஒரு விபத்து நடந்த இடத்துக்கு வந்தான். சாலை விபத்தில் சிக்கிய ஒருவன் அங்குமிங்குமாக உருண்டபடியே ''அவசர மருத்துவ உதவி வாகனத்தைக் கூப்பிடுங்கள்! அவசர மருத்துவ உதவி வாகனத்தைக் கூப்பிடுங்கள்!'' என்று கத்திக்கொண்டிருந்தான். அப்போது போதையிலிருந்தவன் கீழே கிடந்தவனைப் பார்த்து ''ஒ, நீதான் அந்த மருத்துவ உதவி வாகனமா?'' என்று கேட்டானாம். பாவச் சோதனையோடு நாம் நேருக்கு நேர் போர்புரியும்போது ''நான் ஒரு மரித்துப்போன மனிதன்! நான் ஒரு மரித்துப்போன மனிதன்!'' என்று நமக்குநாமே சொல்லிக்கொள்ள வேண்டுமென்று பவுல் நமக்குப் புத்தி புகட்டுகிறார்.

அநேகரைப்போல நானும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டபோது, பாவ வாழ்க்கை நடத்திவந்த என் நண்பர்களைப் பார்த்து ''இனி நான் உங்களோடு சேர்ந்து பழைய பாவ வாழ்க்கைக்குத் திரும்பப் போவதில்லை'' என்று கூறினேன். அவர்கள் அனைவரும் மிகவும் விசனமடைந்தனர். அவர்களில் ஒருவனிடம் ''நான் வேத கலாசாலை யில் சேர்ந்து ஊழியப் பயிற்சி பெறப்போகிறேன்'' என்று சொன்னேன். நான் மரித்துப்போயிருந்தால் எவ்வளவு துக்கமடைவானோ அந்த அளவுக்குத் தான் துக்கமடைந்திருப்பதாக அவன் என்னிடம் கூறினான். ''நீ எவ்வளவு அழகிய உடற்கட்டை உடையவனாக இருந்தாய்; இப்போது நீ அதை இழந்துவிட்டாய்!'' என்று சொல்லிப் புலம்பினான்.

ஒரு கிறிஸ்தவ பல்கலைக்கழகத்தில் வேதாகமத்தைப் படிப்பதற்காக நான் என் பெயரைப் பதிவுசெய்தபோது, மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். கலாத்தியருக்குப் பவுல் எழுதிய நிருபத்தின் இறுதியில் சொல்லப்பட்ட காரியங்களை எனது முதலாவது வேதாகமப் பாட வகுப்பில் போதிக்கக் கேட்டு மிகவும் உற்சாகமும் ஆசீர்வாதமும் அடைந் தேன். இயேசுகிறிஸ்துவின் சிலுவையின் நிமித்தமாக இந்த உலகம் எனக்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது, நானும் இந்த உலகத்துக்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன் என்று பவுல் அந்த வேதபகுதியில் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துவதை நாம்

காண்கிறோம். வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், சிலுவையானது இந்த உலகை அவருக்கு ஒரு செத்துப்போன உலகமாக ஆக்கிற்று; அவ்வாறே தானும் இந்த உலகத்திற்கு ஒரு செத்துப்போன மனிதனாகத் தோன்றுவதாகக் கூறுகிறார் (கலா. 6:14).

இரண்டாம் அதிகாரத்தில் பவுல் வலியுறுத்திக் கூறிய ஒரு குறிப்பிட்ட சத்தியமே இந்த அதிகாரத்திலும் அவர் முதன்மைப்படுத்தும் சத்தியங்களில் ஒன்றாக உள்ளது. அது என்னவெனில், எந்தவொரு நிகழ்ச்சியும் அல்லது விழாவும் அதன் உள்ளான உண்மையைப் பிரதிபலிக்காமல் வெறும் மதச்சடங்காகச் செய்யப்படக் கூடாது என்பதுதான். விருத்தசேதனம் செய்தல் எவ்வாறு யூதர்கள் தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகிற ஒரு சடங்காக இருக்கிறதோ, அவ்வாறே ஞானஸ்நானமும் நமது விசுவாசத்தை வெளிப்படுத்துகிற ஒரு சடங்காக இருக்கிறது. விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்காகவே ஞானஸ்நானம் என்னும் ஒரு முறைமை அல்லது சடங்கு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமையைப் பெற்று வாழ்கின்ற அனுபவம் இல்லாமல் வெறும் மதச் சடங்கை நிறைவேற்றுகிற விதத்தில் ஞானஸ்நானம் பெறுதல் கூடவேகூடாது. நமது விசுவாசத்தை வெறும் சடங்காக நிறைவேற்றுகிற ஒரு முறைமையாக ஆக்கிவிடுதல் கூடாது.

இந்த அதிகாரம் முழுவதிலும் பவுல் கூறுகிற மிகவும் கருத்தாழம் கொண்டதும் உற்சாகமளிக்கக் கூடியதுமான உவமானங்களை விளக்கம் செய்யவும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவும் இந்தக் கண்ணோட்டமே நம்மை வழிநடத்துவதாக!

ஆறாம் அதிகாரத்தில் பவுல் கூறும் போதனைகளின் சுருக்கம்

இந்த அதிகாரத்தில் பவுல் போதிக்கிற முதலாவது சத்தியத்திற்கு உருவகமாக அல்லது உதாரணமாக ஞானஸ்நானத்தை அவர் பயன் படுத்துகிறார். அந்தச் சத்தியம் என்னவெனில், நாம் தண்ணீருக்குள் இறங்குதல், இயேசுவின் மரணம் மற்றும் அடக்கம்பண்ணப்படுதலுடன் சம்பந்தமுடையது. நமது பழைய பாவ வாழ்க்கையை அந்தத் தண்ணீருக் குள்ளேயே விட்டுவிடுகிறோம். தண்ணீரைவிட்டு வெளியே எழும்பி வருதல், இயேசுவின் உயிர்த்தெழுதலுடனும் பாவத்திலிருந்து முற்றிலும் விடுதலைபெற்று வாழுகிற ஒரு புதிய வாழ்க்கையுடனும் சம்பந்த முடையது (1–4).

இந்தச் சத்தியம் ஐந்தாம் அதிகாரத்தின் இரண்டாம் வசனத்திலேயே முன்னுரையாகக் கூறப்பட்டுள்ளது. தேவனை மகிமைப்படுத்துகிற ஒரு வாழ்க்கையை வாழவும், கிறிஸ்துவுக்காக இவ்வுலகில் வலுவாக நிற்கவும்

நம்மைப் பெலப்படுத்துகிற கிருபையை விசுவாசத்தினால் நாம் பெறக் கூடும் – இது சாத்தியமே என்று பவுல் அங்கு எழுதுகிறார்.

அடுத்த ஏழு வசனங்களில்(5–11), அவர் தனது நிருபங்களில் அடிக்கடி போதிக்கின்ற ஒரு சத்தியத்தை வழங்கும்போது, இந்தப் போதனைக்கு வலிமையூட்டுகிறார்: ''*அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்*'' (6:11). நான் இதனை ''திருப்பப்பட்ட சுவிசேஷம்'' (The Gospel in Reverse) என்று அழைக்கிறேன். ''நாம் பிழைத்திருக்கும்படிக்கு கிறிஸ்துவானவர் மரித்தார்'' என்பதுதான் சுவிசேஷம். ஆனால் திருப்பப்பட்ட சுவிசேஷம் என்றால் ''கிறிஸ்துவானவர் பிழைத்திருக்கும்படிக்கு நாம் (நமது பாவமான விருப்பங்களுக்கும் சுயநலம் மிக்க உலகப்பிரகாரமான ஆசைகளுக்கும்) மரிப்பது'' என்பதாகும்.

கிறிஸ்துவில் தான் பெற்றிருந்த தனது சொந்த அனுபவத்தையே கலாத்தியர்களுக்குப் பவுல் சத்தியமாகப் போதித்தார்: ''*கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்*'' (கலா. 2:20).

பின்வரும் மூன்று வசனங்களுக்கும் முன்னுரையாக ''ஆகையால்'' என்ற முக்கியமான வார்த்தையைக் கொண்டு துவக்கி எழுதுகிறார்:

''*ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங் களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங் கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது*'' (6:12–14).

தனது உற்சாகமூட்டும் தர்க்கத்தை அல்லது தத்துவத்தை நாம் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே பவுல் ''ஆகையால்'' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். திருப்பப்பட்ட சுவிசேஷத்தில் அவர் எவைகளையெல்லாம் எழுதினாரோ அவைகளை யெல்லாம் இந்த மூன்று வசனங்களிலும் இணைத்துக் காண்பிக்கிறார்.

கிறிஸ்துவானவர் நம்மூலமாகப் பிழைத்திருக்க வேண்டுமானால், நாம் பாவத்திற்குச் சாக வேண்டும். ஆனால் நாம் பாவத்திலேயே நிலைத் திருப்போமானால் கிறிஸ்துவானவர் நம் வாழ்வின் மூலமாகப் பிழைத் திருக்க முடியாது. இந்தக் காரியத்தைப் பவுலினால் நினைத்துப் பார்க்கக் கூட இயலாது. நாம் நியாயப்பிரமாணத்தின்கீழ் இருந்தபோது பாவத்தின் மேல் வெற்றபெற நமக்குக் கிருபை கொடுக்கப்படவில்லை. கிருபையும் சத்தியமும் கிறிஸ்துவின் மூலமாக வந்திருக்கிறபடியினால் (யோவான் 1:17), நாம் பாவத்தின் ஆளுகைக்குக் கீழ் தொடர்ந்து வாழ வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், உத்தமமாக வாழ்வதற்குத் தேவையான கிருபையை இப்பொழுது நாம் பெற்றிருக்கிறோம்.

பின்பு பவுல் அடிமைத்தனத்தின் உருவகத்தைக் குறித்து அறிமுகப் படுத்துகையில் இந்த அதிகாரத்தின் மையப் பகுதிக்கு வருகிறார்: *‘‘இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் செய்யலாமா? கூடாதே. மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கு ஏதுவான கீழ்ப்படி தலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர் களென்று அறியீர்களா? முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளா யிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.’’*

‘‘உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகார மாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களைஅசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் ஒப்புக் கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்’’ (6:15–19).

பவுல் இந்த நிருபத்தை எழுதத் துவங்கும்போது ரோமாபுரி யிலுள்ள பரிசுத்தவான்களுக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறார். அப்பொழுது அங்குள்ள மக்களில் பாதிப்பேர் அடிமைகளாயிருந்தனர். சுயாதீனமுள்ளவராகப் பிறந்த பவுல் போன்றவர்களுக்கு ஒரு அடிமையாக வாழ்வது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு அத்தனை கொடுமையானது. அடிமை என்னும் உருவகத்தைப் பயன்படுத்தி அவர் இங்கு ஒரு ஆற்றல்மிக்க சத்தியத்தைப் போதிக்க விரும்புகிறார். யாருக்கு அல்லது எதற்கு நீங்கள் சேவை செய்கிறீர்களோ அவருக்கே அல்லது அதற்கே நீங்கள் அடிமைகளாக

இருக்கிறீர்கள் என்று கூறுகிறார். நீங்கள் பாவத்தினால் ஆளப்படுவீர் களானால் பாவத்திற்கே நீங்கள் அடிமைகளாக இருக்கிறீர்கள்.

உங்கள் இரட்சிப்புக்காக இயேசுகிறிஸ்துவை நம்பி அவரை உங்கள் ஆண்டவர் என்று அழைக்கத் தெரிந்துகொண்ட பின்பும் பாவத்துக்கு அடிமைகளாயிருப்பீர்களானால் கிறிஸ்துவில் நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்தை மறுதலிக்கிறீர்கள் என்றுதான் பொருளாகும் (லூக்கா 6:46)! நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே அடிமையாக வாழ வேண்டும். அது மட்டுமே உங்களைப் பாவம் மற்றும் மரணத்தின் சக்தியிலிருந்து விடுதலையாக்கும்! எனவேதான் பவுல் தனது நிருபங்களில் தன்னைக் குறித்து அறிமுகம்செய்யும்போது தன்னை இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு ஊழியக்காரன் அல்லது அடிமை என்று எழுதுகிறார் (ரோமர் 1:1; பிலி. 1:1; தீத்து 1:1).

‘‘பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். இப்பொழுது உங்களுக்கு வெட்கமாய்த் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே. இப்பொழுது நீங்கள் பாவத் தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன். முடிவோ நித்திய ஜீவன். பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்’’ (6:20–23).

ஆறாம் அதிகாரத்தின் கடைசி நான்கு வசனங்களில் பின் விளைவு களின் மறுக்க முடியாத உண்மைகளைக் குறித்துப் பவுல் பேசுகிறார். பாவத்திற்கு அடிமைகளாக இருக்கும்படி தங்கள் சரீரத்தின் அவயவங் களை ஒப்புக்கொடுத்தவர்கள் ‘‘பின்விளைவுகளின் விருந்துசாலைக்கு’’ செல்ல வேண்டியதை மறந்துபோகக் கூடாது என்று எச்சரித்து எழுதுகிறார். அவர்கள் பாவத்திற்கு அடிமைகளான பின்பு நீதிக்கு அடிமைகளாவது மிக்க கடினம் என்று காரணம் கூறுகிறார். எனினும், அவர்களது பாவத்தினால் விளைந்த கனி அல்லது பின்விளைவுகள் அவர்களுக்கு மிகுந்த வெட்கத்தை உண்டாக்கும் எனவும் எச்சரிக்கிறார். பாவத்தினால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு அவர் ‘‘மரணம்’’ என்று பெயர் சூட்டுகிறார்.

பாவத்திற்கு அடிமையாக இருப்பவருக்கு பலனாக அல்லது சம்பளமாக மரணம் உண்டாவதைப்போல நீதிக்கு அடிமையாக இருப்பவருக்கு நித்தியஜீவன் பலனாகக் கிடைக்கும் என்று பவுல் உற்சாகப்படுத்திப் புத்திசொல்லுகிறார். இயேசுவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்ட யாவருக்கும் பரிசுத்த வாழ்வும் முடிவில் நித்திய

ஜீவனும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் எழுதுகிறார். திருப்பப்பட்ட சுவிசேஷத்தின்படி வாழ்வோருக்கு, அதாவது, சுயத்துக்கு மரித்து கிறிஸ்துவுக்காக வாழ்வோருக்கும் அவரையே தங்கள் வாழ்வில் ஆண்டவராக முடிசூட்டுவோருக்கும் நித்தியஜீவன் பலனாகக் கிடைக்கும் என்று பவுல் கூறுகிறார்.

பாவம் எப்பொழுதும் தனது ஒரே சம்பளமாகிய மரணத்தை வழங்கத் தவறுவதில்லை என்று கூறிப் பவுல் முடிக்கிறார். இவ்வுலகில் நாம் சேமித்து வைத்திருக்கும் சொத்துக்களின் மதிப்பு அதிகரிக்கலாம் அல்லது ஒருவேளை குறையலாம். சந்தை நிலவரத்திற்குத் தகுந்தபடி இவ்வுலகில் நாம் பெறும் சம்பளத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படலாம். ஆனால் பாவம் தன்னை உடையவருக்கு எப்பொழுதும் ஒரேவிதமான சம்பளத்தையே வழங்குகிறது. ''பாவத்தின் சம்பளம் மரணம்'' – இது ஒரு துர்ச்செய்தி. ஆனால் நற்செய்தியோ ''... தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்'' என்று கூறுகிறது!

அத்தியாயம் மூன்று

''பவுலின் நான்கு ஆவிக்குரிய பிரமாணங்கள்''

(7:1 – 8:13)

பவுல் இந்த ஏழாவது அதிகாரத்தை எழுதும்போது, பாவத்தை வெற்றிகொள்ளுவதைப் பற்றிய தனது சொந்த அனுபவத்தைக் கூறுகிறார். பாவத்துடனான தனது போராட்டத்தில் தனக்கு ஏற்பட்ட வெற்றி தோல்விகளை நம்மோடு பகிர்ந்துகொள்கிறார். பரிசுத்தமாக்கப் படுதல் பற்றிய தனது சொந்தப் போராட்டங்களின் சாட்சியை அவர் கூறும்போது, இந்த நிருபத்தில் இலட்சக்கணக்கானவர்களுக்குப் பிடித்தமான வேதபகுதியைக் கொடுக்கிறார்.

நிருபத்தின் இந்தப் பகுதிக்கு முன்னுரையாக பிரமாணம் என்ற கருத்தை அப்போஸ்தலன் வலியுறுத்துவதைக் கவனியுங்கள். இந்த அதிகாரத்தின் துவக்கத்திலிருந்து, எட்டாம் அதிகாரத்தின் பதினேழாம் வசனம் வரையில் பவுல் ''நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களைக்'' குறிப்பிடுகிறார். நீதிமான்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ள மக்களாக நாம் நேர்மையாக வாழும்படி உண்மையாக வாஞ்சிப்போமானால், பவுல் நம்மோடு பகிர்ந்துகொள்ளும் இந்த நான்கு ஆவிக்குரிய பிரமாணங் களையும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நிருபத்தின் ஏழாம் மற்றும் எட்டாம் அதிகாரங்களை நீங்கள் வாசிக்கும்போது, பவுல் இவைகளைப் பற்றி என்ன போதிக்கிறார் என்பதைக் கவனியுங்கள்:

தேவனுடைய பிரமாணம்

பாவம் மற்றும் மரணம் என்பவைகளின் பிரமாணம்

கிறிஸ்துவில் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்

சிந்திக்கும் வழி பற்றிய பிரமாணம்.

ஆறாம் அதிகாரத்தில் பல உருவகங்களைக் கூறிய பிறகு பவுல் ஏழாம் அதிகாரத்தையும் ஒரு உருவகத்தோடு துவங்குகிறார்: ''*நியாயப் பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா? அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப் பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்தபின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலை யாயிருக்கிறாள். ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்னப் படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால், வேறொரு புருஷனை விவாகம்பண்ணினாலும் விபசாரியல்ல.*

''*அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக் கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப் பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள். நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன்செய்தது. இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத் தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்*'' (1–6)

ஆவிக்குரிய பிரமாணம் எண் ஒன்று: தேவனுடைய பிரமாணம்

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் பற்றிய இந்த விரிவானதும் ஏவுதல் பெற்றதுமான விளக்கத்தில் எழுதப்பட்டுள்ளதின்மீது பவுல் இப்போது கூடுதலான விளக்கத்தைக் கொடுக்கிறார். நாம் அனைவரும் பாவத்தின்கீழாக இருக்கிறோம் என்று அவர் எழுதியிருக்கிறார். நாம் அனைவரும் தேவனுடைய பிரமாணத்தின் கீழாக இருக்கிறபடியால், அது நாம் எல்லாரும் பாவிகள் என்பதைக் காட்டுகிறது.

இந்த அதிகாரத்தின் துவக்கத்தில் தனது உருவகத்தைக் கூறுவதற்கு முன்பாகப் பவுல் தான் இதைத் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை அறிந்தவர்களுக்கு எழுதுவதாகக் குறிப்பிட்டுள்ளார். நாம் ஏற்கெனவே இரண்டாம் அதிகாரத்தில் பார்த்தபடி யூதர்களுக்கே அவர் இந்த நிருபத்தை எழுதுகிறார் என்பதை இது காட்டுகிறது. இப்போதும் அவர் தான் ரோமாபுரிக்கு முதன்முதலாக வந்தபோது சந்தித்த யூதர்களை

நினைவில் வைத்திருக்கிறார் (அப். 28:17–29). இந்த நிருபத்தின் ஒன்பதாம் அதிகாரத்தின் முதல் சில வசனங்களை நாம் வாசிக்கும்போது, இவர் ஏன் தான் எழுதும்போதும், பிரசங்கிக்கும்போதும், போதிக்கும் போதும் முதலாவது யூதரைப் பற்றியும், பிறகு கிரேக்கரைப் பற்றியும் நினைக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்வோம்.

தான் தர்சு பட்டணத்துச் சவுலாக இருந்தபோது, எப்படிப்பட்ட யூதராக இருந்தாரோ, அப்படிப்பட்ட யூதர்களுக்கு அவர் இப்போது எழுதுகிறார். பரிசேயர்களுக்குப் பரிசேயனாக இருந்த தர்சுபட்டணத்து சவுல் தனது முழுமையையும் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதற்கு ஒப்புக்கொடுத்திருந்தார். தர்சு பட்டணத்துச் சவுலைப் போன்ற பரிசேயர்கள் சுவிசேஷங்களில் மோசமானவர்களாகச் சித்திரிக்கப்படுகிறார்கள். ஆனாலும் பரிசேயர்களிலும் நற்பண்புகள் காணப்பட்டன என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். எடுத்துக்காட்டாக, யூத விசுவாசத்தின் பழைமையைக் காத்துக்கொள்ளும் படியாக அவர்கள் உருவாக்கப்பட்டனர். எபிரெய வரலாற்றில் புதிய ஏற்பாட்டுக் காலகட்டத்தில் யூத அடிப்படைவாதிகளாக அவர்கள் இருந்தார்கள். தர்சு பட்டணத்துச் சவுலைப்போல வைராக்கியம் கொண்ட பரிசேயர்கள், மோசேயின் நியாயப்பிரமாணத்தை அல்லது பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து ஆகமங்களை மனப்பாடம் செய்தார்கள். இன்றோ பல கிறிஸ்தவர்கள் வேதாகமத்தின் இந்த முதல் ஐந்து ஆகமங் களையும் முழுமையாக வாசித்ததுகூடக் கிடையாது.

அவர்கள் நம்ப முடியாத அளவு நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்களாக இருந்தார்கள். இது பிரமாணநீதியான, பிரமாணத்தை எழுத்துக்கு எழுத்து பின்பற்றும் வகைப்பட்ட சுயநீதியாகும்; இயேசு வானவரும் அப்போஸ்தலர்களும் இதையே எதிர்த்தார்கள். தங்கள் இரட்சிப்பு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதிலேயே இருக்கிறது என்று அவர்கள் விசுவாசித்தபடியால், வைராக்கியத்தோடு அதைக் கைக்கொண்டார்கள். அவர்களில் பலர் நல்ல மக்களாக இருந்தாலும், அவர்கள் சுயநீதியுள்ளவர்களாக இருந்தார்கள்.

நீங்கள் நான்கு சுவிசேஷங்களையும் வாசிக்கும்போது, இயேசு வானவர் நிக்கொதேமு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு போன்ற பரிசேயர்களோடு பேசும்போது அன்போடும் பொறுமையோடும் பதிலளித்ததைக் கவனியுங்கள். விரோதத்தோடு வாதிட்டவர்களுக்கும் அவர் பொறுமையாகப் பதிலளித்தார். தமஸ்குவுக்குச் செல்லும் பாதை யில் தர்சு பட்டணத்துச் சவுல் மனமாற்றம் பெற்றது இயேசுவானவர் பரிசேயர்களின்மீது எவ்வளவாக அன்பு வைத்திருந்தார் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் காணப்படுகிறது. திருச்சபையின் மாபெரும்

அருட்பணியாளரை உயிர்த்தெழுந்த இயேசு தெரிந்துகொண்டபோது, அவர் பரிசேயர்களுக்குப் பரிசேயனான சவுலையே தெரிந்துகொண்டார்.

பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது, தான் ஒரு பரிசேயனாக நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவது தனக்கு இரட்சிப்பைக் கொண்டுவரும் என்று ஒப்படைப்புக்கொண்டிருந்ததை இப்போது குப்பையும் நஷ்டமுமாக எண்ணுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். பிலிப்பிய சபைக்கு அவர் எழுதியபோது, அந்த ஒப்படைப்பை அவர் வலுவாக ஒதுக்கித் தள்ளினார். என்றாலும், தேவனுடைய பிரமாணத்தின்மீது தங்கள் அன்பில் வைராக்கியம் கொண்டிருந்த சுயநீதியுள்ள யூதர்கள்மீது அவர் அதிகமான மனதுருக்கம் கொண்டிருந்தார். ரோமருக்கு எழுதிய இந்த நிருபத்தில், தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதில் அதே ஒப்படைப்பைக் கொண்டிருந்தவர்களுக்கு அவர் இப்போது எழுதுகிறார்.

தாங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதினால் இரட்சிக்கப்பட முடியாது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளும்போது அந்தப் பிரமாணத்துக்கும் அவர்களுக்குமுரிய தொடர்பு என்ன? இந்த அதிகாரத்தின் துவக்கத்தில் பவுல் கொடுத்துள்ள உருவகத்தில் இதற்கான பதிலை நாம் காண முடியும்.

தாவீது தனது சங்கீதத்தில் பாக்கியவானைக் குறித்துக் குறிப்பிடும்போது, கர்த்தருடைய வேதத்தில், அதாவது பிரமாணத்தில், தியானமாயிருக்கிறவன் பாக்கியவான் என்று எழுதியிருக்கிறார் (சங். 1:2). மிக நீளமான சங்கீதமாகவும், வேதாகமத்தில் மிகப் பெரிய அதிகாரமாகவும் இருக்கும் 119ஆம் சங்கீதம் எஸ்றாவைப்போல தேவனுடைய பிரமாணங்களில் அதிகமான அன்புகொண்டிருந்த ஒருவராலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

தேவனுடைய பிரமாணத்தை நேசித்த பயபக்தியுள்ள யூதர்கள் பிரமாணம் தங்களை இரட்சிக்காது என்பதை உணர்ந்தபோது, தமது கணவனை இழந்த ஒரு விதவையைப் போலத் துக்கப்பட்டார்கள். எனவேதான் பவுல் ஏவுதல் பெற்ற இந்த உருவகத்தை இங்கே குறிப்பிடுகிறார். அப்படித் தனது மனைவியை இழந்துபோகிறவர்கள் மறுபடியும் திருமணம்செய்துகொள்ளச் சுயாதீனமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை அவர் நினைவுபடுத்துகிறார். இப்போது அவர்கள் தங்கள் ''மனைவியை'' (நியாயப்பிரமாணம்) இழந்துவிட்டிருக்கிறபடியால், வேறொருவரை ''மணந்துகொள்ள'' சுயாதீனம் பெற்றிருக்கிறார்கள். தான் கூறுவதை அவர்கள் விசுவாசிப்பார்களானால், அவர்கள் இப்போது உயிர்த்தெழுந்து ஜீவிக்கும் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவைத் ''திருமணம் செய்துகொண்டவர்களாக'' இருப்பார்கள் என்று பவுல் எழுதுகிறார்.

தனிப்பட்ட செயல்படுத்துதல்

ரோமாபுரியில் இருந்தவர்களுக்கும், இப்போது இந்த நிருபத்தை வாசிப்பவர்களுக்கும், இந்தப் பகுதி எந்தத் தனிப்பட்ட அல்லது தியான ரீதியிலான செயல்படுத்துதலைக் கொடுக்கிறது? எவர்மீதாவது, எதன்மீதாவது நம்பிக்கை வைப்பதினால் தமக்கு இரட்சிப்பு கிடைக்காது என்று உணர்ந்தவர்களுக்கு இது அவசியமாக உள்ளது.

யோவான் சுவிசேஷத்திலுள்ள ஒரு எடுத்துக்காட்டு இத்தகைய மக்களைக் குறிப்பிடுகிறது. இயேசுவானவர் எருசலேமில் நுழைந்தபோது, பெதஸ்தா குளத்தினருகே அநேகர் உடல் ஊனமுற்றவர்களாகக் குணமாகுதலுக்காகக் காத்திருந்தார்கள். இவர்கள் ஒரு மூடநம்பிக்கையில் நம்பிக்கை வைத்திருந்தார்கள். தேவதூதன் தண்ணீரைக் கலக்கிவிடும்போது முதலில் நீரில் இறங்குகிறவர்கள் சுகமாக்கப்படுவார்கள் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் குளத்தில் இறங்குவதற்கான எல்லா நம்பிக்கையையும் இழந்துபோயிருந்த ஒருவனை இயேசுவானவர் குணமாக்கினார். 24ஆம் எண் சிறுநூலில் இதைப் பற்றிய என் விளக்க வுரையில், மூடநம்பிக்கையோடு அந்தக் குளத்தைச் சுற்றிக் கூடியிருந்த அனைவரையும், இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு எவர்மீதாவது அல்லது எதன்மீதாவது தங்கள் இரட்சிப்புக்காக நம்பிக்கை வைத்திருப் பவர்களோடு ஒப்பிட்டிருக்கிறேன்.

இயேசுகிறிஸ்துவில்லாமல் இரட்சிப்பு இல்லை என்று பேதுரு கூறுகிறார்: ''*அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை*'' (அப். 4:12). உங்கள் இரட்சிப்புக்காக நீங்கள் இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு எவர்மீதாவது அல்லது எதன்மீதாவது விசுவாசம் வைத்திருப்பீர்களானால், நீங்கள் இரட்சிப்புக்காக 'பெதஸ்தா குளத்தை'' நோக்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தமாகும். பவுல் இங்கே ஏழாம் அதிகாரத்தின் துவக்கத்தில் கூறும் உருவகம் உங்களுக்கும் பொருத்தமாக இருக்கும்.

இந்த நிருபத்தின் முதல் ஆறு அதிகாரங்களில் பவுல் எழுதியிருப்பதை நீங்கள் விசுவாசிக்கும்போது, உங்களுக்கு ஒரு துணையைப் போலிருக்கும் ஒன்றைக் குறித்து என்ன செய்யப் போகிறீர்கள்? இதற்குப் பதில்: உங்களை இரட்சிக்க முடியாத அந்தக் காரியத்தை நீங்கள் மரித்துப்போன உங்கள் துணையாகக் கருத வேண்டும். நீங்கள் மற்றொருவருக்கு, உயிர்த்தெழுந்த ஜீவனுள்ள இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மணம்செய்விக்கப்பட்டிருப்பதாகக் கருத வேண்டும்.

மற்றொரு தனிப்பட்ட செயல்படுத்துதலும் இருக்கிறது. பவுல் இந்த நிருபத்தில் பயபக்தியுள்ள யூதர்களுக்கு எழுதும்போது, அவர் இரட்சிப்புக்காக தங்கள் நற்கிரியைகளில் நம்பிக்கை வைத்திருக்கும் நல்லவர்களுக்காகவும் இதை எழுதுகிறார். தாங்கள் மற்ற எவருக்கும் தீங்கு செய்யாமல் நல்லவர்களாக வாழ்வதின்மூலம் இரட்சிப்பைப் பெற முடியும் என்று நம்பும் எண்ணற்றோர் இந்த உலகத்தில் இருக்கிறார்கள். நீங்களும் உங்கள் இரட்சிப்புக்காகத் தனிப்பட்ட நேர்மை, நற்குணம் அல்லது சுயநீதியின்மீது நம்பிக்கை வைத்திருப்பவராக இருப்பீர்களானால், இந்த உருவகம் உங்களுக்கும் பொருத்தமாக இருக்கிறது.

இந்த நிருபத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் அதிகாரங்களுக்கு நான் எழுதிய விளக்கவுரையில் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்டிருந்தேன். ''போதுமான அளவு நன்மைசெய்திருக்கிறீர்கள் என்பதை உங்களால் எப்படி அறிய முடியும்?'' ''உங்களை நீங்களே இரட்சித்துக் கொள்ள முடியுமானால், பிறகு ஏன் இயேசுவானவர் சிலுவையில் மரிக்க வேண்டியிருந்தது?'' என்பவை அவைகளில் சில கேள்விகளாகும். நீங்கள் நன்மை செய்தால் போதுமானது என்று நினைக்கும் நற்குணமும் நேர்மையும் கொண்ட ஒருவராக இருப்பீர்களானால், யூதர்களுக்குப் பவுல் இந்த நிருபத்தில் எழுதும் சிந்தனைகளை மறுபடியுமாக உங்களுக்குப் பொருத்திப் பாருங்கள்.

நல்லவனாக இருந்து நன்மைகளைச் செய்த ஒரு இளைஞனிடம் இயேசுவானவர் அன்பாகப் பேசினார். நாம் அவனை 'செல்வந்தனான இளம் அதிபதி'' என்று அழைக்கிறோம். அவனை இயேசுவானவர் அன்போடு பார்த்து அவனுடைய நன்னெறிப்பிரகாரமான நேர்மை போதுமானது அல்ல என்று சொன்னார் என்று நாம் வாசிக்கிறோம் (மாற்கு 10:21).

அடுத்த ஐந்து வசனங்களில் (7:8–12) பவுல் தனது எழுத்து நடையில் முக்கியமானதொரு மாற்றத்தை ஏற்படுத்துகிறார். அவர் இதுவரை ''நீங்கள்'' மற்றும் ''சகோதரரே'' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி வந்திருக்கிறார். இப்போது அவர் இதுவரை தான் எழுதி வந்ததைத் தனது சொந்த அனுபவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார். பாவத்தோடு தனது சொந்தப் போராட்டங்களைப்பற்றிக் கூறுகிறார்.

ஆவிக்குரிய பிரமாணம் எண் இரண்டு: பாவம் என்னும் பிரமாணம்

தான் ஏற்கெனவே கூறிய ஒரு சத்தியத்தைப் பவுல் மறுபடியுமாகக் கூறி வலியுறுத்துகிறார்: நியாயப்பிரமாணத்தின் நோக்கம் இரட்சிப்பு அல்ல, ஆனால் நமது பாவத்தையும் இரட்சிப்புக்கான தேவையையும் உணரச் செய்வதே அதன் நோக்கமாகும். பவுலைப் பொருத்தவரையில்

நியாயப்பிரமாணம் என்பது நமது கோணலான வாழ்க்கைக்கு அருகில் தேவன் வைக்கும் நேரான கோலைப்போல இருக்கிறது. அது நமது வாழ்க்கையின் கோணலை எளிதாகச் சுட்டிக்காட்டுகிறது. யாக்கோபு தேவனுடைய வார்த்தை அல்லது பிரமாணம் நமது குறைபாடுகளைக் காட்டும் கண்ணாடியைப் போல இருக்கிறது என்று கூறுவது பவுலின் இந்தச் சிந்தனைக்கு ஒத்ததாக இருக்கிறது.

நியாயப்பிரமாணம் ஒரு கண்டிப்பான உபாத்தியைப் (ஆசிரியர்) போல இருக்கிறது என்றும் பவுல் கூறுகிறார். அது நம்மைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருகிறது (கலா. 3:24). பவுல் மறுபடியுமாகத் தேவனுடைய பிரமாணத்தின் நோக்கத்தையும் மதிப்பையும் வலியுறுத்துகிறார்: ''*ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ. அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே. பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப் பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்தாயிருக்குமே. முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன். இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக் கண்டேன். பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது*'' (ரோமர் 7:7–11).

பிறகு அவர் உண்மையில் தேவனுடைய பிரமாணத்தில் தவறேதும் இல்லை என்ற முடிவுக்கு வருகிறார். அவருடைய பிரச்சினையும் நம்முடைய பிரச்சினையும் தேவனுடைய பிரமாணத்தைக் குறித்தது அல்ல. நமக்கு நாமே பிரச்சினையாக இருக்கிறோம்.

பவுல் கூறுவது தீர்க்கதரிசியாகிய எரேமியாவின் வார்த்தைகளுக்கு ஒத்திருக்கிறது. பிரச்சினையைக் காண வேண்டுமானால் நாம் கண்ணாடியில நம்மை நாமே நோக்கிப் பார்க்க வேண்டும். எரேமியா தொடர்ந்து பாபிலோனியச் சிறையிருப்பின் மூலமாகத் தேவன் நியாயத்தீர்ப்பு வழங்கப் போவதைக் குறித்து எச்சரித்து வந்தார். கர்த்தாலே சுமரும் பாரம் என்னவென்று யாராவது கேட்டால் ''உங்களைத்'' தள்ளிவிடுவேன் என்பதே பாரம் என்று சொல்லும்படி எரேமியாவுக்குக் கூறப்பட்டது (எரேமியா 23:33). அதாவது நீங்களே காரணமாக இருக்கிறீர்கள் என்பது அர்த்தமாகும்.

எரேமியாவின் செய்தியைப் பவுல் தனது சொந்த வார்த்தைகளில் இவ்வாறு கூறுகிறார்: ''*ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளது*

தான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது. இப்படியிருக்க, நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அப்படியல்ல; பாவமே எனக்கு மரணமாயிற்று; பாவம் கற்பனை யினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும், அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே, பாவமாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று'' (வச. 12, 13).

தேவன் நமக்கு நியாயப்பிரமாணத்தை எதற்காகக் கொடுத்தாரோ அந்த நோக்கத்தோடு சேர்த்து அதற்கு அர்த்தம் கண்டு அதைச் செயல் படுத்துவோமானால் தேவனுடைய பிரமாணம் நன்மையானதே என்று பவுலும் இயேசுவானவர் கூறுவதுபோலவே கூறுகிறார் (மத். 5:17–20). தேவனுடைய பிரமாணத்தைத் தேவனுடைய மக்களுக்குச் செயல்படுத் திக் காட்டுவதற்கு முன்பாக இயேசுவானவர் தேவனுடைய அன்பின் முப்பட்டைக் கண்ணாடியின் ஊடாக அதைக் கொண்டுசென்று இவ்வாறு தேவனுடைய பிரமாணத்தை நிறைவேற்றினார். பவுலும் அப்படியே செய்கிறார்; அவர் அதைப் பிரமாணத்தின் ஆவி என்று குறிப்பிடுகிறார் (2 கொரி. 3:6). இப்போது தேவன் நமக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்ததின் நோக்கங்களில் ஒன்றை வலியுறுத்துகிறார் – தேவனுடைய பிரமாணம் பாவத்தின் பிரமாணத்தை வெளிப்படுத்துகிறது.

ஒரு பரிசேயனின் மெய்யான பாவ அறிக்கைகள்

இப்போது பாவத்தின் மீதான வெற்றி அல்லது பரிசுத்தமாக்கப் படுதலைக் குறித்து இதுவரை எழுதப்பட்டுள்ளதிலேயே மிகவும் நேர்மை யானதும், வெளியரங்கமானதும், உதவிகரமானதுமான வார்த்தைகளை எழுதுகிறார். நமது வாழ்க்கையை ''மரணம் என்னும் அரசன்'' அழித்துப் போடும் வரையில் நமது வாழ்க்கையை ஆளுகைசெய்ய விரும்பும் ''பாவம் என்னும் அரசனை'' எதிர்த்து ஒவ்வொரு விசுவாசியும் போராடிக்கொண்டிருக்கிறான். பவுல் எவ்வாறு பரிசுத்தமாக்கப்படுதல் பற்றிய வேதாகம வசனங்களைத் தனது சொந்த வாழ்க்கையில் பொருத்திக் காண்கிறார் என்பதை இந்தப் பகுதி தெளிவாகவும் செயல் பூர்வமாகவும் காட்டுகிறது.

இப்போது பவுல் ஐந்தாம் அதிகாரத்தின் இரண்டாம் வசனத்தில் தான் துவங்கிய போதனையின் மையத்துக்கு வருகிறார். ''*அவர் (இயேசு) மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம்*'' என்று அந்த வசனம் கூறுகிறது. இங்கேதான் நீதிமான் என்று அறிவிக்கப்பட்ட மக்கள் எப்படி வாழ வேண்டுமோ அப்படி

வாழ்வதற் குத் தேவையான கிருபையை எப்படிப் பெறுவது என்று அவர் ரோம விசுவாசிகளுக்கும் நமக்கும் கூறுகிறார்.

இந்த வசனத்தைத் தொடர்ந்து நாம் தேவனுடைய கிருபையைப் பெறும்படியாகச் செய்யும் அனைத்துக்காகவும் களிகூர வேண்டும் என்று போதிக்கிறார். பாடுகளும்கூட நாம் தேவனுடைய கிருபையைப் பெறும்படி செய்கின்றன. இதற்குப் பிறகு அவர் நான்கு அரசர்களைக் குறித்த உருவகங்களைக் கூறினார்: பாவம் என்னும் அரசன், மரணம் என்னும் அரசன், இராஜாவாகிய இயேசு, இராஜாக்களாகிய நீங்களும் நானும். நமது வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும்படி தேவ ஆவியானவர் வந்து நம்மை முற்றிலும் ஜெயங்கொள்ளும்படி செய்யும்போது நாமும் இராஜாக்களாகிறோம். பிறகு அவர் ஆறாம் அதிகாரத்தில் ஞானஸ்நானம், மரணம், உயிர்த்தெழுதல், அடிமைத்தனம் ஆகிய உருவகங்களைப் பயன்படுத்தி, இயேசுகிறிஸ்துவில் விசுவாசத்தின் மூலம் நீதிமான் என்று அறிவிக்கப்பட்ட விசுவாசி ஒருபோதும் பாவம் தனது வாழ்க்கையைக் கட்டுப்படுத்த இடம்கொடுக்கக் கூடாது என்று போதித்தார்.

இப்போது பவுல் நான்கு பிரமாணங்களின் மூலமாகத் தனது ஒழுங்குரீதியான போதனையைத் தொடருகிறார். தனது சொந்தப் போராட்டங்களை நம்மோடு பகிர்ந்துகொண்டு, தனது வெளியரங்கமான அறிக்கையிடுதலின் மூலம் இந்தப் பிரமாணங்களை எடுத்துக்காட்டி விளக்குகிறார். பிறகு தனது வெற்றிக்கான திறவுகோலை நம்மோடு பகிர்ந்துகொள்கிறார். பாவம் தனது வாழ்க்கையில் ஆளுகைசெய்ய இடம்கொடுக்கக் கூடாது என்று அவர் தீர்மானித்தார். நாமும்கூட இவ்வாறு செய்து வெற்றியைப் பெற முடியும். இந்தக் கருப்பொருள் எட்டாம் அதிகாரத்தின் பதின்மூன்றாம் வசனத்தில் துவங்கி, எட்டாம் அதிகாரத்தின் முடிவுவரையில் தொடருகிறது. அது பதினோராம் அத்தியாயத்தின் முடிவுவரையிலும் செல்லுகிறது என்றும்கூடக் கூறலாம்.

இந்த வெளியரங்கமான சுயசரிதைப் பகுதியை நீங்கள் வாசிக்கும் போது – இது அப்போஸ்தலனின் ஆவிக்குரிய பதிவேட்டில் எழுதப் பட்டுள்ள விவரங்களைப்போலக் காணப்படுகிறது – பவுல் இங்கே விவரிக்கும் நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களைப் பாருங்கள். தேவனுடைய பிரமாணத்தை நேசித்து, வேறு எவரையும்விட அதைக் கைக்கொள்ள அதிகமாக முயன்ற ஒருவரின் ஆவிக்குரிய பதிவேட்டைப் படிக்கிறீர்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

''*மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு,*

மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன். எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். இப்படி நான் விரும்பாததைச் செய்கிற வனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளு கிறேனே. ஆதலால், நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக் கிறேன்; நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக் கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய் கிறேன்.

''அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. ஆனபடியால் நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண் டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனுக் கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக் கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக்கொள்ளுகிறது.

''நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினா லேயோ பாவப் பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்'' (7:14–25).

பாவத்தை வெற்றிகொள்ளுவதற்கான தனது போராட்டத்தைப் பற்றிப் பவுல் கூறும் துவக்க வசனம் அவர் தன்னைப்பற்றி அறிந்து கொண்டதற்குப் பொருத்தமாக இருக்கிறது. ''நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்'' என்று அவர் கூறுகிறார். தனது மாம்சத்தில் நன்மை எதுவுமில்லை என்று அவர் தொடர்ந்து கூறுகிறார்.

பவுல் தனது எழுத்துக்களில் அடிக்கடி ''மாம்சம்'' என்ற இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார். எனவே அவர் என்ன அர்த்தம் கொள்ளுகிறார் என்பதை நாம் புரிந்துகொள்வது முக்கியமாகும். எடின்பரோ பல்கலைக்கழகத்தில் வேதாகமப் பேராசிரியராக இருக்கும் ஒரு கிரேக்க மொழி வல்லுநர், பவுல் ''தேவனுடைய உதவியைப் பெறாத மானிட இயல்பையே'' இப்படிக் குறிப்பிடுகிறார் என்று சொல்லுகிறார்.

தனது மாம்சத்தில் நன்மை எதுவுமில்லை என்று அப்போஸ்தலன் முடிவாகக் கூறும்போது, தனது மானிட இயல்பு தேவனுடைய உதவியைப் பெறாதிருக்கும்போது அதில் எந்தவித நன்மையும் இருப்ப தில்லை என்றே கூறுகிறார். மாம்சத்தில், தேவனுடை.ய உதவியில்லாமல் வாழ்கிறவர்கள், மானிட இயல்பின் மதிப்பீடுகளையும் தத்துவத்தையும் ஏற்றுக்கொண்டு அதில் வாழ்கிறார்கள். அவர்கள் கிருபையையோ அல்லது தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்படும் சத்தியத்தையோ பெறுவதில்லை.

தாங்கள் விசுவாசத்தின்மூலம் நீதிமானாக்கப்பட்டிருக்கிறபடியால் நேர்மையாக வாழ வேண்டுமென்று வாஞ்சிக்கும் எந்தவொரு விசுவாசிக்கும் இது மிகவும் முக்கியமான செயல்பூர்வமான வழிநடத்து தலைக் கொடுக்கிறது. பவுல் தனது சொந்த இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, தனது மானிட இயல்பில் காண்பதைக் குறித்து அவர் நேர்மையாகவும் வெளியரங்கமாகவும் அறிக்கையிடுகிறார். அவர் நன்மையான எதையும் காணமுடியவில்லை என்பது மட்டுமின்றி, தான் நன்மைசெய்ய வாஞ்சித்தாலும், தீமையைச் செய்ய வைக்கும் ஒரு பிரமாணத்தையும் அதில் காண்கிறார்.

அதாவது, அவர் தனது மானிட இயல்பை நோக்கிப் பார்த்தபோது, பாவப் பிரமாணத்தைக் கண்டுகொண்டார். தேவனுடைய பிரமாணம் அவர் என்ன செய்யவேண்டுமென்று கூறுகிறதோ அதைப் பவுல் அறிந்துகொண்டார். அவர் தேவனுடைய பிரமாணம் நன்மையானது என்று விசுவாசித்தார். உண்மையில், அவர் தேவனுடைய பிரமாணத்தை நேசித்தார். ஒரு ஒழுக்கமுள்ள பரிசேயனாக, தேவனுடைய பிரமாணங் களைக் கைக்கொள்ளுவது சுயசித்தத்தின் சக்திக்கடுத்தது என்றுகூட அவர் தனக்குத்தானே சொல்லியிருக்கலாம். என்றாலும், அவர் தேவனுடைய பிரமாணத்துக்குக் கீழ்ப்படியும்படி தீர்மானித்தாலும், இந்தப் பாவப்பிர மாணத்தின் காரணமாக, தனது சித்தத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியைத் தான் இழந்துபோயிருப்பதை அவர் இறுதியாகக் கண்டுகொண்டார்.

பாவப்பிரமாணம் தனது ''மனதின் பிரமாணத்தோடும்'' போர் புரிகிறது என்பதையும் அவர் முடிவாகக் கண்டுகொண்டார். தனது மனோசக்தியைக்கொண்டோ அல்லது அறிவைக் கொண்டோ தான் பாவத்துக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெறவில்லை என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். தான் நிர்ப்பந்தமான மனுஷன் என்று அறிக்கையிட்டபிறகு அவர் விடுதலைக்காகக் கதறுகிறார். பிறகு அவர் பாவத்துக்கு எதிரான போராட்டம் ஒரு ஆவிக்குரிய போராட்டம் என்றும் உள்ளுக்குள் ஆராய்ந்து பார்ப்பதின்மூலம் அதில் வெற்றிபெற முடியாது என்றும் அறிக்கையிடுகிறார். பாவத்துக்கு எதிரான போராட்டத்துக்கு

உதவியாக அவரோ அல்லது நாமோ நமக்குள் எதையும் பெற்றிருக்க வில்லை. நமது மானிட இயல்போடு தேவன் ஒரு ஆவிக்குரிய பரிமாணத்தைச் சேர்க்கும்போதே நாம் பாவத்துக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெற முடியும். நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும் போதும் நமது மாம்சத்திலுள்ள பாவப்பிரமாணம் அகற்றப்படவில்லை என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும்போது, நமது மாம்சத்தோடுகூட ஆவிக்குரியநீதியானதும், இயல்புக்கு அப்பாற்பட்டதும், அற்புதமானதுமான ஒன்று கூட்டிச் சேர்க்கப்படுகிறது என்று பவுல் அடுத்த அதிகாரத்தில் கூறுகிறார். என்றாலும், அந்த அற்புதத்தை நாம் பெற்ற பிறகும் நாம் வாழ்க்கையின் கடைசி வரையில் அந்தப் பாவப் பிரமாணத்தை எதிர்த்துத் தொடர்ந்து போராட வேண்டியிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் அற்புதத்தின் மூலமாக, உயிர்த்தெழுந்த ஜீவனுள்ள கிறிஸ்து நமது இருதயத்தில் ஜீவிக்கும்போது, நம்மில் இருப்பவர் பாவப்பிரமாணம் செயல்படும்படி தூண்டுகிறவனைவிட வல்லவர் என்பதை நாம் கண்டுகொள்வோம். கிறிஸ்துவில் நாம் அந்தப் பிசாசானவனுக்கு எதிரான வெற்றியைப் பெறுவோம்.

ரோமர் எட்டாம் அதிகாரம்: வெற்றி!

பவுலின் மேலும் இரண்டு ஆவிக்குரிய பிரமாணங்கள்

நாம் இந்த நிருபத்தின் எட்டாம் அதிகாரத்திலிருந்து ஒன்பதாம் அதிகாரத்துக்குச் செல்லும்போது, பவுல் இந்த நிருபத்தை எழுதியபோது அது அதிகாரங்களாகவும் வசனங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். அடிக்கடி ஒரு முக்கியமான போதனைக்கு நடுவில் இந்த அதிகாரப் பிரிவுகள் குறுக்கிடுவதை நாம் காணலாம். இங்கேயும் பவுலின் போதனையின் ஏவுதல் பெற்ற விவாதத்தில் இந்தப் பிரிவு குறுக்கிடுகிறது.

எட்டாம் அதிகாரத்தின் முதல் வசனம் ''ஆனபடியால்'' என்ற சொல்லோடு துவங்குவதைக் கவனியுங்கள். இந்த வார்த்தை அவர் எட்டாம் அதிகாரத்தில் போதிப்பதை இனிமேல் கூறப்போவதோடு இணைக்கிறது. அவர் தனது ஆவிக்குரிய பதிவேட்டில் வெளியரங்கமாகவும் நேர்மையான வகையிலும் கூறியிருப்பதை அவர் தொடர்ந்து எடுத்துச் சொல்லப்போகிறார். பாவத்துடனான தனது சொந்தப் போராட்டதைக் குறித்த விவரங்களை அவர் தொடருகிறார்.

அவருடைய இந்த ஆவிக்குரிய பதிவேட்டில் மூன்றாவது மற்றும் நான்காவது ஆவிக்குரிய பிரமாணங்களைக் கவனமாகப் பாருங்கள்: *''ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து,*

மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

''மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார். அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்திற்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்.

''தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

''ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்'' (8:1–13).

ஆவிக்குரிய பிரமாணம் எண் மூன்று: கிறிஸ்து இயேசுவில் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்

இந்த எட்டாம் அதிகாரத்தின் துவக்க வசனத்தில் மூன்று முக்கியமான சத்தியங்கள் இருக்கின்றன. பவுல் முதலாம் அதிகாரத்தின் பதினேழாம் வசனத்தில் துவங்கிய போதனைக்கு இந்த ''ஆனபடியால்'' என்ற சொல் முடிவுரையை அறிமுகம் செய்கிறது. தங்கள் மாம்ச

இயல்பின்படி நடக்காமல், கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர் களாயிருந்து, ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. விசுவாசிக்காதவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்று இயேசுவானவர்,பவுல் இருவருமே போதித்திருக்கிறார்கள் (யோவான் 3:18). தங்களுடைய தனிப்பட்ட இரட்சிப்புக்காகத் தேவனுடைய குமாரனின் கிரியையின்மீது விசுவாசம் வைப்பவர்கள் நித்திய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படு கிறார்கள் என்று இருவருமே போதித்திருக்கிறார்கள்.

நமது ஒவ்வொரு சிந்தனை, வார்த்தை. செயலிலும் தேவனை மகிமைப்படுத்தும் தகுதிநிலையிலிருந்து நாம் குறைவுபடும்போது உயிர்த்தெழுந்த ஜீவனுள்ள கிறிஸ்து நமக்கு ஆக்கினைத் தீர்ப்பளிப்ப தில்லை என்றும் பின்னர் பவுல் இந்த அதிகாரத்தில் போதிக்கிறார். தேவன் நமது பரிபூரண பரம பிதாவாக இருக்கிறார். ஒரு நல்ல தகப்பனாக அவர் தமது பிள்ளைகளின்மீது பரிதாபப்படுகிறார், நாம் வெறும் மண்ணென்று அவர் நினைவில் வைத்திருக்கிறார் (சங். 103:14).

உலகத்திலுள்ள ஒரு தகப்பன் தனது பிள்ளைக்கு நடக்கச் சொல்லிக் கொடுக்கும்போது, அவன் தடுமாறி விழுந்தால் அவனைத் திட்டுவாரா அல்லது தண்டிப்பாரா? நாம் நமது பிள்ளைகளுக்கு நல்ல காரியங்களைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் நாம் வேண்டிக் கொள்ளும்போது நிச்சயமாக நமக்குப் பரிசுத்த ஆவியானவரையும் தம்மோடுள்ள நல்லுறவையும் அருளுவார் என்று இயேசுவானவர் போதித்திருக்கிறார் (லூக்கா 11:11–13). இப்படிப்பட்ட பிதாவானவர் நாம் தவறும்போது நமக்கு ஆக்கினைத் தீர்ப்பளிக்க மாட்டார்.

பவுல் இரண்டாவது முக்கியமான சத்தியத்தைப் போதிக்கும்போது யாக்கோபு கூறுவதோடு ஒத்துப் போகிறார். ''விசுவாசக் கிரியைகள்'' மற்றும் ''விசுவாச நடக்கையைக்'' குறித்து அவர் போதிக்கிறார் (யாக். 2:14–26). விசுவாசம் மட்டுமே நம்மை இரட்சிக்கும் என்றாலும், இரட்சிக்கும் விசுவாசம் எப்போதும் தனித்து வருவதில்லை. விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், ஆக்கினைத் தீர்ப்புக்குத் தப்பியவர்கள், தாங்கள் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படி நடப்பதைச் செயல்பூர்வமாகக் காட்டி தங்கள் விசுவாசத்தை உறுதிப் படுத்துகிறார்கள். மாம்சத்தின்படி நடப்பதற்கும் மாம்சத்தில் இருப்பதற்கும் இடையே வேறுபாடு இருக்கிறது. மாம்சத்தின்படி நடவாமலிருப்பதை ஆவிக்குரிய மக்கள் தெரிந்துகொள்ளுகிறார்கள். மாம்சத்தில் இருப்பது என்பது ஆவிக்குரியரீதியல்லாத இயல்பான மனிதன் தேவனோடு உறவில்லாத நிலையில் இருப்பதாகும்; அவனால் ஆவிக்குரிய காரியங் களைப் புரிந்துகொள்ள முடியாது (1 கொரி. 2:14).

இந்த முதலாவது வசனத்தில் பவுல் போதிக்கும் மூன்றாவது சத்தியம் அவர் புதிய ஏற்பாட்டில் இருநூறு தடவைக்கும் மேலாகப் பயன்படுத்தும் ஒரு சொல்லில் இருக்கிறது. இந்த மூன்றாவது ஆவிக்குரிய பிரமாணத்தைக் கண்டுகொண்ட நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளின் நிலையை விவரிக்கும்போது பவுல் பெரும்பாலும் அவர்கள் ''கிறிஸ்துவில்'' இருப்பதாகக் குறிப்பிடுகிறார். அவர் இவ்வாறு குறிப்பிடுவது ஒரு திராட்சக் கொடி செடியோடு பிணைக்கப்பட் டிருப்பதுபோல அவர்கள் கிறிஸ்துவோடு பிணைக்கப்பட்டிருப்பதாக அர்த்தமாகும். அந்தக் கொடி கனிகொடுக்கும்படியாகச் செடியிலிருந்து ஜீவனைப் பெற்றுக் கொள்ளுகிறது (யோவான் 15:1–16).

பிறகு பவுல் தனது மூன்றாவது ஆவிக்குரிய பிரமாணத்தை அறிமுகம் செய்கிறார்: ''*கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.*'' இந்த மூன்றாவது பிரமாணம் நமக்கு என்ன செய்யக் கூடும் என்பதை விவரிக்கும்போது, அவர் மறுபடியுமாகத் தனது இரண்டாவது பிரமாணத்துக்குச் சென்று அதோடு இரண்டு சொற்களைக் கூட்டுகிறார். அதை அவர் ''பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணம்'' என்று குறிப்பிடுகிறார். இது பவுலின் நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களையும் அவர் ஐந்தாம் அதிகாரத்தில் அறிமுகம்செய்த நான்கு ராஜாக்களோடும் தொடர்புபடுத்துகிறது. பாவம் என்னும் அரசனையும் மரணம் என்னும் அரசனையும் நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்கள் அல்லவா? எப்போதுமே பாவத்தைத் தொடர்ந்து அதன் சம்பளமாகிய மரணம் வருகிறது.

முதல் இரண்டு வெற்றியாளர்களும் மோசமான செய்தியாகவும், அடுத்த இரண்டு வெற்றியாளர்களும் நற்செய்தியாகவும் இருப்பது போல, முதல் இரண்டு ஆவிக்குரிய பிரமாணங்களும் மோசமான செய்தியாகவும், அடுத்த இரண்டு ஆவிக்குரிய பிரமாணங்களும் நற்செய்தியாகவும் இருக்கின்றன. இந்த மூன்றாவது பிரமாணம் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து நம்மை விடுவிக்கிறது என்பதே அதைக் குறித்த நற்செய்தியாகும். ஒரு பெரிய விமானம் ஓடுபாதையில் வேகமாக ஓடுவதைக் கற்பனைசெய்து பாருங்கள். அது அதிகமான வேகத்தைப் பெற்றவுடன் ஓடுபாதையிலிருந்து எழும்பி 375 பயணிகளோடும் பல டன் எடையுள்ள சாமான்களோடும் வானத்தில் பல்லாயிரம் மீட்டர் உயரமாக எழும்பிப் பறக்கிறது.

ஒருமுறை நான் இந்த மூன்றாவது பிரமாணத்தைப் பற்றிப் பிரசங்கித்தபோது, இந்த எடுத்துக்காட்டைப் பயன்படுத்தினேன். நான் அடிக்கடி ஜெட் விமானங்களில் பயணம்செய்தாலும் அவை எப்படி மேலே எழும்புகின்றன என்று எனக்குத் தெரியாது என்று சொன்னேன்.

இந்தப் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு பயபக்தியுள்ள பௌதிகப் பேராசிரியர் பிறகு இதை எனக்கு விளக்கிக் கூறினார்.

அவர் கொடுத்த விளக்கத்தின்படி, அந்தப் பெரிய விமானம் ஓடு பாதையில் ஓடும்போது, அதன் வேகமும் அதன் இயந்திரங்களின் உந்துவிசையும் சேர்ந்து, வளிவியக்க விதியானது (aero-dynamics) புவியீர்ப்பு விதியை மேற்கொள்ளும்படி செய்கின்றன. இவ்வாறு வளிவியக்க விதி புவியீர்ப்பு விதியை மேற்கொள்ளும்போது, விமானம் ஆகாயத்தில் எழும்பி பல்லாயிரக்கணக்கான மீட்டர் உயரத்தில் பறந்து, பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர் தூரம் பயணம்செய்து தான் செல்ல வேண்டிய இடத்தைச் சென்றடைகிறது.

இப்போது இரண்டாவது ஆவிக்குரிய பிரமாணமாகிய பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணம் ‘‘ஆவிக்குரிய புவியீர்ப்பு விதி’’ என்று வைத்துக்கொள்ளுங்கள்; அது ஆவிக்குரியரீதியாக நம்மை மேலெழும்ப விடாமல் கீழே பிடித்து நிறுத்திவிடுகிறது. பவுல் அறிமுகம் செய்யும் மூன்றாவது ஆவிக்குரிய பிரமாணமாகிய கிறிஸ்து இயேசு வினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை நாம் ‘‘ஆவிக்குரிய வளிவியக்க விதி’’ என்று கூறலாம். அது நம்மைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தின் சக்தியிலிருந்து விடுவித்து மேலே எழும்பும்படி செய்கிறது.

இந்த மூன்றாவது ஆவிக்குரிய பிரமாணத்தின் நற்செய்தி புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்திலிருந்தே அதில் ஒரு பகுதியாகக் காணப் படுகிறது. அப்படியானால், நீதிமானாக்கப்பட்ட அனைத்து விசுவாசி களும் பாவத்தின் சக்தி மற்றும் பின்விளைவுகளிலிருந்து விடுபட்டு அதை மேற்கொள்ளுவதை எதிர்பார்க்கலாம் அல்லவா? ஆனால் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு சபைகளுக்கு வருபவர்களின் உண்மையான அனுபவம் எப்படிப்பட்டதாக இருக்கிறது?

கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளாகப் போதகராக இருக்கும் ஒருவர் கவனித்ததிலிருந்து, நம்மில் அதிகமானவர்கள் அதிகமான வேளைகளில் வாழ்க்கையின் ஓடுபாதையில் மேலே எழும்பாமல் தரையிலேயே இருக்கும் விமானங்களைப் போலவே இருக்கிறார்கள் என்றே நான் முடிவுக்கு வந்திருக்கிறேன். ஆவிக்குரிய புவியீர்ப்பு விசையை மேற்கொண்டு இருபது, முப்பது, நாற்பது அல்லது வாழ்நாள் முழுவதும் மேலே பறக்கக் கூடியவர்கள் தரையிலேயே இருக்கும் விமானத்தைப் போல இருக்கிறார்கள்! நம்மால் ஏன் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணங்களை மேற்கொண்டு சுயாதீனமுள்ளவர்களாக மேலே எழும்ப முடியவில்லை?

ஆவிக்குரிய பிரமாணம் எண் நான்கு: ‘‘சிந்தையின் போக்கு’’ அல்லது சிந்திக்கும் வழி பற்றிய பிரமாணம்

நாம் இந்தப் பெரிய அப்போஸ்தலனின் நான்காவது பிரமாணத் தைப் புரிந்துகொள்ளாவிட்டால், தேவனுடைய கிருபையை அல்லது இந்த மூன்றாவது பிரமாணத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்பதையும் அறிய மாட்டோம். இந்த வசனங்களை நீங்கள் மறுபடியுமாக வாசிக்கும்போது இந்த நான்காவது ஆவிக்குரிய பிரமாணத்தைக் கண்டுபிடியுங்கள்: ‘‘*அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிற வர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படி யென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்*’’ (வச. 5–8).

சிந்தையின் போக்கு அல்லது சிந்திக்கும் வழி, விளையாட்டு வீரர்களுக்கும் விளையாட்டு அணிகளுக்கும் முக்கியமான ஒரு காரிய மாகும். அடிக்கடி சிறப்பான அணியினர் உலகக் கோப்பைப் போட்டி யிலோ அல்லது ஒலிம்பிக் போட்டிகளிலோ பரிசுபெறத் தவறுவதை நாம் காண்கிறோம். சிறப்பான சிந்தையின் போக்கைக் கொண்ட தனிப்பட்ட வீரரோ அல்லது அணியினரோதான் பெரும்பாலும் வெற்றி பெறுகிறார் கள்.

போரைவிடச் சமாதானமே முக்கியமானது என்று உலகத் தலைவர் களுக்கு வலியுறுத்தி போரைத் தவிர்க்கும்படி செய்ய முயலும் அரசியல் வாதிகள் இந்த அறைகூவல் விடுக்கும் பேரங்களில் ஈடுபடுவதற்கு முன்பாகத் தங்கள் சிந்தையை ஒருமுகப்படுத்திக்கொள்கிறார்கள். விற்பனையாளர்கள், தீவிரமான அறுவைச் சிகிச்சைகளைச் செய்யும் மருத்துவர்கள், வாழ்க்கையின் ஒவ்வொரு தொழிலிலும், வியாபாரத் திலும், நடக்கையிலும் இருக்கும் மக்கள் அனைவரும் வெற்றிபெற வேண்டுமானால் சரியான சிந்தையில் தங்களை ஒருமுகப்படுத்த வேண்டும்.

பாவத்தின்மீது நமது வெற்றியைப் பொருத்தமட்டில் சிந்தையின் போக்கு என்ற செயல்பூர்வமான காரியத்துக்கு இடம் இருக்கிறதா அல்லது இல்லையா? மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் பவுல் தனது நான்காவது ஆவிக்குரிய பிரமாணத்தைப் பற்றிக் கூறும்போது, அது பாவத்தின் சக்தியின்மீதான வெற்றியில் முக்கிய பங்கைப் பெற்றிருக் கிறது; இதைப் பற்றிப் பவுல் குறிப்பிடும்போது ஐந்து முறை சிந்தையைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய பிரமாணம் பாவப் பிரமாணத்தை வெளிப்படுத்தியிருக்கிறதா? கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் அற்புதமான நற்செய்தியை நீங்கள் கண்டுகொண்டிருக்கிறீர்களா? பாவத்தின் சக்தியை நீங்கள் வெற்றிகொண்டிருக்கிறீர்களா? ''ஆவிக்குரிய புவியீர்ப்பு விசையை'' நீங்கள் ''ஆவிக்குரிய வளிவியக்கத்தினால்'' வெற்றிகொண்டிருக் கிறீர்களா? அல்லது ஆவிக்குரியரீதியாக மேலெழும்பாமல் உங்கள் ஆவிக்குரிய ''ஜெட் இயந்திரங்களை'' ஓடுபாதையிலேயே நிறுத்திக் கொண்டிருக்கிறீர்களா? இதற்கு நீங்கள் ''ஆமாம்'' என்று பதிலளிப்பீர் களானால், பவுல் அப்போஸ்தலன் கூறும் இந்த நான்காவது ஆவிக்குரிய பிரமாணமாகிய சிந்தைப் போக்கின் பிரமாணம் உங்களுக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது.

பவுல் அப்போஸ்தலன் கூறுகிறபடி, நமக்குள் ஜீவிக்கும் கிறிஸ்துவினால் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை நாம் பெற்றிருக்கும்போது, நாம் இந்த இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ள முடியும்: மாம்சத்தின்படியான (தேவனுடைய உதவியைப் பெறாத நமது மானிட இயல்பு) நடக்கை அல்லது பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்கு நம்மைக் கீழ்ப்படுத்தி வாழும் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ள முடியும் (கலா. 5:16–23).

பவுல் பின்னர் மாம்சத்தில் நடவாமல் ஆவியில் நடப்பதைக் குறித்துப் பேசுகிறார். இந்த எச்சரிப்பையும் நமக்குக் கொடுக்கிறார்: ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணாவிட்டால், நாம் அவருடையவர் களல்ல, நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் அல்ல. இது மாம்சத்தின் படியாக வாழ்வதோ அல்லது மாம்சத்தில் நடப்பதோ அல்லது மாம்ச சிந்தையைப் பெற்றிருப்பதோ அல்ல.

பவுல் முழு மானிடக் குடும்பத்தாரையும் இரண்டு பிரிவினராகப் பிரிக்கிறார்: ஆவிக்குரிய மக்கள், ஆவிக்குரிய மக்களல்லாதோர். இன்னும் மாம்சத்தில் இருக்கும் மனிதன் ஆவிக்குரியவனாக இல்லாதிருக் கிறான் அல்லது பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறபடி ஜென்மசுபாவமான மனிதனாக இருக்கிறான். இந்த ஜென்மசுபாவமுள்ள மனிதனால் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ள முடியாது என்று பவுல் எழுதுகிறார். அவை அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றுகின்றன. ஏனென்றால் ஆவிக்குரிய மக்களால் மட்டுமே ஆவிக்குரிய சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடியும் (1 கொரி. 2:9–16).

இந்த அப்போஸ்தலன் மாம்சத்தின்படி வாழுவதைக் குறித்து எழுதும்போது, ''மாம்சத்தில்'' என்ற வெளிப்பாட்டில் அவர் போதிப்பதைவிட முற்றிலும் வேறுபட்ட ஒரு காரியத்தைப் போதிக்கிறார்.

மாம்சத்தின்படி வாழ்வதைத் தெரிந்துகொள்ளும் ஆவிக்குரிய மக்கள் தாங்களாகவே மாம்சசிந்தையைப் பெற்றிருப்பதைத் தெரிந்துகொள்ளு கிறார்கள் என்று அவர் கூறுகிறார். ஆவியின்படி வாழ்வதைத் தெரிந்து கொள்ளும் ஆவிக்குரிய மக்களும் ஆவியின் சிந்தையைத் தாங்களாகவே தெரிந்துகொள்ளுகிறார்கள்.

கிறிஸ்துவைப் பின்பற்றும்படி ஒப்படைப்பைக் கொண்டுள்ள ஆவிக்குரிய மக்களும்கூட மாம்சத்தின்படி வாழும்போது அவர்களால் தேவனைப் பிரியப்படுத்த முடியாது என்று பவுல் அறிவிக்கிறார். நாம் நமது சிந்தையை மாம்சத்தில் வைக்கும்போது, பாவம் எப்போதுமே அதற்குரிய சம்பளத்தைக் கொண்டுவரும் என்பதை ஆவிக்குரியமக்கள் கண்டுகொள்ளுவார்கள் என்று அவர் கூறுகிறார். இந்தச் சம்பளத்தை அவர் ''மரணம்'' என்று விவரிக்கிறார் (ரோமர் 6:23; 8:2). பவுல் மரணம் என்பதின்மூலம் சரீரப்பிரகாரமான மரணத்தையோ அல்லது நித்திய மரணத்தையோ குறிக்கவில்லை. தேவனிடமிருந்து பிரிக்கப்படுவதையே அவர் குறிப்பிடுகிறார். தேவனை அறிவதின் மூலம் கிடைக்கும் தரமான வாழ்க்கையிலிருந்தும் அவர்கள் பிரிக்கப்படுகிறார்கள் (யோவான் 17:3).

ஆவிக்குரியரீதியல்லாத மக்களால் தெரிந்துகொள்ள முடியாத ஒன்றை ஆவிக்குரிய மக்களால் தெரிந்துகொள்ள முடியும். ஆவியின் சிந்தையைப் பெறுவது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு வழிநடத்துகிறது – இதை இயேசுவானவர் ''பரிபூரண ஜீவன்'' என்று அழைக்கிறார் (யோவான் 10:10). யோவான் அப்போஸ்தலனும் இந்தச் சத்தியத்தைத் தொகுத்துக் கூறியிருக்கிறார்: ''*தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்*'' (1 யோவான் 5:11, 12).

நாம் நமது சிந்தையை ஆரோக்கியமாக வைத்திருப்போமானால், நமது முழுச் சரீரமும் வெளிச்சமாயிருக்கும் என்றும், நமது சிந்தை தெளிவில்லாதிருக்கும்போது முழுச் சரீரமும் இருளாயிருக்கும் என்றும் இயேசுவானவர் போதித்திருக்கிறார். வெளிச்சத்தினால் நிரப்பப்பட்ட வாழ்க்கைக்கும் (சந்தோஷம்) இருளினால் நிரப்பப்பட்ட வாழ்க்கைக்கும் (சந்தோஷமின்மை) இடையேயுள்ள வேறுபாடு நாம் காரியங்களைக் காணும் வழியிலேயே இருக்கிறது என்று அவர் கூறியிருக்கிறார் (மத். 6:22–23). ''ஆவிக்குரிய இரட்டைப் பார்வையைக்'' குறித்த எச்சரிப்பை இயேசுவானவர் கொடுத்திருக்கிறார். இருமனமுள்ளவன் தனது சிந்தனையிலும், உணர்விலும், தீர்மானத்திலும் நிலையற்றவனாயிருக் கிறான் என்று யாக்கோபு 1:8 வசனம் கூறுகிறது. பவுலும் ரோமருக்கு

எழுதிய இந்த நிருபத்தின் ஆறாம், ஏழாம் மற்றும் எட்டாம் அதிகாரங்களில் அதே எச்சரிப்பைக் கொடுக்கிறார்.

இயேசுவானவரும், பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் இந்த ஆரோக்கியமில்லாத சிந்தையைப் பல வழிகளில் விவரித்திருக்கிறார்கள். எலியா தீர்க்கதரிசி தனது நாட்களில் தேவனுடைய மக்களுக்கு இவ்வாறு அறைகூவல் விடுத்தார்: ''*நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்*'' (1 இரா. 18:21),

உயிர்த்தெழுந்த ஜீவனுள்ள கிறிஸ்துவிடமிருந்து எபேசு சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தை அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிட்டிருக்கிறார். பத்மு தீவில் அவர் இருந்தபோது, புதிய ஏற்பாட்டின் இறுதி நூலாகிய வெளிப்படுத்தலை அவர் ஜீவனுள்ள கிறிஸ்துவிடமிருந்து வெளிப்பாடாகப் பெற்றார். ''*உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்*'' என்பதே அந்தச் செய்தியாகும் (வெளி. 3:15, 16),

பேதுருவோடும் பவுலோடும் புதிய ஏற்பாட்டுத் திருச்சபையின் முதல் தலைமுறையின் பெரிய தலைவராக இருந்த யாக்கோபு, விசுவாசிகள் தாங்கள் என்னசெய்ய வேண்டும் என்பதை அறியாத நிலைக்கு வரும்போது, ஞானத்துக்காகத் தேவனிடம் வேண்டிக்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார். நாம் ஞானத்துக்காக இவ்வாறு தேவனிடம் வேண்டிக்கொள்ளும்போது, நமது விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும் என்று அவர் விசுவாசிகளாகிய நமக்கு அறைகூவல் விடுக்கிறார். நாம் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படும் கடல் அலையைப் போல இருக்கக்கூடாது. இயேசுவானவர், பவுல், எலியா, யோவான் ஆகிய இவர்கள் சுட்டிக்காட்டிய அதே பிரச்சனையை யாக்கோபும் சுட்டிக் காட்டுகிறார்: ''*இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.*''

தனிப்பட்ட செயல்படுத்துதல்

ஒரு பொதுவான மனோதத்துவ போராசிரியர் இந்தப் பிரச்சினையை ''தர்க்கரீதியாக இறுக்கமான அறைகள்'' (logic-tight compartments) என்று அழைப்பதை நான் கேட்டிருக்கிறேன். அவர் நாம் நமது சிந்தையை ஒரு வட்டத்தைப் போலக் காண வேண்டும் என்று கூறுகிறார். அந்த வட்டத்துக்குள்ளாக நாம் ஒரு ஆக்கபூர்வமான சிந்தனையைப் பெற்றிருக்கிறோம்; நான் விசுவாசத்தைப் பெற்றிருக்கிறேன், அதனால் எதைக்குறித்தும் கவலைப்படப்

போவதில்லை என்பது ஒரு ஆக்கபூர்வமான சிந்தனையாகும். பிறகு முதல் சிந்தனைக்கு எதிரான ஒரு சிந்தனையை அந்த வட்டத்துக்குள் சேர்க்கிறோம். இந்த இரண்டு சிந்தைகளும் நமது மனதில் ஒன்றோடொன்று போரிடும்போது, அவை வயிற்றுப் புண், அதிகமான இரத்த அழுத்தம் போன்ற சரீரப்பிரகாரமான உபாதைகளை உண்டாக்குகின்றன. இது நம்மைப் பயப்படச் செய்கிறது, நாம் உண்மையில் பயந்தவர்களாக ஓடிக்கொண்டிருக்கிறோம்!

இந்த முரண்பாடான சிந்தனைகளோடு வாழ்வதற்காக, நாம் நமது மனதின் நடுவில் ஒரு கற்பனையான சுவற்றை எழுப்பி, இந்த இரண்டு சிந்தனைகளையும் இரண்டு தர்க்கரீதியான இறுக்கமான அறைகளாகப் பிரிக்கிறோம். நாம் கவலைப்படும்போது, நாம் விசுவாசத்தைப் பெற்றிருக்கிறோம் என்ற உண்மையை நினைக்க மறுக்கிறோம். நமக்கு விசுவாசம் இருப்பதால் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லையென்று நமக்கும் மற்றவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறோம்.

நாம் நமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி, நாம் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை என்று நமக்கு நாமே சொல்லிக்கொள்ளும்போது, நமக்குச் சரீரப்பிரகாரமான அடையாளங்களான உபாதைகள் உண்டு என்று நினைக்க மறுக்கிறோம். இந்த அடையாள உபாதைகள் நாம் நமது கவலையை மறுக்கமுடியாதபடி செய்துவிடுகின்றன. இப்போது நமது சிந்தை கூட்டல் குறிகளாலும் கழித்தல் குறிகளாலும் நிறைந்த ஒரு வட்டதைப் போலிருக்கிறது. இவை ஒன்றுக்கொன்று கற்பனையான சுவர்களால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இது அந்த வட்டத்தின் நடுவில் கட்டப்பட்டிருக்கிறது.

நமது உள்மனதின் நினைவுப் பதிவுக்குள் நாம் அனுப்பும் ஒவ்வொரு சிந்தனையும், அங்கே சிக்கலை உண்டாக்குகின்றன என்று இந்தப் பேராசிரியர் போதித்தார். அவை இறுதியில் சரீரப்பிரகாரமான உபாதைகளை உண்டாக்குகின்றன. இது நாம் நமது சிக்கல்களுக்குத் தீர்வுகாண வேண்டும் என்று நமது உள்மனது வெளிமனதுக்கு அனுப்பும் எச்சரிக்கை அடையாளங்களாக இருக்கின்றன.

பிறகு அவர் ஆலோசகர்களாக ஆக விரும்புகிறவர்களுக்கு இந்தச் சிக்கலை எப்படி அகற்றுவது என்பது பற்றிய அறிவுரையைக் கொடுத்தார். அவர்கள் யாருக்கு ஆலோசனை கூறுகிறார்களோ அவர்கள் மனதில் இவ்வாறு சிக்கல்களை உண்டாக்கும் சிந்தனைகளைப் பிரிக்கும் கற்பனையான சுவற்றை முதலில் கவனமாக அகற்ற வேண்டும் என்று அவர் கூறினார். சமயப்பிரகாரமான மக்களைக் குறித்த வரையில் இது அதிகமாகக் காணப்படுகிறது; ஏனென்றால் அவர்கள் அளவுக்கு அதிகமான நேர்மையின் தகுதிநிலையை உண்டாக்கிக்கொண்டு, அதைத்

தங்கள் அன்றாட வாழ்க்கையில் எட்டமுடியாமல் சிக்கல்களை அதிகரித்துக்கொள்கிறார்கள் என்று அவர் சுட்டிக்காட்டினார். இவ்வாறு நன்னெறிப்பிரகாரமான தகுதிநிலைகளைப் போதிக்கிறவர்கள் மக்களை மனோதத்துவரீதியாக நோயாளிகளாகவே ஆக்குகிறார்கள் என்று அவர் முடிவாகக் கூறினார்.

தேவனுடைய வார்த்தை சத்தியமானது என்றும், நாம் சத்தியத்துக்காகத் தேவனுடைய வார்த்தையில் தேட வேண்டும் என்றும் இயேசுவானவர் போதித்தார். மேலும், அவ்வாறு சத்தியத்தை நாம் தேவனுடைய வார்த்தையிலிருந்து கண்டுபிடிக்கும்போது, அதை நமது அன்றாட வாழ்க்கையில் வாழ்ந்துகாட்டும்படியான ஒப்படைப்பையும் கொண்டிருக்க வேண்டும் (யோவான் 17:17; 7:17; 13:17). நமது ஆண்டவரின் இந்த விளக்கப் போதனை தேவனுடைய வார்த்தையைக் குறித்த எனது அணுகுமுறையை முற்றிலுமாக மாற்றியிருக்கிறது. இதுவே தேவனுடைய வார்த்தை, தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தை என்பதை நிரூபிப்பதற்கான வழி என்பதை நான் கண்டுகொண்டேன், நீங்களும் கண்டுகொள்வீர்கள்.

தனது வார்த்தை நுரைபொங்காத திராட்சரசம் என்றும் இயேசுவானவர் போதித்திருக்கிறார். அவருடைய போதனையின் திராட்சரசத்தைப் பழைய துருத்திகளில் ஊற்றிவைக்கும்போது, அது நுரைக்கும்போது விரிந்து துருத்தியில் அழுத்தத்தை உண்டாக்குகிறது. இந்த அழுத்தத்துக்கு ஏற்றபடி துருத்தி விரிந்துகொடுக்காவிட்டால், துருத்தி வெடித்துக் கிழிந்துபோகும். இதனால் திராட்சரசம் வெளியே சிந்தி வீணாகிப்போகும் (லூக்கா 5:37, 38).

தமது வார்த்தையைக் கேட்பவர்கள் அவர் போதிக்கும் சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து, அதன்படி வாழும்படியான ஒப்படைப்பைக் கொண்டிராவிட்டால், அவருடைய வார்த்தை அவர்களுடைய சிந்தையை அழித்துப்போடும் என்றே இயேசுவானவர் எச்சரித்தார். நான் இயேசுவானவரின் இந்த உவமையை அந்த மனோதத்துவப் பேராசிரியரோடு பகிர்ந்துகொண்டேன். ‘‘இயேசுவானவர் அந்த உவமையில் என்ன போதித்தார் என்பதை நீங்கள் உங்கள் சபை மக்களுக்குச் சொல்லுகிறீர்களா?’’ என்று அவர் கேட்டார். நாங்கள் நிச்சயமாக அப்படிச் சொல்லுகிறோம் என்று நான் அவரிடம் கூறினேன். நான் ஐம்பது வருடங்களாக இதைப் பற்றிச் சபையாருக்குப் போதித்து வருவதுமட்டுமின்றி, தேவனுடைய வார்த்தையைப் போதிப்பவர்கள் மக்களை மனநோயாளிகளாக ஆக்குகிறார்கள் என்று நம்பும் மனோதத்துவ அறிஞர்களோடும்கூட இதைப் பகிர்ந்துகொண்டிருக்கிறேன்.

1949 ஆம் ஆண்டிலிருந்து தேவனுடைய வார்த்தையில் சத்தியங்களைக் கண்டு அவைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலமாக, நான் வேதாகமம்

முற்றிலும் உண்மையானது என்ற முடிவுக்கு வந்தேன். என்றாலும் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களும் உண்டு, கண்டுபிடிக்கப்பட்ட சத்தியங்களும் உண்டு. ஆலோசகர்களும், நீதிபதிகளும், மருத்துவர்களும் தங்கள் பணியில் சந்திப்பவர்களின் வாழ்க்கையிலுள்ள சத்தியத்தைக் கண்டறியும்போது, தாங்கள் கண்டறிந்திருப்பதை வேதாகமம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறது என்பதையும் கண்டுகொள்வார்கள். வேதாகமமே அதைப்பற்றி இன்னும் சிறப்பாகச் சொல்லுகிறது என்பதையும் அவர்கள் கண்டுகொள்வார்கள். வேதாகமம் ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கிறபடியால், அது உண்மையானது என்று நம்மால் கூற முடியும். நாம் வேதாகமத்தில் கண்டுபிடிக்கும் சத்தியம் உண்மையானது என்கிறபடியால் வேதாகமம் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது என்றும் நம்மால் கூற முடியும்.

சுருக்கம் மற்றும் தனிப்பட்ட செயல்படுத்துதல்

வேதாகமத்தில் இயேசுவானவராலும் பவுலினாலும் மற்றவர்களாலும் கொடுக்கப்பட்டுள்ள இந்தப் போதனையை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளுவதற்காகவே மனோதத்துவத்திலிருந்து இந்த எடுத்துக்காட்டை நான் உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். ரோமருக்குப் பவுல் எழுதிய இந்த நிருபத்தை நீங்கள் வாசிக்கும்போது, உங்கள் வாழ்க்கையை ஒரு வட்டத்தைப் போலச் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இந்த வட்டம் கூட்டல் குறிகளால் மட்டும் நிரப்பப்பட்டிருக்கிறது என்று நினைத்துப் பாருங்கள். நாம் வெளிச்சத்தினாலும் சந்தோஷத்தினாலும் நிரப்பப்பட்ட வாழ்க்கையை வாழ வேண்டுமானால், ஒருமுகப்பட்ட சிந்தனையை உடையவர்களாயிருக்க வேண்டும். அது பவுல் இந்த நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களின் மூலம் போதிப்பதற்கும் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

இப்போது அந்த வட்டத்தில் கூட்டல் குறிகளோடுகூடக் கழித்தல் குறிகளும் காணப்படுவதையும், அவை நடுவில் ஒரு கோட்டினால் பிரிக்கப்பட்டிருப்பதையும் கற்பனைசெய்து பாருங்கள். கூட்டல் குறிகள் தேவனுடைய வார்த்தையை அல்லது தேவனுடைய பிரமாணத்தைக் குறிக்கின்றன. அதாவது, தேவனுடைய வார்த்தையின் போதனையின் அடிப்படையில், சரியான வாழ்க்கைக்கான ஏவுதல் பெற்ற தகுதிநிலைகளாக நீங்கள் நம்புகிறவைகளை இந்தக் கூட்டல் குறிகள் காட்டுகின்றன. கழித்தல் குறிகள் உங்கள் நடத்தைக்கு அடையாளங்களாக இருக்கின்றன. கூட்டல் குறிகள் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிற அளவுக்கு உங்களால் செய்ய முடியவில்லை என்பதற்கு இந்தக் கழித்தல் குறிகள் அடையாளங்களாக இருக்கின்றன.

இந்த நிருபத்தின் ஏழாம் அதிகாரத்தில் பரிசேயனுக்குப் பரிசேயனாகிய பவுல் அப்போஸ்தலனின் நேர்மையான அறிக்கை

இந்தப் பிரிக்கப்பட்ட வட்டத்தைப்போல இருக்கிறது. தான் பிரிக்கப்பட்ட சிந்தையை, அல்லது ஆவிக்குரிய இரட்டைப் பார்வையைப் பெற்றிருந்த படியினால்தான், பவுல் தன்னைத்தானே ‘‘நிர்ப்பந்தமான மனுஷன்’’ என்று அழைத்துக்கொள்கிறார்.

நோய்க்கான காரணம் மனதில் அல்லது ஆத்துமாவில் (கிரேக்கத்தில் *சைக்கி*) இருக்குமானால் அது சரீரத்தில் (கிரேக்கத்தில் *சோமா*) கவலைகளால் ஏற்படும் நோயாக வருகிறது. குற்ற உணர்வு இதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. விசுவாசிகள் தேவனால் கூறப்பட்ட தகுதிநிலைக்கு (தேவனுடைய பிரமாணம்) ஏற்றபடி தங்களால் வாழ முடியவில்லை என்று உணரும்போது அது அவர்களுக்குள் குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

மிகவும் பரிசுத்தமாக வாழ்ந்த ஒருவரைத் தேவன் ‘‘தம்முடைய இருதயத்துக்கு ஏற்ற மனிதன்’’ என்று குறிப்பிட்டிருக்கிறார் (1 சாமுவேல் 13:14; அப். 13:22). மோசேயைத் தவிர மற்ற அனைத்து மனிதர்களையும் விட இவரே ஆராதிப்பது என்றால் என்ன, நாம் எப்படி ஆராதிப்பது என்பதைக் குறித்து அதிகமாகச் சொல்லியிருக்கிறார். என்றாலும் தேவனுடைய வார்த்தை முழுச் சத்தியத்தையும் நமக்கு எடுத்துச் சொல்லுகிறது; அவர் தீவிரமான பாவங்களில் ஈடுபட்டவராக இருக்கிறார். அவர் விபசாரம், நம்பிக்கைத் துரோகம், கொலைபாதகம் போன்ற பாவங்களில் ஈடுபட்டது மட்டுமின்றி, அவைகளை மறைக்கவும் முயன்றார். தாவீதின் வாழ்க்கையில் அது மிகவும் துன்பகரமான வருடமாக இருந்தது.

அவருடைய பயங்கரமான குற்ற உணர்வு எவ்வாறு அவரைச் சரீரப்பிரகாரமாகவும், உணர்வுரீதியாகவும், ஆவிக்குரியபிரகாரமாகவும் பாதித்தது என்பதை அவருடைய சொந்த வார்த்தைகளே வெளிப்படுத்து கின்றன. ‘‘*நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டு போயிற்று. நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்*’’ (சங். 32:3–5).

தாவீதின் இந்த வார்த்தைகள் பவுலின் வார்த்தைகளுக்கு இணையாக இருக்கின்றன. பவுலின் இந்த அறிக்கைக்கு இணையாக ஒரு பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டை அவை கொடுக்கின்றன. இந்தப் பயபக்தியுள்ள மனிதர்களின் நேர்மையான அறிக்கை நமக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. பவுல் தன்னைத்தானே ‘‘நிர்ப்பந்தமான மனிதன்’’ என்று குறிப்பிடுகிறார்.

இப்போது வெறும் கழித்தல் குறிகளை மட்டுமே கொண்ட ஒரு வட்டத்தைக் கற்பனைசெய்து பாருங்கள். இது வெளிச்சமே இராத, அதாவது, தேவனுடைய வார்த்தை அல்லது பிரமாணத்திலிருந்து எந்தப் போதனையையும் பெற்றிராத ஒருவருக்கு அடையாளமாக இருக்கிறது. இயேசுவானவர் இவர்களை வெளிச்சத்தைப் பெறாதவர்கள் என்றும், பாவத்தைக் குறித்த அறிவில்லாதவர்கள் என்றும் குறிப்பிடுகிறார் (யோவான் 9:40, 41; 15:22). பாவம் என்பது நாம் பெற்றுக்கொண்ட வெளிச்சத்துக்கு ஏற்றவகையில் வாழாதிருப்பது அல்லது அப்படி வாழ்வதைப் புறக்கணிப்பது என்பதே இயேசுவானவரின் போதனையாகும்.

இந்த நிருபத்தின் துவக்கத்திலுள்ள வசனங்கள் இப்படிப்பட்ட மனிதர்கள் இருக்கிறார்களா என்று கேட்கும்படி நமக்கு அறைகூவல் விடுக்கின்றன (1:20). என்றாலும், அப்படியொருவர் இருப்பாரானால் அவருக்கு எந்தப் பாவமோ அல்லது குற்ற உணர்வோ இருக்காது. அவர் வயிற்றுப் புண், ஒற்றைத் தலைவலி அல்லது குடல்புண் ஆகியவைகளால் பாதிக்கப்பட மாட்டார்.

நீங்கள் ரோமர் ஆறாம் அதிகாரத்தை வாசிக்கும்போது, வட்டத்தில் வெறும் கழித்தல் குறிகளை மட்டுமே கொண்ட, பாவகரமான சிந்தை கொண்ட மனிதனைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். இந்த மனிதனுக்கு நன்னெறித் தகுதிநிலை எதுவும் இராதபடியால், அவன் கெட்டவன் என்று கூற முடியாது. இன்று சிலர் இதை ‘‘ஒழுக்கஞ்சாராதது’’ (Amoral) என்று குறிப்பிடுகிறார்கள்; அதாவது எது சரியானது எது தவறானது என்று ஒழுக்கம் சார்ந்த தகுதிநிலை எதுவும் கிடையாது என்பது அவர்களுடைய எண்ணமாகும். ஆனால் தேவனுடைய பிரமாணத்தை விசுவாசிப்பவர்கள் எது சரி எது தவறு என்பது பற்றிய நன்னெறிப்பிரகாரமான தகுதிநிலை இருக்கிறது என்று நம்புகிறார்கள்.

இந்த நிருபத்தின் ஆறாவது அதிகாரத்தைப் பவுல் எழுதும்போது, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, தேவனுடைய கிருபையைப் பெற்று, தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பவர்கள் **ஒருபோதும்** வெறும் கழித்தல் குறிகளைக் கொண்ட சித்திரத்தினால் சித்தரிக்கப் படக்கூடாது என்று அழுத்தமாக வலியுறுத்துகிறார். அதாவது, பாவம் நம்மீது முழுமையான ஆளுகை கொண்டிருக்கக் கூடாது!

பவுலின் இந்த நேர்மையான அறிக்கையை நீங்கள் வாசிக்கும்போது, வட்டத்தின் நடுவில் ஒரு கோட்டினால் பிரிக்கப்பட்டு கூட்டல் குறிகளையும் கழித்தல் குறிகளையும் கொண்ட ஒரு வட்டத்தைக் கற்பனைசெய்து பாருங்கள். ஏழாம் அதிகாரத்தில் நாம் சந்திக்கும் பவுல் இப்படிப்பட்டவராகவே இருந்தார். அவர் தன்னை ‘‘நிர்ப்பந்தமான

மனுஷன்'' என்று அழைத்துக்கொள்கிறார் (ரோமர் 7:24). இப்படிப்பட்ட மனிதனைக் குறித்து இயேசுவானவர், தாவீது, எலியா, யோவான், யாக்கோபு அனைவருமே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நிருபத்தின் எட்டாம் அதிகாரத்தை நீங்கள் வாசிக்கும்போது வெறும் கூட்டல் குறிகளை மட்டுமே கொண்ட ஒரு வட்டத்தைக் கற்பனை செய்து பாருங்கள். இது ஒரே சிந்தைக்கும், வெளிச்சத்தினால் நிரப்பப்பட்ட வாழ்க்கைக்கும், இயேசுவானவரால் போதிக்கப்பட்ட சந்தோஷத்துக்கும் அடையாளமாக இருக்கிறது. இது தாவீதினாலும், அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளாலும் தேடப்பட்ட செயல் படுத்துதலாகவும் கீழ்ப்படிதலாகவும் இருக்கிறது. இது பவுலினால் விவரிக்கப்பட்ட மூன்றாம் ஆவிக்குரிய பிரமாணத்தைச் செயல்படுத்து தலாகவும் இருக்கிறது. இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிக்கு தேவனுடைய பிரமாணத்துக்குக் கீழ்ப்படியவும், பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தை மேற்கொள்ளவும் பலத்தை அளிக்கிறது.

சிந்தையின் போக்கு பற்றிய பிரமாணம் நாம் பவுல் அப்போஸ்தல னின் மூன்றாவது ஆவிக்குரிய பிரமாணத்தைச் செயல்படுத்தத் தெரிந்து கொள்ளுவதாகும். மனோதத்துவ நிபுணர்களால் இருமனமுள்ளவர் களையும், துன்பத்திலுள்ளவர்களையும் சரிசெய்ய முடியாதிருக்கலாம். ஆனால் பவுலோ பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தைக் கிறிஸ்துவினால் மேற்கொள்ளும் வழியைக் கூறுகிறார்.

இந்த வசனங்களை மறுபடியுமாக வாசித்து, தேவ ஆவியானவரின் பலப்படுத்துதல் இல்லாமல் நம்மால் பாவத்துக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெற முடியாது என்று பவுல் அழுத்தமாகக் கூறும் வசனங்களைக் கவனியுங்கள். நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிரா விட்டால், கிறிஸ்துவுக்கும் தேவனுக்கும் சொந்தமானவர்களாக இருப்பதில்லை. ஆனால் நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமாகி, ஆவியான வரைப் பெற்றிருப்போமானால், நமது அழியக்கூடிய சரீரத்துக்கு அவர் ஜீவனைக் கொடுப்பார் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கிறோம்:

''*தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப் பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர்*

உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்'' (ரோமர் 8:9–11).

தனது நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களைப் பற்றித் தான் எழுதியுள்ளதை அவர் இவ்வாறு தொகுத்துக் கூறுகிறார்: ''*ஆகையால், சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்*'' (வச. 12–13).

தனிப்பட்ட செயல்படுத்துதல்: நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள்?

வட்டங்களின் உருவகத்தைக் கொண்டு நான் போதித்தது இந்த நிருபத்தின் ஆறாம், ஏழாம் மற்றும் எட்டாம் அதிகாரத்தின் முதல் பதின்மூன்று வசனங்களின் செய்தியின் சாராம்சமாக இருக்கிறது. இதில் எந்த வட்டத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்? பவுல் ஆறாம் அதிகாரத்தில் போதிக்கும் சத்தியத்தை வெளிப்படுத்தும் வட்டத்தில் இருக்கிறீர்களா? உங்கள் சிந்தையின் போக்கில் எந்தக் கூட்டல் குறிகளுமே இல்லையா? அப்படியானால், பவுல் இங்கே அழகாகவும் நேர்த்தியாகவும் ஒழுங்கு ரீதியாகவும் போதிக்கும் சுவிசேஷத்தை நீங்கள் விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிவது அவசியமாக இருக்கிறது.

நீங்கள் கூட்டல் குறிகளும் கழித்தல் குறிகளும் உள்ள வட்டத்தில் இருக்கிறீர்களா? அப்படியானால் வெறும் கூட்டல் குறிகள் மட்டுமே உள்ள வட்டத்துக்கு நீங்கள் செல்ல வேண்டியிருக்கிறது. அதாவது, நீங்கள் ''நிர்ப்பந்தமான மனிதனாக'' இராமல், இந்த நிருபத்தின் ஏழாம் அதிகாரத்திலிருந்து எட்டாம் அதிகாரத்துக்கு அனுபவரீதியாக நகர்ந்து சென்று, உங்கள் நிர்ப்பந்தமான நிலையிலிருந்து விடுபட வேண்டும்.

அத்தியாயம் நான்கு

''முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்கள்''

(8:14–39)

இந்த எட்டாம் அதிகாரத்தின் எஞ்சிய பகுதியை நீங்கள் வாசிக்கும் போது, தேவன் எல்லாரிலும் இல்லை என்று பவுல் அறிவிப்பதைக் கவனியுங்கள். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, விசுவாசத்தின் மூலம் தேவனுடைய கிருபையைப் பெற்றிருக்கிறவர்களில் மட்டுமே அவர் இருக்கிறார். தமக்குக் கீழ்ப்படிகிறவர்களில் மட்டுமே தேவன் இருக்கிறார். அவர் எல்லாருக்குமாக இல்லை. அவர் தம்மை நேசித்துத் தமது நோக்கத்திற்காக அழைக்கப்பட்டிருப்பவர்களுக்காக மட்டுமே இருக்கிறார். தேவன் நமக்குள்ளும், நமக்காகவும், நம்மோடும் இருப்பா ரானால், உலகத்திலும் மேலுலகத்திலும் எக்காலத்திலும் எந்தச் சக்தியும் நம்மைத் தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்கமுடியாது என்று பவுல் முடிவாகக் கூறுகிறார் – அவர் நம்மிலும், நமக்காகவும், நம்மூலமாகவும் செய்யச் சித்தம் கொண்டுள்ளதையும் எவராலும் தடுக்க முடியாது.

ரோமர் நிருபத்தின் எட்டாம் அதிகாரத்தின் இந்தக் கடைசி இருபத்தைந்து வசனங்களும் வேதாகமத்திலுள்ள மேன்மையான வசனங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது உலகத்தின் மிக உயரமான சிகரத்துக்கும் மற்ற மலைகளுக்கும் உள்ள வித்தியாசத்தைப் போன்று மற்ற வசனங்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது.

அப்போஸ்தலன் தனது நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களையும் கூறி முடித்துவிட்டார். என்றாலும், நீதிமானாக்கப்பட்ட பாவிகள் எவ்வாறு சரியான வாழ்க்கை வாழ முடியும் என்று ஐந்தாம் அதிகாரத்தில் அவர் துவங்கிய விவாதத்தை எட்டாம் அதிகாரத்தின் இறுதிவரையிலும் கொண்டுசெல்லுகிறார். இறுதியில் நாம் கிறிஸ்துவில் முற்றும் ஜெயங் கொண்டவர்களாக ஆக முடியும் என்று அவர் அறிவிக்கிறார். தேவனே ஆதாரமாகவும், நமது வல்லமையாகவும் இருக்கிறபடியால் நாம் முற்றும் ஜெயங்கொண்டவர்களாக ஆக முடியும் என்று அறிவிக்கிறார்.

ஐந்தாம் அதிகாரத்தின் இரண்டாம் வசனத்தில் நாம் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம் என்று கூறிய பிறகு, நான்கு வெற்றியாளர்களின் உருவகத்தைப் பவுல் கொடுத்தார். கிறிஸ்துவிலும் கிருபையின் மூலமாகவும் நாம் எவ்வாறு ஆளுகை செய்ய வேண்டும் என்பதை அது நமக்குக் காட்டியது (5:17). பாவத்தையும் அதன் பின் விளைவுகளையும் மேற்கொள்ளுவது பற்றிய கருப்பொருள் ஆறாம், ஏழாம் மற்றும் எட்டாம் அதிகாரத்தின் முதல் பதின்மூன்று வசனங்களிலும் தொடர்கிறது. நான்கு வெற்றியாளர்களைப் பற்றிய உருவகத்தின்மூலம் தான் கொடுத்த அதே செய்தியை அவர் தனது நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களின் மூலமாகவும் தெளிவாகவும் துணிவாகவும் கொடுக்கிறார்.

என்றாலும், விசுவாசிகளின் ஆவிக்குரிய வெற்றியைக் குறித்த இந்த அதிகாரங்களில் மற்றொரு மேன்மையான கருப்பொருளும் அறிமுகம்செய்யப்படுகிறது. அது ராஜரீகமான வெற்றிகொள்ளும் தேவனுடைய குறுக்கீட்டைப் பற்றியதாகும்; அவர் நம்மிலும், நம்மூலமாகவும், நமக்காகவும் போரில் வெற்றிசிறக்கிறார். இந்த மேன்மையான கருப்பொருளை அறிமுகம்செய்வதற்கு முன்பாகப் பவுல், நிருபத்தை வாசிப்பவர்களின் ஆவிக்குரிய தனித்துவத்தைக் குறித்த அறைகூவலை விடுக்கிறார்: ''*தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல, மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்*'' (ரோமர் 8:9–11).

''நீங்கள் மாம்சத்தில் இருக்கிறீர்களா அல்லது ஆவியில் இருக்கிறீர்களா?'' என்று பவுல் இங்கே கேள்வியெழுப்புகிறார். பவுலைப் பொருத்த வரையில் இரண்டு காரியங்களே செய்ய முடிகிறவைகளாக உள்ளன. பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசம்பண்ணுகிறபடியால் நீங்கள் ஆவிக்குரிய நபராக இருக்க வேண்டும். அல்லது பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசம்பண்ணாதபடியால் நீங்கள் ஜென்மசுபாவமுள்ள மனிதனாக, ஆவிக்குரியரீதியல்லாத மனிதனாக இருக்க வேண்டும். ஆவியானவர் உங்களுக்குள் வாசம்பண்ணாவிட்டால், நீங்கள் ஆவிக்குரியபிரகாரமாக இருக்கவில்லை. எழுதப்பட்டுள்ள எதுவும் உங்களுக்குப் பொருத்தமாக இருக்காது. ஆனால் பரிசுத்த ஆவியானவர்

உங்களுக்குள் வாசம்பண்ணுவாரானால், இயேசுவானவரை மரித்தோரிலிருந்து எழுப்பிய தேவன் அழியும் உங்கள் சரீரத்துக்கு ஜீவனைக் கொடுப்பார். இது மரணத்துக்குப் பின்வரும் வாழ்வைக் குறிக்கவில்லை; ஏனென்றால் அவர் நமது சரீரத்தை அழிவுக்குள்ளாகும் சரீரம் என்று குறிப்பிடுகிறார். நாம் இங்கே சிறிதுகாலம் மட்டுமே இருக்கப் போகிறோம். நாம் ஒரு அடக்க ஆராதனைக்குப் போகும்போது நமது அழியும் தன்மையைக் குறித்த உணர்வைப் பெறுகிறோம்; ஏனென்றால் நாமும் ஒருநாளில் மரிக்கப் போகிறோம்.

இந்த ஆவிக்குரியபிரகாரமான தனித்துவம் குறித்த கேள்விக்குப் பிறகு அவர் ''நீங்கள் தேவனுடைய புத்திரரா?'' என்ற கேள்வியை எழுப்புகிறார். தனிப்பட்ட ஆவிக்குரிய தனித்துவத்தையும் தேவனுடைய புத்திரராக இருப்பதையும் இணைத்து அவர் தொடர்ந்து இவ்வாறு எழுதுகிறார்: ''*மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு, அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்*'' (வச. 14–17).

தேவன் அனைத்து மானிடருக்கும் பிதாவாக இருக்கிறபடியால், நாம் அனைவரும் சகோதர சகோதரிகளாக இருக்கிறோம் என்பது பிரபலமான ஒரு போதனையாகும். கிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்குத் தேவனுடைய பிள்ளைகளாகும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று யோவான் சுவிசேஷம் தெளிவாகப் போதிக்கிறது.

இயேசுவானவர் இந்த உலகத்தில் வந்தபோது, விசுவாசத்தின் மூலம் அவருக்குச் செவிசாய்த்தவர்கள் மறுபடியுமாகப் பிறந்திருக்கிறார்கள் என்றும், தங்களைத் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைத்துக் கொள்ளும் அதிகாரத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்றும் யோவான் போதிக்கிறார் (யோவான் 1:12, 13). அனைத்து மானிடரும் ஏற்கெனவே தேவனுடைய பிள்ளைகளாக இருப்பார்களானால், இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையும் மரணமும் தேவையில்லாததாக ஆகிவிட்டிருக்குமே.

வேதாகமம் ''புத்திரர்கள்'' என்று ஆண்பாலில் அழைக்கும்போது அது பெண்களையும்கூடக் குறிக்கும் பொதுவான அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவில் ஆணென்றும் பெண்ணென்றுமில்லை என்று பவுல் கூறியதற்கு அர்த்தம் இதுவேயாகும் (கலா. 3:28). கிறிஸ்துவில் நாம் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம்.

தான் சிறையில் இருந்தபோது, பிலிப்பிய சபையிலிருந்து தனக்கு உதவிப் பொருள்களைக் கொண்டுவந்த ஒரு முதியவனைக் குறித்துப் பவுல் எழுதும்போது அவர் உறவுகளின் அளவிலுள்ள வேறுபாட்டைக் காட்டியிருக்கிறார் (பிலி. 2:25–30). அவர் அந்த முதியவனைத் தனது சகோதரன், உடன்வேலையாள், உங்கள் ஸ்தானாபதி, என் குறைச்சலுக்கு உதவிசெய்தவன் என்று குறிப்பிட்டிருக்கிறார். அவன் தன்னைத் ''தேவனுடைய பிள்ளை'' என்று அழைத்துக்கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுள்ள விசுவாசியாக இருந்தபடியால் பவுல் அவனைத் தனது சகோதரன் என்று குறிப்பிட்டார். அவன் பவுலோடுகூடக் கிறிஸ்துவுக்காகவும் சுவிசேஷத்துக்காகவும் தனது வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தபடியால் அவனை உடன்வேலையாள் என்று அழைத்தார். மற்றவைகளுக்குரிய அர்த்தங்கள் தெளிவாக இருக்கின்றன.

எவருக்குள் ஆவியானவர் வாசம்பண்ணுகிறாரோ அவர்களே கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்று பவுல் தெளிவாகவும் கொள்கைரீதியாகவும் அறிவிக்கிறார். பிறகு அவர் அந்தத் தனிப்பட்ட ஆவிக்குரிய தனித்துவத்தையும் ''தேவனுடைய புத்திரராக'' இருப்பதையும் இணைத்துக் கூறுகிறார்: ''*மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.*'' பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணும்போது நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாக இருக்கிறோம். நாம் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும்போது தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார்.

பிறகு அவர் கலாத்தியருக்குத் தான் கூறிய சத்தியத்துக்கு இணையான சத்தியத்தை இங்கேயும் கொடுக்கிறார். நாம் தேவனுடைய புத்திரர் என்று ஆவியானவர் நமது ஆவியில் சாட்சி கூறும்போது நாம் தேவனை ''அப்பா, பிதாவே!'' என்று அழைக்கிறோம் என்று அவர் போதிக்கிறார் (கலா. 4:6). ''அப்பா'' என்பது அரபிய மொழியிலும் தகப்பனாரைக் குறிக்கும் சொல்லாகும். இது தனிப்பட்டதும் நெருக்கமானதுமான ஆவிக்குரிய அனுபவத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

நான் இளம் போதகனாக இருந்தபோது, எனக்கு ஆலோசனை கூறி வழிநடத்தியவரிடம் ''தன் பாவத்தை அறிக்கையிடும் ஒரு விசுவாசி

இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறாமல் இருக்கும்போது நீங்கள் அவருக்கு எப்படி அந்த நிச்சயத்தைக் கொடுப்பீர்கள்?'' என்று கேட்டேன். ''எவருக்கும் உன்னால் இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுக்க முடியாது. அது பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாகும்'' என்று அவர் பதிலளித்தார். நம்மால் வசனங்களைப் பகிர்ந்துகொள்ள முடியும், விசுவாசம் மற்றும் இரட்சிப்புக் கான நிரூபணங்களைத் தேட முடியும், ஆனால் நிச்சயத்தைக் கொடுக்க முடியாது என்று அவர் கூறினார். நாம் சில கேள்விகளைக் கேட்டு, இரட்சிப்புக்கான நிரூபணத்தைக் காணும்போது, ஆதரவையும் ஊக்கத்தையும், உறுதிப்பாட்டையும் கொடுக்க முடியும். ஆனால் இறுதியில் பரிசுத்த ஆவியானவரே அவர்களுடைய ஆவியில் சாட்சிகொடுத்து அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்ற நிச்சயத்தைக் கொடுக்கிறார்.

பவுலின் அடுத்த வசனத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால் அக்காலத்திய ரோமக் கலாச்சாரத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். தனது பிள்ளைகள் பதினான்காம் வயதை எட்டும்போதே ஒரு தகப்பனார் அவர்களைத் தனது புத்திரர்களாகக் கருதுவது ரோமாபுரியின் வழக்கமாக இருந்தது. அவர்கள் அந்த வயதை எட்டும் போது, ஒரு நீதிமன்றத்தில் அவர்களைத் தனது புத்திரர்களாகச் சட்டரீதியாக சுவிகாரம் எடுத்துக்கொண்டு, தனக்குரிய யாவும் அவர்களுக்குச் சொந்தமானவை என்று அறிவிக்கிறார்.

இந்த உருவகத்தையே பவுல் இங்கே பயன்படுத்துகிறார். நாம் நமது ஆவிக்குரிய புதிய பிறப்பினால் தேவனுடைய குடும்பத்தில் பிறந்திருக் கிறோம். என்றாலும் தேவனுடைய கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை நாம் பெறுகிறபடியால் இதற்கும் மேலான உரிமையைப் பெறுகிறோம்: ''*நாம் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே*'' (ரோமர் 8:16–17). தேவனுடைய அன்பான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடுகூட நாம் அவருடைய பிதாவிடமிருந்து எல்லாவற்றையும் சுதந்தரமாகப் பெறுகிறோம். இது மிகப் பெரிய சிலாக்கியமாக இருந்தாலும், இதற்காக நாம் கிரயம்கொடுக்க வேண்டியிருக்கிறது. நாம் கிறிஸ்துவோடுகூட அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்கெடுக்கிறோம் என்பதை நினைவுகூருங்கள்.

இப்போது பவுல் ஆறாம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் அவரோடுகூடப் பங்குபெற வேண்டும் என்று தான் போதித்ததை இந்த உலகத்தில் கிறிஸ்துவுக்காகப் பாடுபடுவதோடு இணைக்கிறார். இவ்வாறு அவர் வெற்றியைக் குறித்த தனது துதிப்

பாடலைத் துவங்குகிறார். நாம் கிறிஸ்துவோடுகூடப் பாடுபடு வோமானால், வரவிருக்கும் வாழ்வில் அவரோடுகூட மகிமைப்படுத்தப் படுவோம் என்று அவர் அறிவிக்கிறார்:

''*கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும். ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப் படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டி ருக்கிறது*'' (வச. 17–19).

பவுல் இப்போது பாவத்தின்மீதான நீதிமானாக்கப்பட்ட பாவியின் ஆவிக்குரிய வெற்றியைக் குறித்த தனது விளக்கத்தில் இரண்டு காரியங்களைச் செய்கிறார். முதலாவதாக, அவர் ஆவிக்குரிய வெற்றி மற்றும் வளர்ச்சியைப் பாடுகளோடு தொடர்புபடுத்திக் காண்பிக்கிறார். பிறகு அவர் இந்தப் போதனையில் மேன்மையான பரிமாணத்தை எட்டுகிறார்: நித்தியத்தில் ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய வெற்றியைக் குறித்த தனது போதனையைத் துவக்குகிறார். அடுத்த பரிமாணத்தில் விசுவாசியின் இறுதியான ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் ஜெயத்தைக் குறித்துப் பார்ப்பதற்கு முன்பாக, இந்த வாழ்க்கையில் ஆவிக்குரிய வளர்ச்சியோடும் வெற்றியோடும் பாடுகள் எவ்வாறு தொடர்புகொண் டிருக்கின்றன என்பதைக் குறித்த அவருடைய போதனையைப் பார்ப்போம்.

தமது மக்கள் பாடுபடுவதையோ, நோய்வாய்ப்படுவதையோ, ஏழைகளாக இருப்பதையோ அல்லது கஷ்டங்களைப் பெறுவதையோ தேவன் விரும்புவதில்லை என்று பலர் தவறாகப் போதிக்கிறார்கள். ஆனால் வேதாகமம் இப்படிப் போதிக்கவில்லை. இந்தச் சத்தியத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பாடுகளோடு தொடர்பிருக்கிறது என்பதை உணரக்கூடிய அளவில் நீங்கள் நீண்ட காலமாக விசுவாசியாக இருந்திருக்கிறீர்களா? நாம் திராட்சச் செடியாகிய இயேசுவானவரோடு ஒரு கொடியாக இணைக்கப்பட்டிருக்கும்போது, நாம் அதிகமாகக் கனி கொடுக்கும்படியாகப் பிதாவானவர் நம்மை வெட்டிச் சரிப்படுத்துகிறார் என்று இயேசுவானவர் போதித்திருக்கிறார் (யோவான் 15:2). இந்தப் பின்னணியில் நமது பெரும்பாலான பாடுகள் நமது வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கவில்லை; ஆனால் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கின்றன என்பதை நம்மால் கண்டுகொள்ள முடியும்.

இப்படிப்பட்ட பாடுகளுக்குப் பவுல் அப்போஸ்தலனே சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார். அவர் அடிக்கடி சிறையில் அடைக்கப்

பட்டது அங்கிருந்து அவர் ஐந்து நிருபங்களை எழுதுவதற்கு அவருக்கு உதவியாக இருந்தது. அந்த நாட்களில் அவர் வெளியே இருந்திருப்பாரானால், பிரசங்கிப்பது மற்றும் போதிப்பதின்மூலம் அவர் கனிகொடுக்கும் ஊழியம் செய்திருக்கலாம். ஆனால் தேவனே இன்னுமதிகமான கனிகளை எதிர்பார்த்தபடியால், பவுல் அந்த நாட்களைச் சிறையில் கழிக்க வேண்டியிருந்தது. இப்போது இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் சிறையில் எழுதப்பட்ட அவருடைய நிருபங்கள் இலட்சக்கணக்கானவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தி ஆசீர்வாதத்தைக் கொடுத்துவருகின்றன.

இந்தப் பகுதி பாடுகளைப் பற்றிய பவுலின் சொந்த அனுபவத்தையும் எடுத்துக் கூறுகிறது. பவுலின் தனிப்பட்ட பாடுகளின் பயங்கரம் இந்த வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது:

''*நான்அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன்* (இது இப்போதும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நிலவும் 'பிரம்படித்' தண்டனைக்கு ஒத்த ரோமத் தண்டனை வழக்கமாகும். இந்தப் பிரம்புகள் சவுக்குகளை விட மோசமானவை; ஏனென்றால் இவை தசையின் திசுக்களைக் கிழித்து சேதமுண்டாக்கும், எலும்புகளைக் கூட முறித்துவிடும்) *ஒருதரம் கல்லெறியுண்டேன்* (அப். 14), *மூன்று தரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்* (அப். 27, 28)... *பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேக முறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்*'' (2 கொரி. 11:23–27).

பவுல் ஏன் ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் வெற்றியைப் பாடுகளோடு தொடர்புபடுத்துகிறார் என்பதை உங்களால் காண முடிகிறதா? தேவன் நம்மைப் புதிய சிருஷ்டிகளாக ஆக்குவதற்குப் பயன்படுத்தும் பல உபகரணங்களில் பாடுகளும் ஒன்றாக இருக்கிறது. இப்போது நீங்கள் ஆவிக்குரியபிரகாரமாக வளர்ச்சிபெறுவதற்குத் தேவன் பாடுகளைப் பயன்படுத்த நீங்கள் அனுமதிக்கிறீர்களா? உங்கள் சொந்த ஆவிக்குரிய விசுவாச அறிக்கையில் இவைகளைக் குறித்து உங்களால் கூற முடியுமா? உங்கள் கவலைகள் வீணாகிப் போகாமலிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

நாம் அனைவரும் தேவனுடைய கையின் கிரியைகளாக இருக்கிறோம் என்று பவுல் மற்றொரு நிருபத்தில் குறிப்பிட்டிருக்கிறார். எனக்குத் தெரிந்த ஒருவர் தான் ஒரு கட்டிடத்தைக் கட்டிமுடித்தவுடன்

மற்றவர்களை அழைத்து ''தேவ கிருபையினால், இது என் கையின் கிரியையாக இருக்கிறது'' என்று அந்தக் கட்டிடத்தைச் சுற்றிக்காட்டுவார். தேவன் நம் ஒவ்வொருவரையும் சுட்டிக்காட்டி ''இவன் என்னுடைய செய்கையாயிருக்கிறான்'' என்று கூற விரும்புகிறார் என்று பவுல் கூறுகிறார் (எபே. 2:10).

ஒரு போதகர் தான் திருமணம்செய்துவைத்த தம்பதியர் தேனிலவுக்குச் சென்றிருக்கும்போது, அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று, அவர்களுடைய வீட்டு வாசல் கதவில் ''எச்சரிக்கை: தேவன் கிரியைசெய்கிறார்'' என்று எழுதப்பட்ட அட்டையைத் தொங்க விடுவார். இந்தத் தம்பதியர் ஒருவர் மற்றவரோடு பொறுமையாக இருந்து தேவன் தங்கள் வாழ்க்கையில் செயல்படுகிறார் என்பதை உணர வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாகும். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் இது நினைவுபடுத்தப்பட வேண்டும்.

இந்த வாழ்க்கையோடு இது முடிந்துவிடுவதில்லை. தேவன் நம்மில் துவக்கிய கிரியையை நமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகும் நித்தியத்துக்குமாக நாம் பரிபூரணமாகும்படி தொடர்ந்து செய்துவருவார் (பிலி. 1:6).

நான் ஒருமுறை நியூயார்க் நகரைச் சேர்ந்த ஒரு போதகரைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அவர் மனக்கிலேசம் கொண்டிருந்தார். அவரால் தனது பிரசங்கத்தைக்கூடத் தயாரிக்க முடியவில்லை. அவர் வெளியே சென்று உலாவிவரும்படி தீர்மானித்தார். தனது மனக்கிலேசத்தில் மனம் போனபடி நடந்துசென்ற அவர் கட்டுமானப் பணி நடைபெறும் ஒரு இடத்துக்குச் சென்றார். அங்கே நியூயார்க் நகரத்தின் மிகப் பெரிய பேராலயத்தின் சீரமைப்புப் பணி நடந்துகொண்டிருந்தது. இந்தப் பெரிய பேராலயத்தின் அழகையும் பழமையையும் பாதுகாக்கும்படி அதைச் சீரமைத்துக்கொண்டிருந்தார்கள்.

மனக்கிலேசம் கொண்டிருந்த போதகர் அங்கே பணிபுரிபவர்களை வெறித்துப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தார். பல நிமிடங்கள் கழித்தே அவர் ஒரு சிற்ப ஆசாரி ஒரு பெரிய சிலுவை வடிவான கல்லைச் செதுக்கிக்கொண்டிருப்பதைக் கவனித்தார். அப்போது அந்தச் சிற்பி போதகர் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்தான். போதகர் அவனிடம் ''நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். அந்தச் சிற்பி பேராலயத்தின் கோபுரத்தில் ஒரு இடைவெளி இருப்பதைச் சுட்டிக்காட்டினான். ''அதோ அங்கே ஒரு இடைவெளி இருப்பது தெரிகிறது அல்லவா? அந்த இடத்தில் இதைப் பொருத்தும்படியாக நான் இதைச் செதுக்கிக்கொண்டிருக்கிறேன்'' என்று அவன் பதிலளித்தான்.

அந்த இடத்தைவிட்டுத் திரும்பும்போது போதகர் ''நன்றி ஆண்டவரே, இதுதான் நான் கேட்கத் தேவையான காரியமாக இருந்தது'' என்று கூறினார். தன்னை மனக்கிலேசம் கொள்ளும்படி தூண்டிய பிரச்சினைகளும் அழுத்தங்களும் தேவன் தன்னைச் செதுக்கும் காரியங்களே என்றும் மேலான இடத்தில் தன்னைப் பொருத்தும்படியாக அவர் இதைச் செய்கிறார் என்றும் அவர் உணர்ந்துகொண்டார்.

இங்கேயே இப்போதே நாம் அவருடைய ஸ்தானாபதிகளாக இருக்கும்படியாக தேவன் நம்மைத் தமது குமாரர்களாகவும் குமாரத்தி களாகவும் ஆக்குவதற்குத் தீவிரமான ஒப்படைப்புக்கொண்டிருக்கிறார் என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார். நாம் நமது முழுமையான மீட்பையும் பாவத்தின்மீதான முழுமையான வெற்றியையும் அனுபவிக்கப் போகும் நித்திய நிலைக்காகவும் அவர் நம்மை வடிவமைத்துக்கொண்டிருக்கிறார். பவுல் இந்த வார்த்தைகளில் நமது தற்போதைய பாடுகளையும் வருங்கால ஆவிக்குரிய வளர்ச்சியையும் தொடர்புபடுத்திக் காண்பிக்கிறார்: ''*ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது*'' (ரோமர் 8:18–19).

இரண்டு பரிமாணங்களில் வாழ்க்கை

தும்பிப் பூச்சி (dragon fly) பறப்பதை நீங்கள் கவனித்திருக் கிறீர்களா? அது தனது இரட்டைச் சிறகுகளைக் கொண்டு ஒரு மலரிலிருந்து இன்னொரு மலருக்குப் பறந்துசெல்கிறது. இந்த இரட்டைச் சிறகுகளைப் பயன்படுத்தி தும்பியால் ஹெலிகாப்டரைப் போல ஒரே இடத்தில் அப்படியே நிற்க முடியும். நாள்முழுவதும்கூட அதால் அப்படி நிற்க முடியும். இந்த அற்புதமான தும்பிகள் தங்கள் இரட்டைச் சிறகுகளைப் பயன்படுத்தி வளிவியக்க விதிப்படி அழகாகப் பறந்துசெல்லுகின்றன.

இந்தத் தும்பிப் பூச்சிகள் தங்கள் வாழ்க்கையில் முதல் நான்கு ஆண்டுகளை நீர் மட்டத்துக்குக் கீழேயே கழிக்கின்றன. நீருக்கு அடியே வாழும் இந்தப் பூச்சிகள் இரட்டைச் சுவாச மண்டலங்களைக் கொண்டி ருக்கின்றன. நீருக்கு அடியே வாழும் பிற உயிரினங்களைப் போலவே இந்தப் பூச்சிகள் தனது நீண்ட குறுகலான சரீரத்தின் மூலமாக நீரை உறிந்தெடுத்து அதிலிருந்து பிராண வாயுவைப் பெறுகின்றன. ஆனால் இதே பூச்சிகள் பின்னாளில் வானத்தில் பறக்கும்போது பிராண வாயுவைக் காற்றிலிருந்து பெறுவதற்கு வசதியாக இன்னொரு சுவாச மன்டலத்தையும் பெற்றிருக்கின்றன.

இந்தத் தும்பி நீரில் இருக்க வேண்டிய காலகட்டம் முடிவுறும்போது, அது நீரைவிட்டு மேலே எழும்பி, தனது சிறகுகளைச் சூரிய வெப்பத்தில் உலர்த்தி, தனது அற்புதமான இரட்டைச் சிறகுகளை விரித்துப் பறந்து தனது வாழ்க்கையின் இரண்டாவது பரிமாணத்துக்குள் நுழைகிறது. இவ்வாறு இந்தத் தும்பி இரண்டு பிரமாணங்களில் வாழும்படி தேவன் அதை வடிவமைத்திருக்கிறார்.

நாமும்கூடத் தும்பியைப் போலவே இரண்டு பரிமாணங்களைப் பெற்றிருக்கிறோம். நாம் இரண்டு பரிமாணங்களில் இருக்கும்படி தேவனால் வடிவமைக்கப்பட்டிருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். இங்கே உலகத்தில் வாழும்படி தேவன் நமக்கு உலகப் பிரகாரமான சரீரத்தைக் கொடுத்திருக்கிறார். பிறகு பரலோகத்தில் நமது இரண்டாவது பரிமாணத்தில் நித்தியமாக இருக்கும்படி தேவன் நமக்கு ஒரு பரலோக சரீரத்தைக் கொடுக்கப் போகிறார்.

நாம் ஒரு தும்பியைக் குறுக்கே அறுத்துப் பார்ப்போமானால், இரண்டு வாழ்க்கை முறையைக் காண முடியும் என்பதுபோல, நாம் மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசியைக் ''குறுக்கே அறுத்துப் பார்ப்போ மானால்'' இரட்டை வாழ்க்கை முறையை நம்மால் காண முடியும். கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றும் ஒவ்வொருவரும் உலகப் பிரகாரமான சரீரம் அல்லது வாழ்க்கைமுறையைப் பெற்றிருக்கிறார்கள்; அது விசுவாசி தனது வாழ்க்கையின் முதல் பரிமாணத்தை வாழ விசுவாசிக்கு உதவுகிறது. அதே வேளையில் ஒவ்வொரு விசுவாசியும் இரண்டாவது பரிமாணத்தையும் பெற்றிருக்கிறார். பவுல் இதைப் ''புதுச் சிருஷ்டி'' அல்லது ''புதிய மனிதன்'' அல்லது ''உள்ளான மனுஷன்'' என்று அழைக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் அற்புதக் கிரியையாகிய இந்தப் புதுச் சிருஷ்டி தேவன் அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுக்கப் போகும் பரலோக சரீரத்துக்கு முன்னோடியாக இருக்கிறது. தேவன் கொடுக்கப்போகும் அந்தப் புதிய சரீரம் பரலோகத்தில் நித்தியமாக ஜீவிக்கும்படி நம்மை ஆயத்தமாக்கும்.

தும்பி தனது இரண்டாவது பரிமாணத்தில் வளிவியக்க அற்புதமாக இருக்கிறது. விசுவாசிகள் இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் உயிரோடு எழுப்பப்படும்போது, தேவன் நமக்கு வாழ்க்கையின் இரண்டாவது நித்திய பரிமாணத்துக்கு ஏற்ற சரீரத்தைக் கொடுக்கப் போகிறார். அது எப்படியிருக்கும் என்பதை உங்களால் கற்பனைசெய்து பார்க்க முடிகிறதா?

யோவான் அப்போஸ்தலன் தனது முதலாவது நிருபத்தில், விசுவாசிகளாகிய நாம் யாராக, எப்படியிருக்கிறோம் என்றும், யாராக

எப்படியிருக்கப் போகிறோம் என்றும் விவரிக்கிறார். நாம் எப்படி யிருக்கப் போகிறோம் என்பது வெளிப்படுத்தப்படவில்லை என்றும், அது நிச்சயமாக நமது கற்பனைக்கும் எட்டாத ஒன்றாக இருக்குமென்றும் அவர் கூறுகிறார். ஏனென்றால் நாம் பரலோகத்தில் இப்போது உயிர்த் தெழுந்து ஜீவிக்கும் கிறிஸ்துவைப் போலிருப்போம் (1 யோவான் 3:1, 2).

நாம் எப்படியிருப்போம் என்ற இந்த மகிமையான அற்புதத்தைக் காண முழு உலகமும் ஆவலாகக் காத்திருக்கிறது என்று பவுல் எழுதி யிருக்கிறார். முதிர்வயதை அடைவது பரிசைப் பெறுவதல்ல. நமது சரீரம் முதிர்ந்து வரும்போது இது விசுவாசியின் ''உலகப் பிரகாரமான ஆடை'' மட்டுமே என்பதை நினைவில் வைத்திருங்கள். பூமியில் நமது வாழ்க்கையை நாம் வாழும்படியாக தேவன் நமக்கு ஒரு சரீரத்தைக் கொடுக்கிறார். நாம் தேவனுடைய பிள்ளைகளாக அவருக்குரியதில் சேரும்போது அவர் பரலோகத்தில் நாம் வாழும்படியாக நமக்கு ஒரு ஆவிக்குரிய சரீரத்தைக் கொடுப்பார்.

அடுத்துவரும் சில வசனங்கள் தேவன் படைத்துக் காத்துவரும் இந்த உலகத்தைப் பற்றிய சில சுவாரசியமான சத்தியங்களை வெளிப்படுத்து கின்றன. தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமே சிருஷ்டிகருடைய தொடர்ந்த சிருஷ்டிப்பின் கிரியை தேவைப்படுகிறது என்று சொல்ல முடியாது. ''*அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத் தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக் குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது*'' (ரோமர் 8:20–22).

இந்த வசனங்களுக்கு அர்த்தம் காண வேண்டுமானால், மானிடக் குடும்பத்தின் வீழ்ச்சியை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆதியாகமத் தின் முதல் அதிகாரங்களிலும் இந்த நிருபத்தின் முதல் அதிகாரத்திலும் அந்த விவரங்களை நாம் காணலாம். மனிதன் பாவம்செய்யும்போது, அவன் தொடும் எதுவும் அந்தப் பாவத்தின் தாக்கத்தைப் பெறுகிறது. இன்றும் மானிடப் பாவத்தின் பின்விளைவுகளைச் சுற்றுச்சூழலில் நம்மால் காண முடியும். மானிடரின் பேராசை நாம் குடிக்கும் தண்ணீரையும், சுவாசிக்கும் காற்றையும், உண்ணும் உணவையும் மாசுபடுத்துகிறது.

சிருஷ்டிப்பானது மனிதனின் வீழ்ச்சியால் அதிகமான தாக்கத்தைப் பெற்றது. மனிதனின் மீட்பு நிறைவுபெறும்போது இந்த உலகமும்

இறுதியானதும் முழுமையானதுமான மீட்பைப் பெறும் என்று இந்த வசனங்கள் கூறுகின்றன. நாம் மீட்கப்படும்போது, புதுச் சிருஷ்டிகளாக ஆகிறோம். நமது புதிய வாழ்வு துவங்கும்படியாக நமது பழைய மனிதன் மரிக்க வேண்டும் என்று பவுல் இந்த நிருபத்தில் போதித்திருக்கிறார். ஒரு நாளில் தேவன் ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிப்பார் என்றும், அதில் நீதி ஆளுகைசெய்யும் என்றும் வேதாகமம் போதிக்கிறது (2 பேதுரு 3:13).

தற்போதைய சிருஷ்டி இந்தப் புதிய சிருஷ்டிக்காக ஏகமாகத் தவித்து வேதனைப்படுகிறது என்று பவுல் கூறுகிறார். ''*அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலனைப் பெற்ற நாமுங்கூட நமது சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளேயே தவிக்கிறோம். அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப் படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்ப வேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிற தற்குப் பொறுமையோடே காத்திருப்போம்*'' (ரோமர் 8:23–25).

இப்போது பவுல் நமது இறுதியானதும் முழுமையானதுமான மீட்பைப் பற்றிய கருப்பொருளுக்குத் திரும்புகிறார். நமது சரீரங்கள் மீட்கப்படும் என்ற நம்பிக்கையில் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று அவர் எழுதுகிறார். நாம் நித்திய நிலைக்குள் உயிரோடு எழுப்பப் படும் வரையில் நாம் முழுமையாகவும் இறுதியாகவும் மீட்கப்பட மாட்டோம் என்ற உணர்வில் அவர் கூறுகிறார். பயபக்தியுள்ள மக்களும் மரித்துப் போகிறார்கள், அவர்கள் ஏன் சரீரப்பிரகாரமாகக் குணமாக்கப் படவில்லை என்று நாம் வியக்கிறோம்.

இதற்கான பதிலை ஓரளவு நாம் இந்த வசனங்களில் பார்க்க முடியும். அவர்கள் நித்தியத்துக்குள்ளாகக் கொண்டுசெல்லப்படும் வரையில் அவர்களுடைய மீட்பு முழுமையும் நிறைவும் அடைவதில்லை என்பது போல, அவர்கள் பரலோகத்துக்கு உயிரோடு எழுப்பப்படும் வரையில் அவர்களுடைய குணமாகுதலும் முழுமையடைவதில்லை. பரலோகத்தில் அவர்கள் வாழும்படியாகத் தேவன் அவர்களுக்கு ஆவிக்குரிய சரீரத்தைக் கொடுக்கும்போது, அவர்களுடைய குணமாகுதலும் மீட்பும் நிறைவடையும்.

எப்படியாயினும் ஜெபியுங்கள்!

''*அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்ன தென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.*

ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல்செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்'' (வச. 26–27).

பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்திலிருந்து நான் மேற்கோளாகக் காட்டிய வசனங்களிலும், ரோமர் எட்டாம் அதிகாரத்தில் இருபத்து மூன்று முதல் இருபத்தைந்து வரையிலான வசனங்களிலும் வலியுறுத்தப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். நமது சரீரங்களும் சிருஷ்டியும் இந்த இறுதியானதும் முழுமையானதுமான மீட்புக்காக ஏங்குகின்றன என்று பவுல் கூறுகிறார். இதைத் தொடர்ந்து அவர் இரண்டாயிரம் ஆண்டுகளாக எண்ணற்ற விசுவாசிகளுக்கு ஆறுதலைக் கொடுத்துவரும் பகுதியை எழுதுகிறார். தேவன் நமது தவிப்புக்குச் செவிசாய்த்து, அருமையான வகையில் நமது பலவீனத்துக்கு ஊழியம் செய்கிறார் என்று அவர் கூறுகிறார்.

ஜெபத்தின் ஆவிக்குரிய ஒழுங்கை அறிந்திருக்கும் எந்த விசுவாசியும் நாம் தேவனுடைய சித்தத்துக்கு ஏற்றபடி ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார். என்றாலும், பெரும்பாலும் நாம் தேவனிடம் வந்து நமது விண்ணப்பங்களை அவரிடம் ஏறெடுக்கும்போது, அவருடைய சித்தம் என்பதை அறியாதவர்களாக இருக்கிறோம். இதனால் நம்மில் சிலர் ஜெபத்தில் இந்த விண்ணப்பங்களை ஏறெடுப்பது கிடையாது.

என்றாலும் நாம் ஜெபிக்க வேண்டும் என்றே பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். நாம் நமது ஜெபத்தில் ஏறெடுக்கும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் குறித்த தேவனுடைய சித்தத்தைப் பரிசுத்த ஆவியானவர் அறிந்திருக்கிறார். என்றாலும் நாம் ஜெபிக்கும் போது, நமக்கோ அல்லது நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவருக்கோ தேவனுடைய சித்தமில்லாத ஒன்றை நாம் வேண்டிக் கொண்டாலும், பரிசுத்த ஆவியானவர் நமக்காகத் தேவனுடைய சித்தப்படி பரிந்துரை ஜெபத்தை ஏறெடுக்கிறார்! அதாவது, நாம் தவறான காரியத்துக்காக ஜெபிக்கும்போது, நமது இருதயம் தேவனுக்கு முன்பாகச் சரியாக இருக்குமானால், பரிசுத்த ஆவியானவர் நமக்காகப் பரிந்து பேசுவார், தேவன் நமக்காக அல்லது நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களுக்காக என்ன சித்தம் கொண்டிருக்கிறாரோ அதைச் செய்வார்.

இந்த வாக்குத்தத்தத்துக்காகவும், தேவன் என்னுடைய ஜெபங்கள் சிலவற்றுக்குப் பதிலளிக்காமல் இருப்பதற்காகவும் நான் அவருக்கு நன்றிசெலுத்துகிறேன். இப்போது நான் முதிர்ச்சியடைந்து, கிறிஸ்துவோடுள்ள என் நடக்கையில் வளர்ச்சிபெற்றிருக்கிறபடியால், கடந்துபோன நாட்களைத் திரும்பிப் பார்த்து ''நான் தவறான காரியங்களுக்காக

வேண்டிக்கொண்டபோது, பரிசுத்த ஆவியானவர் எனக்காக வேண்டிக் கொண்டதற்காக நன்றி'' என்று என்னால் கூற முடிகிறது.

பழைய ஏற்பாட்டில், பயபக்தியுள்ள மனிதர் பலர் தாங்கள் மரிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டிருக்கிறார்கள். மோசே, எலியா, யோபு, யோனா இவர்கள் மனக்கிலேசத்தில் தேவன் தங்களைக் கொன்றுபோடும்படி ஜெபித்திருக்கிறார்கள். இந்தத் தேவமனிதர்கள் சரீரப்பிரகாரமாகவும், மனோரீதியாகவும், உணர்வுரீதியாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் சோர்வடைந்துபோயிருந்தபடியால் தவறான காரியங்களுக்காகத் தேவனிடம் ஜெபித்தார்கள். ஆனால் அவர்களுடைய இருதயம் தேவனுக்கு முன்பாக நேர்மையாக இருந்தபடியால், அன்பான பரம பிதா அவர்களுடைய ஜெபத்துக்குச் செவிசாய்த்து அவர்களைக் கொன்றுபோடவில்லை.

மோசேயை மனக்கிலேசத்துக்குள் தள்ளிய பாரத்தைத் தாங்க அவர் எழுபது உதவியாளர்களை மோசேக்குக் கொடுத்தார். ஏழே நாட்களில் கடந்துசெல்லக் கூடிய வனாந்தரத்தில் மோசே இஸ்ரவேலரை நாற்பது ஆண்டுகள் வழிநடத்திச் செல்ல வேண்டியிருந்தது. அவர் முழுமையாகச் சோர்வடைந்திருந்தார் (எண். 11:10–17).

நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்திருக்கவில்லை என்பது நாம் ஜெபிப்பதைத் தடுக்கக்கூடாது என்பதே இந்தப் பகுதியில் காணப்படும் சத்தியமாகும். எப்படியாயினும் நாம் ஜெபிக்க வேண்டும். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டிக்கொள்வார். தேவன் தமது சித்தத்துக்கு ஏற்ற நல்ல காரியத்தை நமக்குக் கொடுப்பார்.

எலியா தீர்க்கதரிசி ''ஆலயத்தைப் பராமரிப்பதைப்'' புறக்கணித்தார் என்றே நான் கூறுவேன். நமது சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக இருக்கிறது என்று பவுல் போதிக்கிறார். நமது சரீரப்பிரகாரமான, ஆவிக்குரிய பிரகாரமான, மனோரீதியான மற்றும் உணர்வுரீதியான வாழ்க்கைகள் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கிறபடியால், நமது வாழ்க்கையின் சரீரப்பிரகாரமான பரிமாணம் புறக்கணிக்கப்படும்போது, சரீரப்பிரகாரமான சோர்வு ஆவிக்குரிய, மனோரீதியான மற்றம் உணர்வுரீதியான சோர்வுகளையும் கொண்டுவரக் கூடும். தன்னைக் கொன்றுபோடும்படி எலியா தேவனிடம் வேண்டிக்கொண்டபோது, அவர் எலியா உறங்கும்படி செய்கிறார், பிறகு எலியாவை எழுப்பி உணவளித்து, மறுபடியுமாக உறங்கும்படி செய்கிறார். இந்த உணவும் இளைப்பாறுதலும் அவருக்குப் பலமளித்தன. தன்னைக் கொன்றுபோடும்படி வேண்டிக்கொண்ட இந்தத் தீர்க்கதரிசி பலப்படுத்தப்பட்ட பின்பு நாற்பது நாட்கள் தொடர்ந்து பிரயாணம்செய்தார் என்று நாம் வாசிக்கிறோம்! அவர் தேவனிடம் தவறான காரியத்துக்காக வேண்டிக்

கொண்டாலும், தேவன் அவருக்குச் சரியான காரியத்தைக் கொடுத்தார் (1 இரா. 19:1–8).

யோபுவின் சொற்பொழிவுகளை நீங்கள் கவனமாக வாசிப்பீர் களானால், அவனுடைய பாடுகள் அவனும் மோசேயையும் எலியா வையும் போல மரணத்தை வேண்டும் நிலைக்குக் கொண்டுவந்தன என்பதைக் காண முடியும் (யோபு 3:11; 10:18). யோனா தீர்க்கதரிசி யும்கூட இவர்களைப் போலத் தான் மரணமடைந்தால் நலமாயிருக்கும் என்று ஜெபித்தான் (யோனா 4). தேவன் யோபையோ அல்லது யோனாவையோ கொன்றுபோடவில்லை. அவர்கள் இப்படி ஜெபித்த போது அவர்களின் பெயரில் இருக்கும் இரண்டு புத்தகங்களின் சாராம்சத்தை அவர் கொடுத்தார். தேவனுடைய மக்களும்கூடத் தங்கள் சரியான பார்வையை இழந்து, தவறாக ஜெபிக்கும் நிலைக்கு வரக் கூடும் என்பதற்கு இந்த நான்கு பேரும் எடுத்துக்காட்டுகளாக இருக்கிறார்கள். ஜெபத்தைக் குறித்த பவுலின் இந்தப் போதனைக்கும் இவர்கள் எடுத்துக் காட்டுகளாக இருக்கிறார்கள்.

இந்த இரண்டு வசனங்களும் (ரோமர் 8:26, 27) அடுத்துவரும் வசனத்துக்குப் பின்னணியாக இருக்கின்றன. இந்த வசனம் அது எழுதப் பட்டதிலிருந்து எண்ணற்ற கிறிஸ்துவின் சீஷர்களுக்கு அதிகமான ஆறுதலையும் தூண்டுதலையும் கொடுத்துவருகிறது. அதேவேளையில் பவுலின் ஏவுதல் பெற்ற வார்த்தைகளில் இந்த வசனமே அதிகமாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதாகவும் இருக்கிறது. ''*அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்*'' (வச. 28).

சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்ற வாக்குத்தத்தத்தை இந்த வசனம் கொண்டிருக்கிறது. ''சகலமும்'' என்ற சொல்லைப் பவுல் அடிக்கடி பயன்படுத்தினாலும், அவர் அதைச் சாதாரணமாகவோ அலட்சியமாகவோ ஒருபோதும் பயன்படுத்தவில்லை. போரினாலோ அல்லது தீங்குகளினாலோ விசுவாசிகளும் அவிசுவாசிகளும் துன்பப் படும்போது இந்த வார்த்தைகளை வெறித்துப் பார்த்திருக்கிறார்கள். சோகமான காரியங்கள் தற்செயலாக நிகழ்ந்த குழப்பம் என்றோ, அல்லது நாம் தவறான இடத்தில் தவறான வேளையில் இருந்துவிட்டோம் என்றோதான் நாம் நினைக்கும்படி செய்கின்றன. ஆனால் பவுல் சகலமும் என்று கூறுகிறாரே? இந்தச் சோகமான காரியமும் அதில் ஒன்றா? என்ற கேள்விகள் அவர்களுக்குள் தோன்றுகின்றன.

இந்த வசனத்தை எளிதாகப் புரிந்துகொள்ளும்படி அதற்கு இப்படி யொரு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது: ''அன்றியும், அவருடைய

தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு நடைபெறுபவை அனைத்தும் நன்மைக்கான ஒழுங்கில் பொருந்திவருகின்றன.'' இந்த வசனத்தைக் குறித்து இரண்டு பார்வைகளை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இந்த வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தம் நிபந்தனைக்கு உட்பட்ட தாக இருக்கிறது என்பது முதலாவது காரியமாகும். மக்களின் வாழ்க்கை யோடும் அவர்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளோடும் இந்த வாக்குத் தத்ததைப் பொருத்திக் காண்பதற்கு முன்பாக இரண்டு முக்கியமான காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்:

1) அவர்கள் தேவனை நேசிக்க வேண்டும்.

2) அவர்கள் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட வேண்டும்.

தேவனை நேசிப்பது என்றால் என்ன? தேவனிடம் அன்புகூருவது எளிதான காரியமல்ல என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார். அவர் நமக்கு ஒரு அறைகூவலும் விடுக்கிறார். ''*தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக் கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?*'' (1யோவான் 4:20). பவுல் கூறுவதின்படி, நாம் தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் இருக்கும்போது, நாம் அவரை நேசிப்பதைக் காட்டுகிறோம். நம்முடைய நடபப்பின்ஒவ்வொரு காரியத்தின் முன்னுரிமையும் தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக் கப்பட்டதாக இருக்கிறது என்று சொல்லப்படும் நிலையை எட்டும்போது, நாமும் மோசே, எலியா, யோபு மற்றும் யோனாவைப் போலத் தேவையான நிபந்தனைகளை நிறைவேற்றுகிறோம்; அப்போதுதான் இந்த வசனத்தை நாம் நமது வாழ்க்கையோடும், பிரச்சினைகளோடும் – அது சோகமான காரியமாக இருந்தாலும் சரி – பொருத்திக் காண முடியும்.

சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று நான் பிரசங்கிக்கும் போதெல்லாம், சோகமான காரியங்களை அனுபவித்துள்ள விசுவாசி களும் அவிசுவாசிகளும் எனது பிரசங்கத்தைக் குறித்துக் கேள்வியெழுப்புகிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், அவர்களுடைய வாழ்க்கையில் அவர்கள் உலகப்பிரகாரமான சுயநலத் துக்கு இடம்கொடுத்து, ஆவிக்குரிய பிரகாரமாக வாழாமல் உலகப் பிரகாரமாக மதிப்பீடுகளின்படி வாழ்ந்திருப்பார்களானால், அவர்கள் இந்த வசனத்தைத் தங்கள் வாழ்க்கையோடும் சோகமான பிரச்சினை களோடும் பொருத்திப் பார்க்க முன்வரக் கூடாது.

கிறிஸ்துவைப் பயபக்தியோடு பின்பற்றுகிறவரின் வாழ்க்கையில் நடைபெறும் எல்லாக் காரியத்தையும் இந்த வசனம் நன்மை என்று

அழைக்கவில்லை என்பதே இந்த வசனத்தைக் குறித்த என்னுடைய இரண்டாவது பார்வையாகும். நமக்கு நேரிடுபவைகளைக் குறித்து முற்றிலும் நன்மையானவை எதுவுமே இல்லாதிருக்கலாம். இயேசு வானவரும் பவுல் அப்போஸ்தலனும் இதைக் குறித்து உண்மைநிலையை அப்படியே எடுத்துக் கூறுகிறார்கள்.

இந்த உலகத்தில் நமக்கு உபத்திரவங்கள் உண்டு என்று இயேசு வானவர் போதித்திருக்கிறார் (யோவான் 16:33). தீயவன், கிறிஸ்து வையும் அவருக்குச் சொந்தமானவர்களையும் வெறுக்கிறபடியால் நாம் பாடுகளை அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்பதை இயேசுவும் பவுலும் அனுபவபூர்வமாக உணர்த்தியிருக்கிறார்கள். இந்த வசனத்தின் வாக்குத்தத்தம் என்னவென்றால், நாம் தகுதிபெறும்போது, தேவன் நமக்கு நடைபெறும் சகல காரியங்களையும் எடுத்து, நமது சோகமான பிரச்சினைகளில் நன்மையானது எதுவுமே இல்லாவிட்டாலும், அவைகளை நன்மைக்கான ஒழுங்கில் பொருத்துகிறார் என்பதாகும்.

இது மற்றொரு கேள்வியை எழுப்புகிறது. இங்கே யாருடைய நன்மை குறிப்பிடப்பட்டிருக்கிறது – நமது நன்மையா அல்லது தேவனுடைய நன்மையா? இந்த வாக்குத்தத்தம் எந்த நிபந்தனையைச் சார்ந்திருக்கிறதோ அதிலேயே நம்மால் இதற்குப் பதில்காண முடியும். நாம் தேவனை நேசித்து, அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட வேண்டும் என்பது நமது வாஞ்சையாக இருக்குமானால், நாம் தேவனுடைய நன்மையில் மட்டுமே ஆர்வம்கொண்டிருப்போம். நாம் ஒவ்வொரு முறை சோகமான பிரச்சினைகளை எதிர்நோக்கும்போதும் ‘‘இந்தச் சோகமான காரியம் எப்படித் தேவனுடைய நன்மை மற்றும் அவருடைய மகிமையின் ஒழுங்கில் பொருந்திவருகிறது?’’ என்றுதான் நம்மை நாமே கேட்டுக்கொள்வோம்.

பாடுபடுவதைக் குறித்துச் சங்கீதக்காரனும் இதைப்போன்றதொரு கேள்வியை எழுப்பியிருக்கிறார். ‘‘*அஸ்திபாரங்களும் நிர்மூலமாகிறதே, நீதிமான் என்ன செய்வான்?*’’ என்று அவர் எழுதியிருக்கிறார் (சங். 11:3). ஆனால் எபிரெய வல்லுநர்களின் ஆய்வின்படி எபிரெய வார்த்தைகளுக்கு அப்படியே அர்த்தம்கொள்ளுவோமானால் இந்த வசனம் இப்படியிருக்கும்: ‘‘நமது வாழ்க்கையின் அஸ்திபாரங்கள் நிர்மூலமாகும்போது, நீதியானவர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?’’

சகலமும் நன்மைக்கு ஏதுவாக முடியும் என்ற வாக்குத்தத்தத்தை நாம் உரிமைகொண்டாடுவதற்கு முன்பாக, அதில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் புரிந்துகொண்டு அவைகளை நிறைவேற்ற வேண்டும். அப்படி நாம் செய்யாதவரையில் இந்த வசனத்தை நாம் ஒருபோதும் சரியாகப் புரிந்துகொண்டு அதைப் பாராட்ட முடியாது.

தேவனுடைய அருள்

ஜெபத்தைக் குறித்த இந்த மூன்று மேன்மையான பார்வைகளுக்குப் பிறகு பவுல் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட மிகவும் அருமையான வார்த்தைகளை எழுதியிருக்கிறார். ஐந்தாம் அதிகாரத்தின் இரண்டாம் வசனத்தில் அவர் துவக்கிய கருப்பொருளையே இப்போதும் கையாளு கிறார் என்பதை நினைவில் வைத்திருங்கள். தேவனால் நீதிமானாக அறிவிக்கப்பட்ட பாவிகள் எவ்வாறு நீதியான வாழ்க்கை வாழ முடியும்? நான்கு அரசர்களும், நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களுமே அவருடைய பதிலாக இருக்கின்றன. இப்போது அவர் இந்தக் கேள்விக்குத் தனது மிக மேன்மையானதும், வலுவானதும், தூண்டுதல ளிப்பதும் விரிவானதுமான பதிலைக் கொடுக்கிறார். நாம் வெறுமனே ஜெயங்கொள்ளுகிறவர்களாக இராமல், முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாக முடியும் என்று அவர் அறிவிக்கிறார்!

நமது வெற்றி நாம் யார் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பொருத்தது அல்ல என்று பவுல் அறிவிக்கிறார். ஆவிக்குரிய வெற்றி என்பது நாம் எதைச் செய்ய முடியும், எதைச் செய்ய முடியாது என்பதைக் குறித்த காரியம் அல்ல. அது நமது விருப்பத்தையும் சார்ந்திருக்கவில்லை. ஆவிக்குரிய வெற்றியானது, தேவன் யார், அவர் விரும்புகிற காரியத்தில் அவரால் என்ன செய்ய முடியும் என்பதையே ஆதாரமாகக் கொண்டி ருக்கிறது. அவரே நமது வெற்றிக்கு மூலாதாரமாக இருக்கிறார். இப்போதும் வரவிருக்கும் உலகத்திலும் அவரே நமது வெற்றிக்குப் பின்னால் வல்லமையாக இருக்கிறார். நீதிமான் என்று அறிவிக்கப்பட்டு நீதியாக வாழும்படி பலப்படுத்தப்பட்டுள்ள நமக்கு நேரிடும் ஒவ்வொரு காரியமும் அவருடைய மகிமையையே நோக்கமாகக் கொண்டிருக் கிறது.

பவுல் அப்போஸ்தலன் இந்தப் போதனையை முடித்துவைக்கும் வேளையில் மறுபடியுமாக ‘‘சகலமும்’’ என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். ‘‘*சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்*’’ (ரோமர் 11:36). நீங்கள் இந்தப் பகுதியை வாசிப்பதற்கு முன்பாக பதினோராம் அதிகாரத்தின் இறுதி நான்கு வசனங்களையும் வாசிப்பீர்களானால், பவுல் எழுதிய அனைத்து வார்த்தைகளிலும் சிகரம் போன்ற இந்த வசனங்களை உங்களால் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

பாவிகளாகிய நம்மை நீதிமான்கள் என்று அறிவிக்கும்படியாக, தேவன் தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பும்படி தீர்மானித்தபோது, அவர் தம்மால் மட்டுமே செய்யக்கூடிய அற்புதத்தைச் செய்தார் என்று

பவுல் கூறுகிறார். நாம் நீதிமானாக்கப்பட்ட பிறகு நமது நீதியான வாழ்க்கைக்கு ஒரு வருங்காலப் பரிமாணமும் இருக்கிறது, அதுவும் அவரால் மட்டுமே செய்யக்கூடிய அற்புதத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது என்று பவுல் கூறுகிறார்.

''*தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறான வராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான் களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்*'' (வச. 29–30).

விசுவாசத்தினால் நம்மை நீதிமானாக்குவதில் தேவனுடைய அருளின் முதல் அற்புதம், தேவன் தாம் நீதிமான் என்று அறிவிக்கப் போவதை முன்னரே அறிந்திருந்ததாகும். இது தேவனுடைய பண்புகளில் ஒன்றைப் பற்றிய வாசகமாகும். தேவனுடைய முன்னறிவை நாம் ''சர்வஞானம்'' என்று அழைக்கிறோம். தேவன் அனைத்தையும் அறிந்திருக்கிறார் என்பது இதற்கு அர்த்தமாகும். அவர் முக்காலத்திலும் அனைத்தையும் அறிந்திருக்கிறார். எது நடந்தாலும் அது அவரை ஆச்சரியப்பட வைக்காது. ஆதாமில் மானிடக் குடும்பம் விழுந்தபோன போது அவர் வியப்படையவில்லை. அடுத்தபடியாக ஒரு மாற்றுத் திட்டத்தை அவர் தயாரிக்க வேண்டியிருக்கவில்லை. விழுந்துபோன மனிதன் மீட்கப்படுவது எப்போதுமே தேவனுடைய திட்டமாக இருக்கிறது.

யார்யார் நீதிமானாக்கப்படுவார்கள் என்பதை அவர் அறிந்திருப் பது, நீதிமான் என்று அறிவிக்கப்படுகிறவர்களின் சுயாதீன சித்தத்தை மீறிய செயலல்ல. தேவன் முன்குறித்தார் என்கிறபடியால் அவராகவே ஒருவரைப் பரலோகத்துக்கும் மற்றொருவரை நரகத்துக்கும் நியமித்தார் என்று அர்த்தமல்ல. இந்தப் பிரச்சினைகளை எழுப்பும் தெரிந்துகொள் ளப்படுதல் பற்றி நாம் ஒன்பதாம் அதிகாரத்துக்கு வரும்போது அறிந்து கொள்வோம். இங்கேயுள்ள போதனை தேவன் நீதிமான்களாக்கப்பட்ட பாவிகள் தமது குமாரனின் சாயலைப் பெற வேண்டுமென்று அவர்களை முன்குறித்திருக்கிறார் என்பதாகும்.

நீதிமானாக அறிவிக்கப்பட்டவர்கள் நீதியான வாழ்க்கை வாழும் போது, நீதியான வாழ்க்கை வாழ்வது என்றால் என்ன என்று அவர்கள் எப்படி அறிந்துகொள்வார்கள்? தேவன் தமது குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பியதற்கு இதுவும் ஒரு காரணமாகும். தமது குமாரன் அவரைப்போல இருக்கப்போகிறவர்களுக்கு முதற்பேறானவர் என்று

தேவன் முன்னரே தீர்மானித்திருந்தார். அவர்கள் அவருடைய சகோதரர் களைப்போல இருப்பார்கள். எனவேதான் அவர்களைச் சகோதரர் என்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை என்று நாம் வாசிக்கிறோம் (எபி. 2:11).

மூன்றாவது அற்புதம் என்னவென்றால், தேவன் எவர்களைத் தமது குமாரனின் சாயலுக்கு ஒப்பாயிருக்க வேண்டுமென்று முன்னறிந்து, முன்குறித்திருக்கிறாரோ, அவர்களை அவர் அழைத்துமிருக்கிறார். இரட்சிப்பைப் பெற்றிருப்பவர்களைப் பவுல் அடிக்கடி இப்படிக் குறிப்பிடுகிறார் என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, விசுவாசத்தினால் கிருபைக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெறுவது வெறும் அறிவுக்கடுத்த காரியமல்ல. அது உயிர்த்தெழுந்து ஜீவிக்கும் கிறிஸ்துவோடுகூட உறவைப் பெறும்படியான ''அழைப்பாகும்'' (1 கொரி. 1:9). நாம் அவருடைய குமாரனை அறிந்து, பிறகு அவரைபோலாக வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

இந்த மூன்று அற்புதங்களும் இந்த நிருபத்தின் மையமானதும் அடிப்படையானதுமான செய்திக்குப் பின்னணியாக இருக்கின்றன: தேவன் எவர்களை முன்னறிந்து, முன்குறித்து, அழைத்திருக்கிறாரோ அவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறார். பிறகு பவுல் இந்த வாழ்க்கைக்கு அப்பால் கடந்துசென்று இந்தப் பெரிய அற்புதத்தின் வருங்காலப் பரிமாணத்தை அறிவிக்கிறார். தேவன் எவரை நீதிமான் களாக்கியிருக்கிறாரோ அவர்களை மகிமைப்படுத்துகிறார். பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது, இந்த வாழ்க்கையை வாழும்படி ஒரு சரீரத்தைக் கொடுத்த தேவன் பரலோகத்தில் வாழும்படி நமக்கு ஒரு ஆவிக்குரிய பரலோக சரீரத்தைக் கொடுப்பார் என்று எழுதியிருக்கிறார்.

மேலும், நாம் நீதிமானாக்கப்பட்டு, தேவனுடைய கிருபைக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெறும்போது, மகிமைப்படுத்தப்படு தலின் அனுபவம் துவங்குகிறது என்பதையும் இந்த வசனம் காட்டுகிறது. தேவனுடைய கிருபையை நமது வாழ்க்கையை மாற்றி, நாம் புதுச் சிருஷ்டியாகும்போது, நித்தியத்துக்குமாக நாம் அனுபவிக்கப் போகும் அந்த மகிமையான நிலைக்கு நமது உள்ளான மனுஷன் முன்னோடி யாகக் காணப்படுகிறான்.

கேள்விகளும் பதில்களும்

பவுல் இப்போது ஏழு கேள்விகளை எழுப்புகிறார். அவை களுக்குரிய பதில்கள் சுவாரசியமானவையாகும். ''*இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலி ருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்*

குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளா திருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டு கிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே. உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்,

''கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாச மோசமோ, பட்டயமோ? இவைகளெல்லாவற்றிலும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக் கிறோமே'' (வச. 31–37).

பவுலின் முதலாவது கேள்வி அவருடைய மகிமையான அறிவிப்பு களுக்கு நாம் செவிசாய்க்கும்படி நமக்கு அறைகூவல் விடுக்கிறது: இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இதுவே முதலாவது கேள்வியின் சாராம்சமாகத் தோன்றுகிறது. இரண்டாவது கேள்வி பவுலின் சிந்தனையை நமக்குக் காட்டுகிறது. இந்த ஐந்து அற்புதங்களையும் அனுபவிக்கும்படி தேவன் நம்மை அழைத்திருக்கும் போது, நமது இரட்சிப்பும் இறுதியானதும் முழுமையானதுமான மீட்பும் நம்மையல்லாமல் அவரையே சார்ந்திருக்கும்போது, யார் நமக்கு விரோதமாக இருக்க முடியும்?

மூன்றாவது கேள்வி இந்த நிருபத்தின் மேன்மையான பகுதியில் ஒரு முக்கியமான கருத்துப்படிவத்தை அறிமுகம்செய்கிறது. தமது குமாரனையே நமக்காகக் கொடுக்குமளவுக்கு நம்மில் அன்புகூரும் தேவன் அவரது குமாரனும் நமது இரட்சகரும் ஆண்டவருமானவரைப் பின்பற்றுவதற்குத் தேவையான அனைத்தையும் நமக்குக் கொடுக்க மாட்டாரா? பவுல் ஏற்கெனவே, நாம் தேவனுடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறபடியால், அவருடைய ஜீவனால் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயம் என்று விவாதித்திருக்கிறார் (5:10).

இரண்டாம் அதிகாரத்தில் அவர் குறிப்பிட்டுள்ள நியாயத்தீர்ப்பின் பின்னணியில் நான்காம் கேள்வியை ஆராய்ந்து பாருங்கள். தேவன் தெரிந்துகொண்டவர்களின்மீது யார் குற்றம்சாட்ட முடியும்? தேவன் அப்படிச் செய்ய மாட்டார்; ஏனென்றால் அவரே பாவிகளாகிய நம்மை நீதிமான்களாக அறிவித்திருக்கிறார். நம்மை நீதிமானாக்க அவர் தமது

குமாரனையே பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவர் நிச்சயமாக நம்மைக் குற்றம்சாட்ட மாட்டார்.

''*ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?*'' என்ற ஐந்தாவது கேள்வியைப் பவுல் எழுப்புகிறார். இரண்டு சிந்தனைகள் இதில் சுட்டிக் காட்டப்படுகின்றன: இயேசுகிறிஸ்துவே அனைத்து நியாயத்தீர்ப்பையும் செய்ய வேண்டும் என்று தேவன் ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22). எனவே நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அவருக்கே தகுதி யிருக்கிறது. ஆனால் தாம் உலகத்தை ஆக்கினைத்தீர்ப்புள்ளாக்கும்படி அனுப்பப்படாமல், உலகத்தை இரட்சிக்கும்படியாகவே அனுப்பப் பட்டிருப்பதாக அவர் கூறியிருக்கிறார் (யோவான் 3:17). நமது மீட்புக்கான கிரயத்தை அவர் செலுத்தியிருக்கிறபடியால் அவர் நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க மாட்டார். அவர் இப்போது நமக்காகப் பரிந்துபேசியபடி தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபி. 7:25; 1 யோவான் 2:1).

தீயவனின் செயல்பாட்டைக் குறித்த மற்றொரு சிந்தனையும் இங்கே சுட்டிக்காட்டப்படுகிறது. பிசாசானவன் சகோதரர்களைக் குற்றம் சாட்டுகிறான் என்றும், இரவும் பகலும் அவன் அதைச் செய்கிறான் என்றும் கூறப்பட்டிருக்கிறது. குற்றம்சாட்டும் அவன் அழிக்கப்படும் போது, தேவனுடைய ராஜ்யம் அதிக வல்லமையோடு செழித்தோங்கும் (வெளி. 12:10, 11).

எனக்குப் பிடித்தமான அறிஞர்களில் ஒருவர் நீதிமானாக அறிவிக்கப்படுவது என்றால் ''தகுதியுள்ளவனாக அறிவிக்கப்படுவது'' என்று கூறியிருக்கிறார். நற்கிரியைகளின் மூலமாகச் சுயமதிப்பைச் சம்பாதித்துக் கொள்வதற்கு மக்கள் கடுமையாக முயற்சிசெய்கிறார்கள். தேவன் பாவிகளின் ஆக்கபூர்வமான அல்லது எதிர்மறையான செயல் களைச் சார்ந்திராமல், பாவிகளைத் தகுதியுள்ளவர்களாக அறிவிக்கிறார் என்பதே வேதாகமத்திலுள்ள இந்தத் தலைசிறந்த இறையியல் படைப்பு கூறும் செய்தியாக இருக்கிறது.

சுய மதிப்பு இல்லாத பாவிகளைத் தேவன் தகுதியுள்ளவர்களாக அறிவிக்கும்போது, தீயவன் அங்கே நின்று ''உனக்கு எந்த மதிப்புமில்லை'' என்ற எதிர்மறையான காரியத்தை அறிவிக்கிறான் என்பதையும் பவுல் சுட்டிக்காட்டுகிறார்.

நமது மதிப்பு பாதுகாப்பாக இருக்கிறது. ஏனென்றால் அது தோல்வி பெறாமல் வெற்றிபெறும் உங்கள் திறனைச் சார்ந்திருக்கவில்லை. கிறிஸ்துவின் நிபந்தனையற்ற அன்பைப்போலவே, இந்த அறிவிக்கப் பட்ட மதிப்பும் ஆக்கபூர்வமான சாதனையினால் சம்பாதிக்கப்படுவது மில்லை, எதிர்மறையான செயலினால் இழக்கப்படுவதுமில்லை.

தேவனுடைய கிருபைக்கு அர்த்தம் இதுவே. நாம் தோற்கும்போது மன்னிப்பைப் பெற முடியும் என்பதே தேவனுக்கு இரக்கத்துக்கு அர்த்தமாகும். தேவனே நீதிமானாக்குகிறவர்.

பவுலின் ஆறாவது கேள்வியும் அதற்கு அவர் கொடுக்கும் பதிலும் நம் அனைவருக்கும் ஆறுதலைக்கொடுக்கிறது. ''*கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?*'' என்ற அவருடைய ஏழாவது கேள்வி உயிர்த்தெழுந்து ஜீவிக்கும் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக்கூடிய சில சாத்தியக்கூறுகளைப் பட்டியலிடுகிறது. இவையெதுவும் நம்மைக் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டுப் பிரிக்க முடியாது என்று பவுல் கூறும்போது, அது நமக்கு ஆறுதலைத் தருகிறது.

வாழ்க்கை கடினமானதுதான்! இந்த உலகத்தினால் வெறுக்கப்படும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலுள்ள பாடுகளையும் உபத்திரவங்களையும் பற்றி இயேசுவானவரும் அப்போஸ்தலரும் உண்மையாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள் (யோவான் 16:33; அப். 14:6–22). இன்று இயேசுவானவரின் சீஷர்களால் எதிர்கொள்ளப்படும் பல பயங்கரமான சவால்களைப் பவுல் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இந்தப் பட்டியலில் துன்புறுத்தலினால் விளையும் உபத்திரவமும், பட்டயத்தினால் கொல்லப் படுதலும்கூட அடங்கியிருக்கிறது. **எதுவும் நம்மைத் தேவனுடைய அன்பைவிட்டுப் பிரிக்கமுடியாது என்கிறபடியால்,** இவை எல்லாவற் றிலேயும் நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம் என்று பவுல் முடிவாகக் கூறுகிறார்.

தாவீதின் மேய்ப்பர் சங்கீதம், கிறிஸ்துவின் இரக்கமும், நிபந்தனை யில்லாத அன்பும் நமது வாழ்நாள் முழுவதும் மட்டுமல்ல, நித்தியத்துக் கும் நம்மைவிட்டுப் பிரியாது என்று சொல்லுகிறது (சங். 23:6). இதையே அப்போஸ்தலன் தனது கருத்தில் கொண்டிருக்கலாம். அவர் தனது ஏழாவது கேள்விக்கு இவ்வாறு பதிலளிக்கிறார்: ''*மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களா னாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியா னாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்*'' (வச. 38, 39).

ஐந்தாம் அதிகாரம் இரண்டாவது வசனத்தில் தான் துவக்கிய மிக மேன்மையான பகுதியை இவ்வாறு இந்த அறிக்கையின்மூலம் பவுல் முடித்துவைக்கிறார். தேவனுக்கு விரோதியாக இருந்த ஒரு பாவி எவ்வாறு தகுதியுள்ளவனாக அறிவிக்கப்பட முடியும் என்பதை மட்டு

மின்றி, எவ்வாறு தேவனுடைய கிருபையைப் பெற்று அவன் அவரை மகிமைப்படுத்தும் வாழ்க்கை வாழ முடியும் என்பதையும் அவர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

விசுவாசத்தினால் நீதிமான் என்று அறிவிக்கப்பட்ட பாவியின் வெற்றியின் திறவுகோல் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடை.ய அன்பிலேயே இருக்கிறது. அது நம்மிடமிருந்து வருவதில்லை, தேவனிடமிருந்தும் கிறிஸ்துவினிடமிருந்துமே வருகிறது. அப்போஸ்தலனின் உறுதியான உறுதிப்பாட்டின் அடிப்படை இதுவே யாகும்.

பவுலின் இந்த மேன்மையான முடிவுரையில் உண்மையில் புதிய காரியம் எதுவுமில்லை. தான் அதுவரை போதித்ததை அவர் சுருக்கிக் கூறுகிறார். மரணம்கூட நம்மைக் கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிக்காது என்று தான் நிச்சயத்திருப்பதாகப் பவுல் கூறுகிறார். சரீரத்தை விட்டுச் செல்லுவது என்றால் ஆண்டவரோடு இருப்பது என்று அவர் கொரிந்தியருக்கு எழுதியிருக்கிறார் (2 கொரி. 5:6–8). பிலிப்பியருக்கு அவர் எழுதும்போது, கிறிஸ்து தனக்கு ஜீவன் சாவு தனக்கு ஆதாயம் என்றும், கிறிஸ்துவோடு கூட இருக்கும்படி மரிப்பதற்கும் தான் ஆயத்த மாக இருப்பதாகவும் எழுதியிருக்கிறார் (பிலி. 1:20–23). எனவே மரணம் அவரையோ அல்லது நம்மையோ கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிக்காது.

இந்த வாழ்க்கையிலும் எதுவும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்காது என்றும் அவர் நிச்சயித்திருக்கிறார். கிறிஸ்து தனக்கு ஜீவன் சாவு தனக்கு ஆதாயம் என்று பவுல் நம்பினபடியால் அவரை மரணம் எதிர்நோக்கியபோதும் பயப்படவில்லை. சுவிசேஷத்தின் நித்திய மதிப்பீடுகளை விசுவாசிக்கும் பயபக்தியுள்ள இயேசுவின் சீஷர்கள் மரணத்துக்குப் பயப்படக்கூடாது.

என்றாலும், சில விசுவாசிகள் மரணத்தைவிட வாழ்வுக்கு அதிக மாகப் பயப்படுகிறார்கள். மரணத்தைக் குறித்த பவுலின் சிந்தையை நாம் பெற்றிருப்போமானால், நாம் மரணத்தைக் குறித்துப் பயப்படக்கூடாது, ஏனென்றால் சாவு நமக்கு ஆதாயமாக இருக்கிறது. வாழ்வுக்கும் நாம் பயப்படக்கூடாது, ஏனென்றால் கிறிஸ்து நமக்கு ஜீவனாக இருக்கிறார். பவுலைப்பொருத்தவரையில் இந்த வாழ்க்கையிலோ அல்லது மரணத் திலோ எதுவும் நம்மைக் கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிக்காது.

நமது வாழ்க்கைக்கு ஒரு ஆவிக்குரிய பரிமாணமும் உண்டு என்ற உறுதியும் பவுலுக்கு இருக்கிறது. தேவதூதர்களும், அதிகாரங்களும் வல்லமைகளும் நமது வாழ்க்கையில் ஆக்கபூர்வமானதும் எதிர் மறையானதுமான தாக்கங்களை விளைவிக்கிறார்கள் என்று அவர்

கூறினார். ''*ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு*'' என்று அவர் எபேசியருக்கு எழுதியிருக்கிறார் (எபே. 6:12). இந்த ஆவிவுலக சக்திகள் எதுவுமே கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாது என்ற நிச்சயத்தை அவர் பெற்றிருந்தார்.

நமது தற்போதைய சூழ்நிலைகளிலோ அல்லது எதிர்கால சூழ்நிலைகளிலோ எதுவும் இந்த அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க முடியாது. பிறகு அவர் உயர்வையும் தாழ்வையும் குறிப்பிடுகிறார். இயேசுவானவர் உன்னதத்திற்கு ஏறியும், பூமியின் தாழ்விடங்களில் இறங்கியும் சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கி, மனிதர்களுக்கு வரங்களை அளித்து தமது அன்பைக் காட்டினார் (எபே. 4:8–10).

எபேசியருக்கு அவர் எழுதியுள்ள நிருபத்தின் கருப்பொருளும் வலியுறுத்தலும், நாம் கிறிஸ்துவில் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெறும்படியாக, உன்னதத்தில், ஆவிக்குரிய மேலான நிலையில் வாழும்படி நமக்கு அறைகூவல் விடுக்கின்றன (எபே. 1:3). நமது வாழ்க்கையில் நாம் அனுபவிக்கும் உயரங்களையும் ஆழங்களையும் கூட இது குறிப்பிடுகிறது. தனிப்பட்டரீதியான எந்த உயரமும் ஆழமும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாது.

பவுல் இறுதியாக ''வேறெந்தச் சிருஷ்டியானாலும்'' பிரிக்க முடியாது என்று அறிவிக்கிறார். இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் நாம் வேற்றுக் கிரகங்களில் வேறு சிருஷ்டிகள் இருக்கலாம் என்று கேள்விப்படுகிறோம். கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒருவர் ஒரு வேதாகமப் பேராசிரியரிடம் ''செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் எப்படி இரட்சிக்கப்படுவார்கள்?'' என்று கேட்டார். ''செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் இருப்பார்களானால், அப்போது அவர்கள் 'ஆதியிலே தேவன் வானத்தையும் செவ்வாயையும் சிருஷ்டித்தார்' என்று துவங்கும் ஒரு வேதாகமத்தைப் பெற்றிருப்பார்கள். அப்போது அந்த வேதாகமம் செவ்வாயில் வாழ்கிறவர்களுக்குத் தேவனுடைய அன்பையும் இரட்சிப்பையும் அறிவிக்கும்'' என்று அந்தப் பேராசிரியர் பதிலளித்தார்.

தான் அறியாதவாறு பிரபஞ்சத்தில் வேறு எந்தச் சிருஷ்டியாவது இருக்குமானாலும், அது தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்காது என்று பவுல் கூறுகிறார்.

தனிப்பட்ட செயல்படுத்துதல்

நாம் மதிப்பற்ற பாவிகளாக இருக்கிறோம். ஆனால் தேவனுடைய குமாரனுடைய வாழ்வு மற்றும் மரணத்தினால் நாம் தகுதியுடையவர்களாக அறிவிக்கப்பட்டிருக்கிறோம். நம்மைத் தகுதியுள்ளவர்களாக அறிவித்த தேவனை மகிமைப்படுத்தி சரியான வாழ்க்கை வாழ நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள முடியும். நீதிமானாக்கப்பட்ட பாவிகளாகிய நாம் வாழ்க்கையில் எப்படி ஆளுகைசெய்ய முடியும் என்பதை நான்கு ராஜாக்களும் காட்டுகிறார்கள். பாவத்தின் பிரமாணத்திலிருந்தும் அதன் பின்விளைவுகளிலிருந்தும் எப்படி மேலே எழும்புவது என்பதை நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களும் காட்டுகின்றன. தேவன் மதிப்பற்ற பாவிகளை முன்னறிந்து, முன்குறித்து, அவர்களை அழைத்து, நீதிமானாக்கி, மகிமைப்படுத்தி, முற்றும் ஜெயங்கொள்ளுகிறவராக ஆக்குகிறார் என்ற உன்னதமான அறிக்கையையும் நாம் பார்த்தோம்.

இந்தத் தொடர் அற்புதங்கள் உண்மையானவை என்ற நிச்சயத்தைப் பவுல் பெற்றிருந்தார். நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? நீங்கள் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டிருக்கிறீர்களா? அல்லது இப்போதும் உங்களை நொறுக்கி, உங்கள் வாயை அடைத்துப் போட்டு, உங்களுக்கு நிச்சயமாக ஒரு இரட்சகர் தேவை என்பதைச் சுட்டிக்காட்டும் தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்ள முயன்று உங்கள் சுய கிரியையின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா?

இந்த அற்புதத்துக்கு மூலாதாரமான தேவன், உங்களை நீதிமானாக அறிவித்தபோது, உங்களில் துவங்கிய கிரியையை முற்றுமுடிய நடத்தி வருவார் என்ற நிச்சயத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? அப்படியானால் இந்த இணையற்ற இறையியல் நூலின் முதல் எட்டு அதிகாரங்களில் நீங்கள் வாசித்தவைகளை விசுவாசியுங்கள். தேவனுடைய அழைப்புக்குச் செவிசாயுங்கள். விசவாசத்தினால் நீதிமானாக்கப்படுங்கள். இந்த வாழ்க்கையிலும் வரவிருக்கும் வாழ்விலும் மகிமைப்படுத்தப்படுங்கள்!

அன்பான வாசகரே, இது ரோமர் நிருபத்தைப் பற்றிய ஆய்வில் இரண்டாவது நூலாகும். முதல் நூலை நீங்கள் வாசித்திராவிட்டால், எங்களுக்கு எழுதுங்கள். அதோடுகூட இந்த ஆய்வைத் தொடரும் சிறுநூல் 31ஐயும் கேட்டுப் பெறுங்கள். நீங்கள் விசுவாசத்துக்குள் வந்திருக்கிறீர்களா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். நீங்கள் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, நீதியான வாழ்க்கை வாழத் தேவனுடைய கிருபையைப் பெற்றிருப்பீர்களானால் இந்தச் சிறு நூல் உங்களுக்கு எப்படி உதவியாக இருந்தது என்பதைப் பற்றியும் எங்களுக்குத் தெரிவியுங்கள்.